# புதிய கலாச்சாரம்

மே, 2013
ம.க.இ.க. மாத இதழ்
ரூ. 10.00



# உறவு ஒன்றுதான்!



அகதிகள் மனச்சுமை
தாங்கிடு நிலமே! - எங்கள்
தலைமுறைக் கண்ணீர்
தாங்கிடு கடலே...
எங்கள் சோகத்தின் ஆழம்
சுரந்திடு ஊற்றே!
ஈழ அகதிகள் வேலியை
முறித்திடு காற்றே...
முடங்கிய வாழ்வின்
வதைபடு வெம்மையில்
கதிரே நீயும் கருகாதே...

ஏதிலி என்பது
எங்கள் குற்றமா?
ஏன் முகாமிற்குள் அடைபட்டோம்?
நின்று பதில் சொல்!
நிலவே நீயும் நழுவாதே...
கூடு திரும்பும்
பறவைக்கூட்டம் பார்க்கும் போதெலாம்
நாடு திரும்பும் ஏக்கம்
எங்களை வாட்டும்!



சிறகின் ஆசை
வானை அளக்கும்...
சின்ன விதையின் ஆசை
மண்ணில் முளைக்கும்...
நீரின் ஆசை
நிலத்தின் தாகம் சேரும்...
வேரின் ஆசை

இலை, தழையாய் மாறும்...
எங்கள் வாழ்வின் ஆசை
என்று தாய்மண் சேரும்?

புகலிடம் என்றுதான்
பிழைத்து வந்தோம்
இது எம்மை
இகழிடம் எனத் தெரிந்திருந்தால்,
இப்படி...
இந்திய நடைபிணமாய் சாவதற்கு
ஈழப்பிணமாய் வீழ்ந்திருப்போம்...

தாழப் பறக்கும்
தட்டானுக்கும்
வாழ ஆசை...
ஈழ அகதிகள்
எங்களுக்குக் கூடாதா?
நாங்கள் குடியிருப்பது

கூரையில்...
கொன்று போடும் சவக்கிடங்கு...
எங்களைத் தகிக்க வைப்பது
கொளுத்தும் கோடை அல்ல,
குற்றவாளியாக்கி - எந்நேரமும்
எம்மீது குறுகுறுக்கும்
போலீசின் சுடுபார்வை!

அரசே சந்தேகித்தால்
யார் தருவார் வேலை?
அத்துக் கூலியாய்
அலையும் நாங்கள்
ஆறு மணிக்குள் அடைபட வேண்டுமாம்
கேம்ப்புக்குள்!
கொடிய பாம்புக்கும் உண்டோ
இப்படியொரு வாழ்நிலை!

பாம்புக் கடிக்கோ,
பாழும் நோய்க்கோ
மருத்துவம் இல்லை...
இறந்தவர் பெயரை
எழுதிப் பழகும்
எம் பிள்ளைகள்
மேற்படிப்புக்கு கல்வி உரிமையுமில்லை.

ஒரு இழவுக்குப் போகவும்
அனுமதி வாங்க
ஆயிரம் தொல்லை...
ஈழமே சுடுகாடு
எதற்குத் தனியே? என
எங்களைப் புதைக்க
போதிய இடமுமில்லை...
நாளை நாளை என்று
நாடு போக நம்பியிருந்தோம்.

அதையும் கெடுத்தது இந்தியா
என்பது அனுபவமானதனால்,
அஞ்சுகிறோம்.
ராஜபக்சேவை விடவும் கொடியவர்கள்
நடமாடும் அரசு இது.
உரிமையில்லா வாழ்வு
சாவினும் கொடியதால்,
உயிர் பற்றிக் கவலையின்றி
ஓடுகிறோம் தப்பித்து கடலுக்கு.

ஈழப்பிணங்களை வைத்து
அரசியல் வாழும்

தொடர்ச்சி 35-ம் பக்கம்...

**கலை இலக்கியம் யாவும் மக்களுக்கே!**

- புதிய கலாச்சாரம்
- மக்கள் கலை இலக்கியக் கழக மாத இதழ்
- போர் : **29**
- குரல் : **11-12**
- ஏப்ரல் - மே 2013

உள்நாடு: ரூ. 10.00
ஆண்டுச் சந்தா: ரூ. 150.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டுச் சந்தா ரூ. 750.00

*சந்தா, படைப்புகள் அனுப்பவும் தகவல்களுக்கும்*

கண்ணையன் ராமதாஸ்,
16, முல்லைநகர் வணிக வளாகம்,
2-வது நிழற்சாலை,
(15-ஆவது தெரு அருகில்),
அசோக் நகர்,
சென்னை - 600 083.

தொலைபேசி: 044-23718706
9941175876

மின் அஞ்சல் முகவரி:
pukatn@gmail.com.

அலுவலக நேரம்:
காலை 10 முதல் மாலை 5 மணி வரை

*அட்டை வடிவமைப்பு:*
ராஜன்


# மங்காத்தாவே இனி பாரதமாதா!

**ரா**ஜஸ்தான் ராயல்ஸ் அணியைச் சேர்ந்த ஸ்ரீசாந்த் உள்ளிட்ட மூன்று வீரர்கள் பல இலட்ச ரூபாய்களை சூதாட்டக்காரர்களிடம் வாங்கிக் கொண்டு 'ஸ்பாட் ஃபிக்சிங்' மோசடி செய்ததாக கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

சென்ற வருடம் பணம் வாங்கிக் கொண்டு சில வீரர்கள் ஆட்டத்தை விட்டுக் கொடுத்ததை 'இந்தியா டிவி' அம்பலப்படுத்தியிருந்தது. அவர்களெல்லாம் புது முகங்கள், மூத்த வீரர்கள் இல்லை என்ற குறையை ஸ்ரீசாந்த் போக்கி விட்டார்.

ஐபிஎல்லின் ஒரு சீசனது மதிப்பு 20,000 கோடி இருக்குமென்றால் அதன் மொத்த மதிப்பு 50,000 கோடியைத் தாண்டுகிறது. 9 அணிகளின் உரிமையாளர்களும் நாடறிந்த தரகு முதலாளிகள்.

குற்றங்களையே பாதையாக்கி ரிலையன்ஸின் சாம்ராஜ்ஜியத்தை உருவாக்கிய அம்பானியின் மும்பை இந்தியன்ஸ், ஊழியர்களின் ஊதியத்தையும் பொதுத்துறை வங்கிகளையும் கொள்ளையிட்ட மல்லையாவின் ராயல் சேலஞ்சர்ஸ், சிமெண்ட் மூட்டையில் பகற்கொள்ளையனும், ஆந்திரத்து ஒய்.எஸ்.ஆர்.ரெட்டியுடன் சேர்ந்து கொள்ளையடித்த வழக்கில் விசாரிக்கப்படுபவருமான இந்தியா சிமெண்ட்ஸ் சீனிவாசனின் சென்னை சூப்பர் கிங்ஸ், மக்கள் பணம் 25,000 கோடியை ஏப்பம் விட்டிருக்கும் சஹாரா நிறுவனத்தால் வாங்கப்பட்டிருக்கும் புனா அணி.. என ஒவ்வொரு அணி முதலாளியும் கிரிமினல்தான்.

தற்போதைய சூதாட்டத்தின் பின்னே தாவூத் இப்ராகிம் இருப்பதாகவும், அது தேசத்துக்கு ஆபத்து என்றும் இந்த விவகாரத்துக்கு முலாம் பூசப்படுகிறது. பங்குச் சந்தை, நிதிச்சந்தை தொடங்கி போதைமருந்து, மபியா வேலைகள் வரையிலான அனைத்தும் இரண்டறக் கலந்த உலக நிதிமூலதனத்தின் சூதாட்டக்களத்தில் ஐ.பி.எல் ஒரு கவர்ச்சிகரமான சூதாட்டம்.

விளையாட்டு என்ற சொல்லின் பொருளையே ரத்து செய்து அதனுடன் சேர்ந்திருந்த தேசியம் தொடர்பான ஜிகினா வேலைகளையும் உதிர்த்துவிட்டு, வீரர்களை கூலிப்படையாகவும் முதலாளிகளை அணியின் தலைவர்களாகவும் மாற்றிவிட்ட இந்த ஐ.பி.எல் இல் விளையாட்டுணர்வு என்பதற்கு கடுகளவும் இடம் கிடையாது. புரவலர்கள், தொலைக்காட்சி உரிமை, விளம்பரங்கள், நிறுவனங்களின் தூதர்கள், ஆபாச நடனங்கள் என்று ஐபிஎல் முழுவதும் பணம்தான் ஆட்சி செய்கின்றது. ஒரு சூதாட்டத்துக்குரிய விறுவிறுப்பை வழங்கும் வகையில்தான் டி20 போட்டியின் விதிகளும் உருவாக்கப்பட்டுள்ளன.

வீரர்களை விலைக்கு வாங்குவது, ஏலம் விடுவது, சிண்டிகேட் அமைப்பது உள்ளிட்டு ஐபிஎல்லின் அமைப்பு முழுவதும் மர்மங்களால் ஆனது. நாட்டுப்பற்று விளையாட்டுணர்வு ஏதும் இல்லாமல் அதிக விலை கொடுக்கும் முதலாளிக்கு தன்னை விற்றுக் கொள்ளும் ஒரு ஆட்டக்காரன், ஒரு சூதாடிக்கு தன்னை விற்றுக் கொண்டதில் என்ன ஒழுக்க கேடு வந்துவிட்டது ? நாட்டுப்பற்று, இறையாண்மை, நேர்மை, ஒழுக்கம் போன்ற எல்லா விழுமியங்களையும் பத்தாம்பசலித்தனமானவை என்றும் காலத்துக்கு ஒவ்வாதவை என்றும் கழித்துக்கட்டி வரும் மறுகாலனியாக்க சூழலில் கிரிக்கெட் வீரர்களின் ஒழுக்கம் கெட்டுவிட்டது பற்றி போலியான ஒரு அதிர்ச்சியை தெரிவிப்பதை ஒரு நகைச்சுவை என்றும் சொல்லலாம். பித்தலாட்டம் என்றும் அழைக்கலாம்.

சென்ற ஐபிஎல்லின் சூதாட்ட வர்த்தகம் 5000 கோடி ரூபாய் என்றார்கள். இந்த ஆண்டு அது இரண்டு மடங்காகியிருக்கும். இங்கிலாந்து, வளைகுடா, பாகிஸ்தான், மும்பை என்று ஒருங்கிணைத்து சூதாடும் இந்த நிறுவனங்கள் தொழில் நுட்ப புரட்சியின் உதவியோடு அதை பரவலாக கொண்டு சென்றிருக்கின்றன.

தற்போதைய செய்திகளின்படி சூதாடியவர்கள் கொலை, திருட்டு, கொள்ளை போன்றவற்றில் ஈடுபடும் செய்திகள் ஏராளம் வருகின்றன. தங்களுடைய கிரிமினல் பண்பாட்டை மக்கள் மத்தியில் இறக்கி விட்டு வெற்றி கண்ட மகிழ்ச்சியில் ஆளும் வர்க்கம் திளைக்கிறது. பல்லாயிரம் கோடி ஊழல் குற்றச்சாட்டுகளில் சிக்கியிருக்கும் சர்வகட்சி ஓட்டுப் பொறுக்கிகளும், அதிகார வர்க்கமும், அந்த ஊழல்களில் ஆதாயம் பெற்ற முதலாளிகளுக்கும் கூட இந்த விவகாரம் நிச்சயம் மகிழ்ச்சி அளித்திருக்கும். ஊழல், ஒழுக்க கேடு, கொள்ளை, சூது போன்ற தேசிய விளையாட்டுகளில் தாங்கள் மட்டும் ஈடுபடவில்லை என்ற அவர்கள் காட்ட முடியும். இதைப் பணம் கட்டி வேடிக்கை பார்த்து, கைதட்டுவதற்கு கோடிக்கணக்கில் மக்கள் இருப்பதால் இனி மங்காத்தாவே பாரதமாதா என்று அவர்கள் அறிவிக்கவும் முடியும். ●

# பாட்டில் தேசம்

**வா**ருங்கள்! ஒரு குடும்பத்தைச் சந்திப்போம். கணவன், மனைவி, இரண்டு பதின்ம வயதுக் குழந்தைகள் என்ற முத்திரை குடும்பம்.

வீட்டுக்குள் குழாயைத் திறந்தால் தண்ணீர் வருகிறது என்ற வசதி உலகில் சுமார் 50% மக்களுக்கு இன்னும் போய்ச் சேராத நிலைமை. இவர்கள் வீட்டில் அந்தக் கவலை எல்லாம் இல்லை. சமையலறை, கழிவறை, குளியலறை, முகம் கழுவும் வாஷ் பேசின், தோட்டத்திற்கு தண்ணீர் ஊற்ற என்று எல்லா இடங்களிலும், எப் போது வேண்டுமானாலும் தண்ணீர் கொட்டிக் கொண்டே இருக்கிறது.

ரிவர்ஸ் ஆஸ்மாசிஸ் (எதிர் சவ் வூடு பரவல்) முறையில் சுத்திகரிக்கப் பட்ட தண்ணீர் மாடியில் உள்ள சின் டெக்ஸ் தொட்டியில் நிரப்பப்பட்டு, குடி தண்ணீர்க் குழாய்களில் வருகிறது. குடிக்க, சமைக்க, குளிக்க, துணி துவைக்க, பாத்திரம் கழுவ அதையே பயன்படுத்திக் கொள்கிறார்கள். சுத்திக ரிக்கப்படாத தண்ணீரில் குளித்தால் ஒத்துக் கொள்வது இல்லை.

சமையலறையிலும், குளியலறையி லும் சுடு தண்ணீர்க் குழாய், குளிர்ந்த தண்ணீர்க் குழாய் என்று இருபுறமும் இருக்கும். தேவைக்கேற்ற சூட்டில் தண் ணீரை பயன்படுத்திக் கொள்ளலாம். அவசரமாக இருந்தால் ஷவரில் குளித்து விட்டுப் போய் விடுவார்கள். மாலை வேளையில் அலுப்புத் தீர முழுகிக் குளிப்பதற்காக குளியல் தொட்டி (பாத் டப்)யில் நீரை நிரப்பி, அதில் அழுந்திக் குளித்து புத்துணர்ச்சி பெற்றுக் கொள்வார்கள்.

துணி துவைப்பதற்கான எந்திரத் தில் தினமும் ஒரு சுமை துணி துவைக் கப்படும். 4 பேரின் இரவு உடை, ஜிம் உடை, அலுவலக உடை, மாலை உடை என்று குறைந்த பட்சம் ஆளுக்கு 4 செட் துணிகளை தினமும் துவைக்க வேண்டும். கூடவே, படுக்கை விரிப் புகள், தலையணை உறைகள், தலை துவட்டும் துண்டுகள், கை துடைக்கும் துண்டுகள் என்று சில நாட்களில் இரண்டு லோடு கூட எந்திரத்தில் போட வேண்டி வரும்.

ஃபிளஷ் டாய்லெட்டில் ஒவ் வொரு முறையும் சுமார் 20 லிட்டர் தண்ணீர் செலவாகிறது. (இதற்கு சுத்தி கரிக்கப்படாத தண்ணீரைத்தான் இணைத்திருக்கிறார்கள்). கூடவே 5400 சதுர அடி பரப்பில் அமைந்துள்ள இரண்டு தள வீட்டின் அறைகளையும், ஹால்களையும், வெளி வராந்தாக் களையும், துடைப்பதற்கும், கழுவுவதற் கும் தோட்டத்தில் மரம், செடிகளுக்கு நீர் ஊற்றுவதற்கும் சுத்திகரிக்கப்படாத தண்ணீரைப் பயன்படுத்துகிறார்கள்.

வேலை செய்ய வருபவர்களைச் சேர்க்காமல் இந்த 4 பேர் கொண்ட குடும்பத்துக்கு மட்டும் தினமும் 2600 லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட தண்ணீரும், சுமார் 1400 லிட்டர் சுத்திகரிக்கப்படாத தண்ணீரும் செலவாகிறது. மொத்தம் 4000 லிட்டர் அல்லது 200 குடம் தண்ணீர்.

எங்கிருந்து தண்ணீர் கிடைக்கிறது? 450 அடி ஆழத்திற்கு ஒரு ஆழ்துளைக் கிணறு தோண்டி அதிலிருந்து மோட்டர் வைத்து நிலத்தடி நீரை மேற்தொட் டிக்கு ஏற்றிக் கொள்கிறார்கள். இது போக 10,000 லிட்டர் தனியார் டேங்கர் லாரி ஒன்றை வரவழைத்து நல்ல தண் ணீரைப் பெற்றுக்கொள்கிறார்கள். இதற்கு வாரத்துக்கு ரூ 2000 வரை செல வழிக்கிறார்கள். அந்தத் தண்ணீரை ரிவர்ஸ் ஆஸ்மாசிஸ் முறையில் சுத்தி கரிப்பதற்கு வேறு தனியாக செலவா கிறது. தண்ணீருக்காக மாதத்துக்கு ரூ. 15,000 செலவழிக்கிறார்கள்.




வார இறுதியைக் கழிப்பதற்கு கிழக் குக் கடற்கரை சாலையில் உள்ள ஒரு ரிசார்ட்டிற்கு போகிறார்கள். அந்த ரிசார்ட்டில் சேவை ஐந்து நட்சத்திர தரத் தில் இருக்கும். படுக்கைகளில் வெள்ளை நிற விரிப்புகள், 2 குளியல் டவல்கள், 2 கை டவல்கள், பாத் டப் என்று ஒவ்வொருவருக்கும் வீட்டில் பயன்படுவதை விடச் சிறிது அதிகம் தான் தண்ணீர் செலவாகும். கூடவே, அவர்களது குடிலுடன் இணைந்த நீச்சல் குளத்தில் 50,000 லிட்டர் தண் ணீர் நிரப்பப்பட்டு அவ்வப்போது வெளியேற்றப்படுகிறது.

இது ஒரு வாழ்க்கை.

ஆனால், இவர்கள் வாழும் சென்னை மாநகரில் தற்போது கடும் தண்ணீர் பற்றாக்குறை. தொழிற்சாலை கள், ஐ.டி. பூங்காக்கள், மல்டி பிளெக்சு கள், உல்லாசப் பூங்காக்கள், வணிக நிறு வனங்கள், தனியார் பொறியியல் கல் லூரிகள், சொகுசு மருத்துவமனைகள் என்று வெகுவாக வளர்ந்து விட்ட சென்னையின் மக்கள் தொகை 70 லட்சத்தைத் தொட்டு விட்டிருக்கிறது. ஒரு மனிதர் சுத்தமாக, ஆரோக்கிய மாக வாழ்வதற்கு ஒரு நாளைக்கு குறைந்தபட்சம் 150 லிட்டர் தண்ணீர் (7 குடம்) தேவை. அந்த அடிப்படையில் சென்னையின் ஒரு நாள் தண்ணீர் தேவை 147 கோடி லிட்டர்கள். ஆனால் ஏரிகளிலிருந்து எடுக்கப்படும் நீர், நக ருக்கு வெளியிலிருந்து கொண்டு வரப் படும் நிலத்தடி நீர், நடைமுறையில் செயல்படாத தெலுங்கு கங்கை திட்டம் என்று எல்லாம் சேர்ந்து ஒரு நாளைக்கு 60 கோடி லிட்டர் தண்ணீர் மட்டுமே சென்னை குடிநீர் வாரியத்தால் விநி யோகிக்கப்படுகிறது. கோடை காலங் களில் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படும் போது 30 கோடி லிட்டர் மட்டுமே விநியோகிக்கப்படுகிறது.

இத்தோடு, நிலத்தடி நீரையும் சேர்த்து ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு

**ஒரு சராசரி உழைக்கும் வர்க்கக் குடும்பத்திற்கு நாளொன்றுக்கு 200 லிட்டர் தண்ணீர் (10 குடம்) கிடைத்தாலே பெரிது. வாரத்துக்கு ஒரு முறை தெம்பில்லாமல் வந்து பாயும் சென்னைக் குடிநீர் வாரிய குழாய் தண்ணீர், அதுவும் வந்து எட்டாத பகுதிகளுக்கு வாரத்துக்கு ஒரு முறை மெட்ரோ டேங்கரில் வரும் தண்ணீர் என்று மக்கள் ஓடி ஓடி சேகரித்துக் கொள்கிறார்கள்.**

கிடைக்கும் சராசரி நீரின் அளவு 107 லிட்டர் மட்டுமே. இது இந்தியாவின் வேறு எந்த நகரத்தை விடவும் குறைவு. இதுவும் மழை அளவைப் பொறுத்து ஆண்டுக்கு ஆண்டு மாறுபடுகிறது. பற்றாக்குறை ஆண்டுகளில் நபருக்கு 50 லிட்டர் என்ற அளவில்தான் தண்ணீர் கிடைக்கிறது. இந்த சராசரியில் ஒரு நாளைக்கு 1000 முதல் 2000 லிட்டர் வரை பயன்படுத்தும் மேட்டுக்குடியினரும் உண்டு, ஒரு நாளைக்கு 30 லிட்டர் தண்ணீர் மட்டும் பயன்படுத்தும் சேரிகளில் வசிக்கும் 3.5 லட்சம் மக்களும் உண்டு. பெரும்பான்மை மக்கள் கொஞ்சம் அதிகமாக 80 லிட்டர் வரை பயன்படுத்துகிறார்கள்.

ஒரு சராசரி உழைக்கும் வர்க்கக் குடும்பத்திற்கு நாளொன்றுக்கு 200 லிட்டர் தண்ணீர் (10 குடம்) கிடைத்தாலே பெரிது. வாரத்துக்கு ஒரு முறை தெம்பில்லாமல் வந்து பாயும் சென்னைக் குடிநீர் வாரிய குழாய் தண்ணீர், அதுவும் வந்து எட்டாத பகுதிகளுக்கு வாரத்துக்கு ஒரு முறை மெட்ரோ டேங்கரில் வரும் தண்ணீர் என்று மக்கள் ஓடி ஓடி சேகரித்துக் கொள்கிறார்கள்.

தேனாம்பேட்டையில் வசிக்கும் ஒரு குடும்பத்தில் அண்ணன், தம்பி இரண்டு பேரும் இருசக்கர வாகனத்தில் வள்ளுவர் கோட்டம் அருகில் இருக்கும் சென்னைக் குடிநீர் வாரியத்தின் லாரிகளுக்கான நீர்பிடிப்பு நிலையத்திற்குப் போய் அங்கு சிதறும் தண்ணீரைப் பிடித்து வருகிறார்கள். சென்னையின் ஒவ்வொரு பகுதியிலும் நிலைமை இப்படித்தான்.

குடிக்க, சமைக்க 4 குடம், பாத்திரம் கழுவ 2 குடம், 4 பேர் குளிக்க 4 குடம், துணி துவைக்க 4 குடம், கழிவறைக்கு 2 குடம் என்று வைத்துக் கொண்டாலும் ஒரு நாளைக்கு 20 குடம் தேவைப்படுகிறது. இதற்கு மேல் வாசல் கழுவுவது,வீடு துடைப்பது/கழுவுவது, பெட் ஷீட்டுகளைத் துவைப்பது என்பதெல்லாம் வெயில் காலம் தாண்டி தள்ளிப் போடப்பட்டிருக்கின்றன. தண்ணீர் கொண்டு வருவதற்காக தினமும் காலையில் 2 மணி நேரம் அலைகிறார்கள். இரு சக்கர வாகனத்தில் தண்ணீர் கொண்டு வருவதற்காக பெட்ரோலுக்கு மாதம் ரூ 600, 700 செலவழிக்கிறார்கள்.

இது அதே சென்னையின் இன்னொரு வாழ்க்கை.

சென்னை வேகமாக வளர்ந்திருக்கிறது. விவசாயம் அழிந்ததால், விவசாய நிலங்கள் வீட்டு மனைகளாக்கி விற்கப்பட்டதால் நகருக்கு இடம் பெயர்ந்த சிறு நில உடமையாளர்கள், விவசாயக் கூலிகள், தொழிற்சாலைகளுக்கு நிலத்தை பறி கொடுத்து விட்டு வந்தவர்கள், சென்னையைச் சுற்றிப் புதிதாக பிரம்மாண்டமாக எழுந்து நிற்கும் தொழிற்சாலைகள், தகவல் தொழில்நுட்ப அலுவலகங்கள், புதிய வீடுகள், தொழிற்சாலைகள், அலுவலகங்கள் கட்டும் பணியில் ஈடுபடுத்தப்படும் வட மாநிலத் தொழிலாளர்கள் என்று சென்னையின் மக்கள் தொகை ஊதிப் பெருத்துக் கொண்டே போகிறது.

ஆனால், சென்னையில் ஒரு ஆண்டுக்குப் பெய்யும் மழை சராசரியாக ஒரு நாளைக்கு 55 கோடி லிட்டர் அளவில்தான் நல்ல நீரைத் தருகிறது. பூண்டி-செம்பரம்பாக்கம்-செங்குன்றம் ஏரிகளில் தேக்கி வைத்தோ, மழை நீர் சேமிப்பு மூலம் நிலத்தடி நீரை உயர்த்தியோ, அல்லது கடலில் சேர்ந்த நீரை ரிவர்ஸ் ஆஸ்மாசிஸ் மூலம் சுத்தப்படுத்தியோ எடுக்க முடிவது இவ்வளவுதான். இந்தத் தண்ணீரை வைத்து 15 லட்சம் மக்கள், அவர்களது வாழ்க்கையை ஒட்டிய வணிக நிறுவனங்கள், அவர்கள் வேலை செய்வதற்கான தொழிற்சாலைகள் மட்டுமே சென்னையில் செயல்பட முடியும். ஆனால், இப்போது இருக்கும் சென்னை வாசிகளின் எண்ணிக்கை 70 லட்சம்.

பூண்டி, சோழவரம், செங்குன்றம் ஏரித் தொகுப்பிலிருந்து ஒரு நாளைக்கு 20 கோடி லிட்டர் தண்ணீர் வரை சென்னையின் தேவைக்கு கிடைக்கிறது. தெலுங்கு கங்கைத் திட்டம் மூலம் ஆந்திராவில் கண்டலேறுவிலிருந்து கிருஷ்ணா ஆற்று நீரை சென்னைக்குக் கொண்டு வரும் திட்டத்தை வகுத்தார்கள். அதன்படி ஒரு நாளைக்கு 83 கோடி லிட்டர் தண்ணீர் சென்னைக்கு வர வேண்டும். ஆனால், ஆந்திராவின் தேவைகள் போக அதில் சிறு பகுதி கூட சென்னையின் தேவைக்கு கிடைப்பதில்லை. கூடுதலாக, சென்னையிலிருந்து 250 கிலோமீட்டர் தொலைவிலிருக்கும் வீராணம் ஏரியிலிருந்து ஒரு நாளைக்கு 18 கோடி லிட்டர், போரூர் ஏரி, ரெட்டேரி


சென்னை மெட்ரோ லாரி: முடிவில்லாத பயணம்!

**தனியார்மய, தாராளமயக் கொள்கைகளின் கீழ் காசு இருப்பவன் தான் ராஜா என்பதால் தொழிற்சாலைகள், அலுவலகங்கள், நட்சத்திர விடுதிகள், பணக்காரர்களின் பங்களாக்கள், மேட்டுக்குடியினரின் அடுக்ககங்கள் தமக்குத் தேவையான முழு அளவு தண்ணீரையும் வாங்கிக் கொள்கிறார்கள்.**

போன்றவற்றிலிருந்து 50 லட்சம் லிட்டர் தண்ணீர் கொண்டு வரப்படுகிறது.

இதற்கு மேல், வட சென்னையின் மணலி பகுதியில் உள்ள விவசாய கிராமங்களிலும், தென் கடற்கரை கிராமங்களிலும், பாலாறு படுகையிலும் ராட்சஸ ஆழ்குழாய் கிணறுகளை ஏற்படுத்தி சென்னை குடிநீர் வாரியம் 24 மணி நேரமும் நிலத்தடி நீரை இறைத்துக் கொண்டிருக்கிறது. அதிகபட்சமாக நாளொன்றுக்கு 6,000 டேங்கர் (6 கோடி லிட்டர்) தண்ணீர் வட சென்னையின் கிணறுகளிலிருந்து எடுத்துச் செல்லப்படுகிறது. பாலாற்றுப் படுகையிலிருந்து நாளொன்றுக்கு 4 கோடி லிட்டர் தண்ணீர் இறைக்கப்படுகிறது.

இவை தவிர தனியார் அடுக்கக கட்டிடங்கள், பங்களாக்களில் குழாய் கிணறுகள் மூலம் நாளொன்றுக்கு 24 கோடி லிட்டர் நிலத்தடி நீர் இறைக்கப்படுகிறது. இப்படியாக முட்டி மோதி, நகரை உயிருடன் வைத்திருப்பதற்காகத் திரட்டப்படும் தண்ணீரில் பெரும்பகுதி, மறுபடியும் நிரப்ப முடியாத நிலத்தடி நீர்.

இத்தகைய கடும் பற்றாக்குறை நிலவும் சூழலில், தண்ணீர் யாருக்கு எவ்வளவு போய்ச் சேர வேண்டும் என்று எப்படித் தீர்மானிக்கப்படுகிறது?

தனியார்மய, தாராளமயக் கொள்கைகளின் கீழ் காசு இருப்பவன் தான் ராஜா என்பதால் தொழிற்சாலைகள், அலுவலகங்கள், நட்சத்திர விடுதிகள், பணக்காரர்களின் பங்களாக்கள், மேட்டுக்குடியினரின் அடுக்ககங்கள் தமக்குத் தேவையான முழு அளவு தண்ணீரையும் வாங்கிக் கொள்கிறார்கள். அவர்களுக்கு சென்னைக் குடிநீர் வாரியம் முதல் தனியார் டேங்கர்கள் வரை, நிலத்தடி நீர் இறைப்பதற்காக பம்புகள் வரை அடிபணிந்து சேவை செய்ய அணிவகுத்து வருகின்றன.

பாட்டில்களிலும், பாக்கெட்களிலும் தண்ணீர் அடைத்து விற்கும் பணியை நூற்றுக் கணக்கான நிறுவனங்கள் செய்து வருகின்றன. விவசாய நிலங்களைக் கைப்பற்றி அவற்றில் குழாய்களை இறக்கி, தினமும் லட்சக் கணக்கான லிட்டர் தண்ணீரை இறைத்து பாட்டில்களில் அடைத்து, லாரிகளில் கொண்டு சென்று விற்கின்றனர்.

பாக்கெட்களிலும், பிளாஸ்டிக் பாட்டில்களிலும் விற்கும் 450 தண்ணீர் விற்பனை நிறுவனங்கள் செயல்படுகின்றன. தினமும் சுமார் 50 லட்சம் அளவில் 250 மி.லி. பாக்கெட்களும், சுமார் 3.5 லட்சம் அளவில் 20-லிட்டர் கேன் தண்ணீரும் சென்னையில் விற்பனை ஆவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. 1 லிட்டர் பாட்டில்கள், 10,000 லிட்டர் டேங்கர்கள் இவற்றையும் சேர்த்து சென்னையின் தண்ணீர் சந்தையின் மொத்த மதிப்பு ஆண்டுக்கு சுமார் ரூ. 500 கோடி முதல் ரூ. 700 கோடி வரை. இவற்றில் பல நிறுவனங்களின் தண்ணீர் மாசு பட்டவை என்று கண்டுபிடிக்கப்பட்ட போதிலும், யாரும் தண்டிக்கப்படவுமில்லை. தண்ணீர் வியாபாரம் தடைபடவும் இல்லை.

**எங்கிருந்து வருகிறது தண்ணீர்?**

விவசாய விளைநிலங்களாக இருந்த பூந்தமல்லி-ஆவடி சாலையின் இருமருங்கிலும் உள்ள நிலங்கள் இரக்கமின்றி சுரண்டப்படுகின்றன.




ஒவ்வொரு நாளும் 30-35 டேங்கர் லாரிகளில் இங்குள்ள நிலத்தடி நீர் நிரப்பப்பட்டு ஒவ்வொரு டேங்கர் தண்ணீரும் ரூ 1000 விலைக்கு நகருக்குள் விற்கப்படுகின்றன. பெசன்ட் நகரிலும், பல்லடுக்கக வளாகங்களிலும் நூற்றுக் கணக்கான ஆழ்துளைக் கிணறுகள் நாள் முழுவதும் நிலத்தடி நீரை உறிஞ்சுகின்றன.சென்னையின் சுற்றுவட்டார கிராமங்களிலிருந்து நீரை உறிஞ்சிக் கொண்டு, நாளொன்றுக்கு சுமார் 13,000 டாங்கர் லாரிகள் சென்னைக்குள் வருகின்றன.

1987-ம் ஆண்டு இயற்றப்பட்ட சென்னை மாநகராட்சிப் பகுதி நிலத்தடி நீர் (ஒழுங்குமுறை) சட்டத்தின்படி சென்னையை சுற்றியுள்ள 302 கிராமங்களில் நிலத்தடி நீரை வணிக நோக்கத்துக்காக எடுப்பது தடை செய்யப்பட்டுள்ளது. ஆனால், தனியார் டேங்கர்கள் இந்தத் தடையை ஒரு பொருட்டாகவே மதிப்பதில்லை. இன்னும் சொல்லப் போனால், இந்த சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மத்தூர் கிராமத்தில் போலோ, அக்வா என்ற இரண்டு தனியார் தண்ணீர் நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டு, நிலத்தடி நீரை உறிஞ்சி, சுத்தப்படுத்தி விற்கின்றன.

தனியார் நிறுவனங்களும், சென்னை குடிநீர் வாரியமும், பல்லடுக்கக வளாகங்களும் போட்டி போட்டுக் கொண்டு உறிஞ்சியதில் சென்னையின் நிலத்தடி நீர் மட்டம் 80% குறைந்திருக்கிறது. வளசரவாக்கம், கே கே நகர், அண்ணா நகர், இராஜா அண்ணாமலைபுரம் பகுதிகளில் இரும்புச் சத்து அதிகமாகி மஞ்சள் நிறமாக தண்ணீர் வருகிறது. மந்தைவெளி, அண்ணா நகர், இந்திரா நகர், வேளச்சேரி, தரமணி பகுதிகளில் உப்புத்தன்மை அதிகரித்திருக்கிறது. பெசன்ட் நகர் பகுதியில் கடல் நீர் உள் புகுந்திருக்கிறது. பொதுவாகவே நகரின் நிலத்தடி நீரில் கார்பனேட், நைட்ரேட் உப்புக்களின் அளவு அதிகமாகி, குடிக்க லாயக்கில்லாமல் போயிருக்கின்றது.

சென்னை குடிநீர் வாரியம் நிலத்தடி நீரை எடுப்பதற்காக ஏற்படுத்திய ராட்சச ஆழ்குழாய் கிணறுகளில் பல வறண்டு கைவிடப்பட்டிருக்கின்றன. 1969-ல் தாமரைப்பாக்கம், பஞ்செட்டி, மீஞ்சூர் பகுதிகளில் ஏற்படுத்தப்பட்ட ஆழ்துளைக் கிணறுகள் நாளொன்றுக்கு 12.5 கோடி லிட்டர் தண்ணீர் எடுக்கும் விதத்தில் வடிவமைக்கப்பட்டன. ஆனால், 2005-ம் ஆண்டு முதல் அந்தக் கிணறுகளிலிருந்து 55 லட்சம்

லிட்டர் தண்ணீர் மட்டுமே கிடைக்கிறது. அதே போல ஒரு நாளைக்கு 5.5 கோடி லிட்டர் எடுக்க திட்டமிடப்பட்ட பூண்டி, கண்ணிகைபேர், கொரட்டேலி ஆறு போன்ற நீராதாரப் பகுதிகளிலிருந்து 2005-ம் ஆண்டு முதல் 71 லட்சம் லிட்டர் தண்ணீர் மட்டுமே கிடைக்கிறது.

சென்னையிலிருந்து 50 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள வெள்ளியூர் கிராமத்திலிருந்து கடந்த 30 ஆண்டுகளாக நிலத்தடி நீர் எடுக்கப்பட்டு சென்னைக்கு அனுப்பப்படுகிறது. இந்த கிராமத்தில் 804 ஏக்கர் பரப்பளவிலான ஒரு குளம் இருந்தாலும், நிலத்தடி நீரை நம்பியே நெல், நிலக்கடலை விவசாயம் நடந்து வந்தது. 1990-க்குப் பிறகு நீர் மட்டம் குறைந்ததால் 60-க்கும் மேற்பட்ட கிணறுகள் பாழடைந்து போயிருக்கின்றன. 1980-ல் 50 முதல் 80 அடி ஆழத்திற்கு தோண்டப்பட்ட 280 கிணறுகளிலிருந்து நீர் எடுக்கப்பட்டு வந்தது. இப்போது 130 முதல் 160 அடி ஆழத்தில் தோண்டப்பட்ட 220 கிணறுகள் செயல்படுகின்றன. கிராமத்தின் விவசாயம் முழுமையாக செயலிழந்து போனதோடு மட்டுமின்றி கிராமத்துக்குத் தேவையான குடிநீர் கூட கிடைப்பதில்லை;

பாலாற்றுப் படுகையில் உள்ள பழைய சீவரம் கிராமத்தில் 1980-ல் 24 முதல் 27 அடி ஆழத்திலான 71 கிணறுகளிலிருந்து தண்ணீர் எடுக்கப்பட்டு வந்தது. 2004-ம் ஆண்டில் 60 முதல் 100 அடி ஆழப்படுத்தப்பட்ட 150 கிணறுகள் இருந்தன. அவற்றில் 20 கிணறுகள் மட்டுமே பயன்படுத்த முடியும் நிலையில் உள்ளன. 1985-ல் பெருமளவில் நடைபெற்று வந்த விவசாயம், 2004 வாக்கில் முழுமையாக அழிக்கப்பட்டு விட்டது

**தண்ணீர் ஏற்றுமதி !**

இந்தச் சூழலில் ஒவ்வொரு நாளும் சென்னை துறைமுகத்திலிருந்து பல கோடி லிட்டர் தண்ணீர் ஏற்றுமதி ஆகிறது என்று சொன்னால் நம்புவீர்களா? ஆமாம், 1990-களுக்குப் பிறகு சென்னையில் ஏற்படுத்தப்பட்ட ஹுயுண்டாய், நிஸ்சான், பிஎம்டபிள்யூ, டைம்லர், ஃபோர்டு ஆகிய கார் உற்பத்தி நிறுவனங்கள் ஒரு நாளைக்கு 750 கார்களை ஏற்றுமதி செய்கின்றன. 1.1 டன் எடை உடைய ஒரு காரின் உற்பத்தியோடு தொடர்புடைய அனைத்து மனித, தொழில், வணிக நடவடிக்கைகளும் 3.5 லட்சம் லிட்டர் தண்ணீரை எடுத்துக்கொள்கின்றன. அந்தக் காரை இறக்குமதி செய்யும் நாடு 3.5 லட்சம் லிட்டரை சேமித்துக் கொள்கிறது. அந்த வகையில் சென்னையில் 25% உற்பத்தி நடவடிக்கைகள் நடப்பதாக வைத்துக் கொண்டாலும் சென்னை ஒரு நாளைக்கு 6.5 கோடி லிட்டர் தண்ணீரை ஏற்றுமதி செய்கிறது.

**ஒரு ஆண்டுக்கு உற்பத்தியாகும் சுமார் 7 லட்சம் மொத்தக் கார்களை எடுத்துக் கொண்டால், ஒரு நாளைக்கு 16 கோடி லிட்டர் தண்ணீரை குடிக்கும் கார்கள் உற்பத்தி செய்யப்பட்டு சென்னையிலும், இந்தியாவின் பிற நகரங்களிலும், உலகின் பிற நாடுகளிலும் வசிக்கும் மேட்டுக்குடியினரின் சொகுசுக்காக விற்பனை செய்யப்படுகின்றன.**

ஒரு ஆண்டுக்கு உற்பத்தியாகும் சுமார் 7 லட்சம் மொத்தக் கார்களை எடுத்துக் கொண்டால், ஒரு நாளைக்கு 16 கோடி லிட்டர் தண்ணீரை குடிக்கும் கார்கள் உற்பத்தி செய்யப்பட்டு சென்னையிலும், இந்தியாவின் பிற நகரங்களிலும், உலகின் பிற நாடுகளிலும் வசிக்கும் மேட்டுக்குடியினரின் சொகுசுக்காக விற்பனை செய்யப்படுகின்றன. அதற்காக, சென்னை நகரும், நகரில் வாழும் உழைக்கும் மக்களும் கொடுக்கும் விலையை யாரும் கணக்குப் போடுவதில்லை. திருப்பூர் ஆயத்த ஆடை ஏற்றுமதிக்கான சாயப்பட்டறைகளால் நாசமாக்கப்பட்ட ஆறுகள், விளைநிலங்கள், நிலத்தடி நீர் உள்ளிட்ட ஏற்றுமதி சார்ந்த தொழில்களால் நாசமாகும் நீர்வளத்தை இதே போல கணக்கிட்டுக் கொள்ளலாம்.

சென்னையில் உள்ள சொகுசு விடுதிகளில் 4,656 அறைகள் உள்ளன. ஒரு நட்சத்திர விடுதியின் அறைக்கு சுமார் 1,500 முதல் 2,000 லிட்டர் தண்ணீர் செலவு ஆவதாக கூறுகின்றனர் (மொத்த தணணீர் செலவு ஒரு நாளைக்கு சுமார் 50 லட்சம் லிட்டர்). சென்னையில் உள்ள 3 கோல்ப் விளையாட்டு மைதானங்களைப் பராமரிப்பதற்கு ஒரு நாளைக்கு சராசரியாக 60 லட்சம் லிட்டர்கள் தண்ணீர் செலவிடப்படுகிறது. தனியார் நீச்சல் குளங்கள் ஆயிரக்கணக்கில் இருக்கும். இவற்றுக்கு வாரம் ஒரு முறை தண்ணீர் மாற்றப்பட்டாலே நாளொன்றுக்கு சுமார் 50 லட்சம் லிட்டர் தண்ணீர் செலவாகும். சென்னையிலும் புறநகர் பகுதிகளிலும் செயல்படும் விளையாட்டுப் பூங்காக்களின் தண்ணீர் விளையாட்டுக்களுக்காக தினமும் பல லட்சம் லிட்டர் தண்ணீர் பயன்படுத்தப்படுகிறது.

உள்நாட்டு, வெளிநாட்டு முதலாளிகளின் லாபத்துக்காக, ஆனால் மக்களின் நன்மைக்காக என்று சொல்லி புதிய புதிய தொழிற்சாலைகள், அமெ



குடிநீருக்கு தட்டுப்பாடு!
பொழுதுபோக்கு பூங்காக்களுக்கு இல்லை கட்டுப்பாடு!!

**குஜராத்தின் மோடி அரசு ஒரு சட்டம் கொண்டு வந்திருக்கிறது. அம்மாநிலத்தில் 45 மீட்டர் ஆழத்துக்கு மேல் கிணறு தோண்டினாலோ, குழாய் இறக்கினாலோ அரசின் அனுமதி பெற வேண்டும். விவசாயிகள், தாங்கள் பாசனத்துக்கு பயன்படுத்தும் தண்ணீரை எப்படி எடுத்தோம் என்று அரசுக்கு கணக்கு காட்ட வேண்டும். தவறினால் ரூ. 10,000 அபராதம், ஆறு மாதம் சிறை.**

ரிக்காவுக்கு தொண்டு செய்யும் தகவல் தொழில் நுட்ப அலுவலகங்கள், தனியார் தொழில்முறைக் கல்லூரிகள், தனியார் மருத்துவமனைகள் என்று சென்னையை வளர்த்துக் கொண்டே போக திட்டமிடுகிறது ஆளும் வர்க்கம். அந்த வளர்ச்சியின் அழுத்தத்தையும், பற்றாக்குறையையும் சுமப்பது, சுமக்கப் போவது உழைக்கும் ஏழை மக்கள்தான்.

சென்னை ஒரு எடுத்துக்காட்டு மட்டுமே. இதனை எல்லா நகரங்களுக்கும் பொருத்திப் பார்த்துக் கொள்ளலாம். சொல்லப்போனால் நகரங்களைக் காட்டிலும் கொடிய தண்ணீர்ப் பஞ்சத்தை இந்தியாவின் கிராமங்கள்தான் அனுபவித்து வருகின்றன. உலகிலேயே மிக அதிகமாக நிலத்தடி நீரை உறிஞ்சும் நாடுகளில் ஒன்று இந்தியா. இந்திய அரசு நீர்ப்பாசன மராமத்தைப் புறக்கணித்த காரணத்தினால், நாட்டின் 60% விவசாயம் நிலத்தடி நீரை நம்பியிருக்கின்றது. கிராமப்புற, நகர்ப்புற குடிநீர் திட்டங்களில் 80% நிலத்தடி நீரைத் தான் நம்பி இருக்கின்றன. பருவங்கள் பொய்க்கின்றன. நிலத்தடி நீரூற்றுகள் வற்றுகின்றன. தண்ணீர் மென்மேலும் அரிய பொருளாக மாறி வருகின்றது.

**அரிய பொருட்களை யார் சொந்தம் கொண்டாட முடியும்?**

பணமிருப்பவர்கள்தான். சென்னை நகர குடிநீர் விநியோகம் குறித்த விவரங்கள் இதைத்தான் காட்டுகின்றன. மனித சமூகத்திற்கு மட்டுமின்றி, உயிரினங்கள் அனைத்திற்குமே பொதுவான தண்ணீரை ஒரு விற்பனைச் சரக்காக நம் பண்பாடு கருதியதில்லை. இந்திய அரசியல் சட்டத்தின்படி, நிலத்தின் மேல் உள்ள நீர் அரசு சொத்து. நிலத்தடி நீர், நிலத்தின் உரிமையாளருடையது. நிலத்தடி நீர் தனக்கு சொந்தம் என்ற போதிலும் விவசாயியோ, வேறு யாருமோ தம் தேவைக்கு மேல் அதனை எடுத்ததுமில்லை, விற்றதுமில்லை.

மறுகாலனியாக்க கொள்கைகள் அமலாகத் தொடங்கிய பின்னர்தான், தண்ணீர் கொள்ளை முதல் மணற் கொள்ளை வரையிலான அனைத்தும் தலைவிரித்தாடத் தொடங்கின. நீர் நிலைகளையும் நிலத்தடி நீர்வளத்தையும் உறிஞ்சி சூறையாடிய முதலாளித்துவ மாஃபியாக்கள், இப்போது நிலத்தடி நீரை அரசுடைமை ஆக்க வேண்டும் என்று கோருகிறார்கள். நிலத்தடி நீரைப் பாதுகாப்பது என்ற பெயரில் நிலத்தடி நீர்வளம் அனைத்தையும் தன் கட்டுப்பாட்டில் எடுத்துக் கொண்டு, அதனை முதலாளிகளுக்கு அள்ளிக் கொடுப்பதற்காகவே ஒரு ஆணையத்தை உருவாக்க இருக்கிறது மன்மோகன் அரசு.



கால்ஃப் மைதானத்தை பராமரிக்கும் நீரைக் கொண்டு ஒரு ஊருக்கே குடிநீர் அளிக்க முடியும்!

தொலைதொடர்பு ஒழுங்குமுறை ஆணயம், மின்சார ஒழுங்குமுறை ஆணையம் போல இது தண்ணீர் ஒழுங்குமுறை ஆணையம். அந்த ஆணையங்கள் தொலைபேசிக் கட்டணம், மின்கட்டணத்தை நிர்ணயிப்பது போல இது தண்ணீரின் விலையை நிர்ணயம் செய்யும். இப்படி தண்ணீருக்கு விலை வைப்பதன் மூலம்தான் தண்ணீர் வீணாவதை தடுக்க முடியுமாம். ஒவ்வொரு மாநிலமும் தண்ணீரை எப்படி சேமிப்பது என்று சொல்லித்தருவதற்காக 15 சர்வதேச ஆலோசனை நிறுவனங்களை ஆசிய வளர்ச்சி வங்கி சிபாரிசு செய்திருக்கிறது.

முன்மாதிரியாக, குஜராத்தின் மோடி அரசு ஒரு சட்டம் கொண்டு வந்திருக்கிறது. அம்மாநிலத்தில் 45 மீட்டர் ஆழத்துக்கு மேல் கிணறு தோண்டினாலோ, குழாய் இறக்கினாலோ அரசின் அனுமதி பெற வேண்டும். விவசாயிகள், தாங்கள் பாசனத்துக்கு பயன்படுத்தும் தண்ணீரை எப்படி எடுத்தோம் என்று அரசுக்கு கணக்கு காட்ட வேண்டும். தவறினால் ரூ. 10,000 அபராதம், ஆறு மாதம் சிறை.

தண்ணீர் சிக்கனத்துக்கான தேசிய கழகம் ஒன்றை அமைக்கவிருப்பதாக சமீபத்தில் மத்திய அரசு அறிவித்திருக்கிறது. நீச்சல் குளங்கள், கோல்ப் மைதானங்கள், தண்ணீர் விளையாட்டுகள் போன்றவற்றுக்கும் அபராதம், சிறைத் தண்டனை விதிக்கப்படுமோ என்று நீங்கள் எதிர்பார்க்கக் கூடும்.

இந்த சிக்கனக் கழகத்தை உடனே வரவேற்று முதலில் அறிக்கை விட்டிருப்பது யார் தெரியுமா? பெப்சி நிறுவனம்.

இது பாட்டில் தேசம்தான் - இரண்டு அர்த்தங்களிலும், சந்தேகமே வேண்டாம்.

● செழியன்

# கிம்பெர்லி ரெ வேரா:

# ஆதிக்கத்திற்கு துணை போகாத வீரம்!

*"அந்தப் பெண் குழந்தைக்கு இரண்டு வயது இருக்கலாம். எங்கள் விமானத் தாக்குதலால் பாதிப்படைந்த குடும்பம் ஒன்றைச் சேர்ந்தவள் அவள். நட்ட ஈடு வாங்குவதற்காக எமது இராணுவ முகாமுக்கு வந்த மக்கள் கூட்டத்தில் அவளும் இருந்தாள். நான் அந்தக் குழந்தையை ஏறிட்டுப் பார்த்தேன். அவளது உடல் அச்சத்தால் நடுங்கிக் கொண்டிருந்தது. என்னைக் கண்டதும் அடக்க முடியாமல் அழுதாள். எனது இராணுவச் சீருடை அவளை அச்சுறுத்தியிருக்க வேண்டும். அந்த நேரத்தில் அவள் மனதில் என்ன சிந்தனைகள் ஓடியிருக்கும் என்பதை என்னால் கற்பனை செய்து கூட பார்க்க முடியவில்லை."*

*"பெயர் தெரியாத அந்தக் குழந்தையின் முகம் எனது பிள்ளைகளை நினைவூட்டுவதாக இருந்தது. அவளைக் கட்டியணைத்து ஆறுதல் கூற விரும்பினேன். ஆனால் என்னால் அது முடியாது என்பதையும் அறிந்தேயிருந்தேன்."*

**கிம்பெர்லி ரெவேரா** (கடந்த மாதம் 23-ம் தேதி அளித்த பேட்டியிலிருந்து).

கிம்பெர்லி அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலத்தின் மெஸ்க்வெய்ட் பகுதியைச் சேர்ந்தவள். ஏழ்மையான குடும்பப் பின்னணி. வால்மார்ட்டில் பணிபுரிந்து வந்த கிம்பெர்லி, அங்கே உடன் பணிபுரிந்து வந்த மரியோ ரெவேராவைக் காதலித்து மணம் புரிந்து கொண்டாள். காதல் மணம் என்றாலும் அவளது திருமண வாழ்க்கை மகிழ்ச்சியாக இருக்கவில்லை.

தொடர்ந்து அதிகரித்து வரும் குடும்பச் செலவினங்களால் அந்தத் தம்பதியினர் பொருளாதார ரீதியில் கடும் சிரமத்துக்குள்ளாகிறார்கள். காதல் மண வாழ்வில் சில மகிழ்ச்சியான தருணங்களும் அவளுக்கு வாய்த்தது; அழகான இரண்டு குழந்தைகளுக்குத் தாயாகிறாள் கிம்பெர்லி. கணவன் மனைவி இருவருமே பணிபுரிந்தாலும், வால்மார்ட் கொடுத்த சொற்ப சம்பளம் குடும்பத்தை நடத்தப் போதுமானதாக இல்லை. பொருளாதார நெருக்கடி அந்தக் குடும்பத்தை சுற்றி வளைத்து நெருக்குகிறது. இதைச் சமாளிக்க இருவரில் ஒருவர் இராணுவத்தில் சேர்வதென முடிவு செய்கிறார்கள். என்றாலும், இருவருக்குமே உடற்பருமன் பிரச்சினை இருந்ததால் உடல் எடையைக் குறைக்க பயிற்சிகள் மேற்கொள்கிறார்கள்.

இருவரில் யாருக்கு முதலில் எடை குறைகிறதோ அவர் இராணுவத்தில் சேர்வது என்று முடிவு செய்கிறார்கள். மரியோவை விட கிம்பர்லியின் எடை வேகமாகக் குறைகிறது. 2006-ம் ஆண்டு ஜனவரி மாதம் தனியார் கான்டிராக்டு நிறுவனம் ஒன்றின் மூலம் இராணுவத்தில் சேரும் கிம்பர்லி, ஈராக் அனுப்பி வைக்கப்படுகிறாள். பாக்தாத்தில் நிலை கொண்டிருந்த அமெரிக்க இராணுவத்தின் நான்காம் காலாட்படை அணியின் முகாமுடைய வாயில் காவலாளி வேலை அவளுக்கு அளிக்கப்பட்டது.

காவலாளி வேலையில் சிப்பாய்களைப் போல் நேரடியாக யுத்தத்தில் பங்கேற்க வேண்டிய தேவையில்லை. என்றாலும், போரால் பாதிக்கப்பட்டு வீடிழந்தவர்களும், உறவுகளை இழந்த அப்பாவிப் பெண்களும், குழந்தைகளும் நிவாரணம் கோரி இராணுவ முகாம்களை மொய்ப்பது வழக்கம். எனவே, போரால் வாழ்விழந்த அப்பாவி சிவிலியன்களை அவள் தொடர்ந்து சந்திக்க வேண்டியிருந்தது. நிவாரணம் கொடுப்பது போன்ற நடவடிக்கைகளால் அமெரிக்க இராணுவம், ஈராக் மக்களை விலை பேச இயலவில்லை. அவர்களுடைய பதிலடித் தாக்குதல்களை நிறுத்த முடியவில்லை. அமெரிக்க வீரர்கள் எல்லோரும் ஈராக்கிய குழந்தைகளைக் கூட எதிரிகளாகவே கருத வேண்டுமென்பதுதான் இராணுவத் தலைமையின் உத்தரவு.

இந்த உத்தரவை கிம்பெர்லியும் அமுல்படுத்த வேண்டிய கட்டாயம் இருந்தது. பல நாட்களாகத் தொடர்ந்த வலி நிறைந்த இந்தப் பணி, அவளை தீராத மன உளைச்சலுக்கும் அழுத்தத்திற்கும் உள்ளாக்குகிறது. ஊரில் அன்றாடத் தேவைகளுக்காக அல்லாடும் தனது குடும்பமும் குழந்தைகளும் அவள் நினைவுக்கு வருகின்றன. தனது சொந்தக் குழந்தைகளின் ஏக்கத்தை ஈராக்கியக் குழந்தைகளின் முகத்தில் காண்கிறாள். ஒரு கட்டத்தில் கிம்பெர்லியின் மனசாட்சி மேலெழுகிறது; இதற்கு மேலும் தன்னால் ஈவிரக்கமற்ற இந்தப் பணியில் ஈடுபட முடியாது என்று முடிவு செய்கிறாள்.

தனது முடிவை மேலதிகாரிகளுக்கும் தெரியப்படுத்துகிறாள் கிம்பெர்லி.

அமெரிக்க இராணுவத்தில் கிம்பெர்லியின் நிலை அவளுக்கு மட்டுமே ஏற்பட்டதல்ல. அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு இராணுவம் நவீன தொழில்நுட்பங்களை வரித்துக் கொள்வதில் முன்னணியில் இருக்கிறது, அந்த வகையில் வெளித்தோற்றத்தில் வெல்லப்படவே முடியாது என்கிற பிம்பம் அதனைச் சுற்றி கட்டமைக்கப்பட்டுள்ளது. எனினும், ஈராக், ஆப்கான் என்று ஆக்கிரமிக்கப்படும் நாடு

**ஊரில் அன்றாடத் தேவைகளுக்காக அல்லாடும் தனது குடும்பமும் குழந்தைகளும் அவள் நினைவுக்கு வருகின்றன. தனது சொந்தக் குழந்தைகளின் ஏக்கத்தை ஈராக்கியக் குழந்தைகளின் முகத்தில் காண்கிறாள். ஒரு கட்டத்தில் கிம்பெர்லியின் மனசாட்சி மேலெழுகிறது; இதற்கு மேலும் தன்னால் ஈவிரக்கமற்ற இந்தப் பணியில் ஈடுபட முடியாது என்று முடிவு செய்கிறாள்.**



கணவன், குழந்தைகளுடன் கிம்பர்லி ரெ வேரா!

களுக்கு அனுப்பப்படும் வீரர்கள் மன உளைச்சலுக்கு ஆளாவதும், தற்கொலைகளும் தொடர் நிகழ்வாகவே உள்ளது.

இதைச் சமாளிக்க படையெடுத்துச் செல்லும் தனது இராணுவத்துக்கு நவீன ஆயுதங்களோடு கிருஸ்தவ மத குருமார்களையும் (chaplain) அனுப்பி வைக்கிறது அமெரிக்க அரசு. எப்போதெல்லாம் வீரர்களுக்கு மனசாட்சி உறுத்துகிறதோ அப்போதெல்லாம் அதை ஆன்மீக ரீதியாக தடவிக் கொடுத்து, மனச்சாட்சியை மரத்து போக வைக்கும் குருஷேத்திர கிருஷ்ணனின் பாத்திரம் தான் இந்த மதகுருமார்களுக்கும்.

கிம்பெர்லியின் மேலதிகாரிகள் அவளை முகாமில் இருக்கும் மதகுருவிடம் அனுப்புகிறார்கள். மதகுருவோ, கிம்பெர்லியின் மனக் குழப்பத்தைக் கேட்டுக் கொண்டு, 'அனைத்தையும் சகித்துக் கொண்டு தேவனின் பெயரால் கடமையைத் தொடர்வது' குறித்து நற்செய்திப் பிரசங்கம் செய்து அனுப்புகிறார். ஒருபக்கம் கிம்பெர்லியின் தாய்மை உணர்ச்சி அவளது மனசாட்சியை அறுக்கிறது. தனது குடும்பத்தின் பொருளாதாரச் சூழலை விட அப்பாவி ஈராக்கியர்களின் அச்சம் தோய்ந்த முகங்கள் அவளது மனசாட்சியைப் பிடித்து உலுக்குகின்றன. பெற்றோரை இழந்து, உறவினர்களை இழந்து நிர்க்கதியாக வீசியெறிப்பட்ட ஈராக்கியக் குழந்தைகளின் ஓலம் அந்த அமெரிக்கத் தாயின் உள்ளத்தைக் குத்திக் குதறுகின்றது.

இன்னொரு பக்கம் அவளது மேலதிகாரிகளின் உத்தரவு அச்சுறுத்துகிறது. இந்த மனப்போராட்டங்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பதென தீர்மானிக்கிறாள். 2007-ம் ஆண்டின் துவக்கத்தில் விடுமுறைக்காக அமெரிக்கா திரும்பும் கிம்பெர்லி, தனது கணவரோடு அமெரிக்க எல்லையைக் கடந்து கனடாவில் அடைக்கலமாகி அங்கே அரசியல் அகதியாக தஞ்சம் கோருகிறாள். இராணுவ வேலையை ஒப்பந்த காலத்துக்கு முன்பாகவே துறக்கிறாள்.

2007-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் பத்திரிகை ஒன்றிற்காக பேட்டியளித்த கிம்பெர்லி, இவ்வாறு சொல்கிறாள் - ''போரை பிரத்யட்சமாகக் கண்ட எனக்குள் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டன. நமது தேசத்தின் பேராசைகளுக்காக மக்கள் அநியாயமாக உயிரிழக்கிறார்கள். போரிலிருந்து ஊர் திரும்பும் வீரர்கள் மனச்சோர்வினாலும், மன அழுத்த நோயினாலும் பாதிக்கப்படுகிறார்கள். சிலர் போதைப் பழக்கத்துக்கும் மதுவுக்கும் அடிமையாகிறார்கள். சிலர் உடல் ஊனமாகித் திரும்புகிறார்கள்; இன்னும் சிலரோ திரும்புவதேயில்லை...''

கனடாவின் டொரான்டோ பகுதியில் கணவரோடு தங்கிய கிம்பெர்லி, அந்நாட்டு அரசிடம் அதிகாரபூர்வ குடியுரிமை கோரி விண்ணப்பிக்கிறாள். 2009-ம் ஆண்டு ஜனவரி மாதம் அவளது கோரிக்கை நிராகரிக்கப்படுகிறது. அதை எதிர்த்து செய்த மேல் முறையீடுகளும் நிராகரிக்கப்பட்ட நிலையில், கடந்த ஆண்டு ஆகஸ்டு மாதம் கைது செய்யப்பட்டு அமெரிக்காவுக்கு நாடு கடத்தப்படுகிறாள், கிம்பெர்லி.

''செய்யும் காரியங்களின் மேல் அறம் சார்ந்த ஆட்சேபணைகளும் விருப்பமின்மையும் இருந்தாலோ, இன்னொரு மனிதரை தாக்கிக் காயப்படுத்துவதை ஒருவரின் மனசாட்சி ஏற்கவில்லையென்றாலோ அந்த வேலையிலிருந்து வெளியேற மக்களுக்கு வாய்ப்புகள் இருக்க வேண்டும்'' - அமெரிக்

காவின் ஆக்கிரமிப்புப் போர்களில் ஈடு படுத்தப்பட்டதால் மன அழுத்த நோய் மற்றும் பல்வேறு காரணங்களால் இரா ணுவ வேலையைக் கைவிடுவோருக் காக துவங்கப்பட்டுள்ள ''மறுப்பதற் கான வீரம்'' (courage to resist) என்கிற அமைப்பிடம் பேட்டியளித்த கிம் பெர்லி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவிடம் ஒப்படைக்கப் பட்ட கிம்பெர்லி இராணுவ விசார ணையை எதிர்கொள்கிறாள். அந்த இடைப்பட்ட காலத்தில் கார்ஸன் கோட்டையிலிருக்கும் இராணுவ முகா மில் பணியமர்த்தப்படுகிறாள். மீண் டும் பணியில் அமர்த்தப்பட்ட தனது அனுபவம் குறித்து சொல்லும் கிம் பெர்லி, ''ஆயுதங்களைத் துடைத்து சுத் தம் செய்யும் தற்காலிக வேலையை எனக்குக் கொடுத்திருக்கிறார்கள். என் னால் ஆயுதங்களைத் தொடவோ பார்க்கவோ கூட முடியவில்லை. அவற்றைப் பார்க்கும் போதெல்லாம் மனக் கொதிப்பு ஏற்படுகிறது. ஒரு நாள் நான் ஆயுதங்களை சுத்தம் செய்து கொண்டிருந்த போது மயங்கிச் சரிந்து விட்டேன்'' என்கிறாள்.

கடந்த மாதம் 29-ம் தேதி இரா ணுவ நீதிமன்றம் தீர்ப்பை வழங்கி யுள்ளது. தற்போது நான்கு குழந்தை களின் தாயாகவும், கருவில் ஒரு குழந் தையைச் சுமந்து கொண்டும் இருக்கும் கிம்பெர்லிக்கு பத்து மாத சிறைத் தண் டனை விதிக்கப்பட்டுள்ளது. தனது அடுத்த குழந்தையை சிறையில் பெற் றெடுக்க காத்திருக்கிறாள் அந்தத் தாய்.

கிம்பெர்லி ஈராக்கில் சந்தித்த தரு ணங்கள் நமக்கு அந்நியமானவை யல்ல. நமது பணியிடங்களில், அலுவ லகங்களில், ஆலைகளில் நாள் தோறும் நம் மனசாட்சியை உரசிப் பார்க்கும் சம் பவங்கள் நடந்து கொண்டு தான் இருக் கின்றன. குறிப்பிட்ட சம்பவத்தின் பாதிப்பின் தன்மை நமது எதிர்வினை யைத் தீர்மானிக்கிறது. சில சந்தர்ப்பங் களில் மௌனமாய் முணுமுணுக் கிறோம் அல்லது சகித்துக் கொண்டு கடந்து விடுகிறோம் அல்லது அபூர்வ மான தருணங்களில் எதிர்த்து போராட வும் செய்கிறோம். பெரும்பாலும், சகித்துக் கொண்டு கடந்து செல்வதே நடக்கிறது.

குடிநீர் வினியோகம் நடக்க வில்லை என்பதற்காகவோ, மின் தட் டுப்பாட்டை எதிர்த்தோ போராடும் மக் களை ஒடுக்குவதற்காக ஆளும் வர்க் கம் ஏவி விடும் காவல் துறையின் தாக் கும் முனை, அதன் கீழ்மட்டப் பணியி டங்களில் அமர்ந்துள்ள உழைக்கும் வர்க்கப் பின்னணி கொண்ட காவலர் கள் தான். அன்றாடம் நிலப்பறிப்புக்கு எதிராக, விலைவாசி உயர்வுக்கு எதி ராக, வளங்கள் கொள்ளை போவதற்கு எதிராக நடக்கும் போராட்டங்களை அடக்கி ஒடுக்க முன்வரும் கீழ்மட்டக் காவலர்களும், துணை ராணுவப்படை, ராணுவம் உள்ளிட்ட அரசின் அதிகா ரப்பூர்வ குண்டர்படைகளில் பணிபுரிப வர்களும் சாமானிய குடும்ப பின்னணி கொண்டவர்கள் தான். காஷ்மீரிலும், வடகிழக்கு இந்தியாவிலும், சட்டீஸ்க ரிலும் இந்திய ஆளும் வர்க்கத்தின் அடியாட்படையாக நிற்பவர்கள் இவர் கள்தான்.

மக்களைக் கிள்ளுக்கீரையாக நடத் துவதையும் வாய்ப்புக் கிடைக்கும் போது பூட்ஸ் காலின் கீழ் போட்டு நசுக் குவதையும் எவ்வாறு நியாயப்படுத் திக் கொள்ள முடிகிறது இவர்களால்? இது சம்பளத்துக்காக செய்யும் வேலை. இதில் மனசாட்சியைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது என்பதுதான் இவர்கள் அனைவரும் கூறும் நியாயம்.

ஆனால், தனது ஏழ்மையின் காரண மாக இராணுவப் பணியில் சேரும் கிம் பெர்லியோ, தனது செயலின் பின் விளைவு குறித்து எண்ணி அஞ்சிப் பின் வாங்கவில்லை. வேலை இழப்பினால் ஏற்படப் போகும் பொருளாதார நெருக்கடிகளை அவள் எண்ணிப் பார்க்கவில்லை. தனது குழந்தையின் வயிற்றை நிரப்ப வேண்டும் என்பதற் காக, இன்னொரு தேசத்தின் இன் னொரு தாயின் குழந்தை செத்து மடி யட்டும் என்று கருதவில்லை. பிறரு டைய துன்பத்தையும் தன்னுடையதாக கருதினாள். தனது மனசாட்சிக்கும் தாய்மை உணர்ச்சிக்கும் நேர்மையாக நடந்து கொண்டாள்; இந்த நேர்மைக் கான விலை சிறைத் தண்டனை என்றா லும் கூட அவள் கலங்கவில்லை.

ஒருவேளை அவள் அறிவுஜீவி யாக இருந்திருந்தால், இராக்கில் பத்து குழந்தைகளை துப்பாக்கிக்கு இரை யாக்கி விட்டு, அமெரிக்காவுக்கு திரும்பி வந்து தனது மன அவஸ் தையை புத்தகமாக்கி விற்றிருப்பாள். அல்லது, கொலை என்பது அறம் கொன்ற செயல் அல்ல, அது என் பிழைப்பு என்று பின் நவீனத்துவ தத் துவ விளக்கம் அளித்திருப்பாள். ஆனால் கிம்பர்லியோ மிகவும் சாதார ணமான ஒரு பெண்.

செய்யும் வேலையும் ஏற்றுக் கொண்ட கொள்கையும் நேருக்கு நேர் முரண்பட்டு நின்றாலும், அவை இரண் டும் இருவேறு பாதைகளில் சிக்க லின்றி பயணிக்க முடியும் என்று பலர் கருதுகிறார்கள். அல்லது இந்நிலையை எதிர்த்துப் போராடுவது சாதாரணர் களால் முடியாது என்றும் அதெல்லாம் விதிவிலக்கான மனிதர்களின் சாதனை என்பதாகவும் சமாதானம் கூறிக் கொள் கிறார்கள்.

கிம்பெர்லி வெகு சாதாரணமான பெண்மணி தான். அவளிடம் வெளிப் பட்டிருக்கும் பண்பு உழைத்துப் பிழைக்கும் எளிய மக்களிடம் வெளிப் படும் பண்பு. அதனால் தான், மொழி தெரியாத நாட்டில், அந்நிய இனத்தைச் சேர்ந்த ஒரு குழந்தையின் கண்ணீரில் தனது குழந்தையின் கண்ணீரை கிம் பெர்லியால் காண முடிந்தது.

கிம்பெர்லி தனது இதயத்தை வயிற் றுக்கு மேல் வைத்திருந்தாள். இதயத் தின் மீது வயிறு அமையப் பெற்றவர் களால் அவள் அனுபவித்த வேதனை யைப் புரிந்து கொள்ள இயலாது.

**''செய்யும் காரியங்களின் மேல் அறம் சார்ந்த ஆட்சேபணைகளும் விருப்பமின்மையும் இருந்தாலோ, இன்னொரு மனிதரை தாக்கிக் காயப்படுத்துவதை ஒருவரின் மனசாட்சி ஏற்கவில்லையென்றாலோ அந்த வேலையிலிருந்து வெளியேற மக்களுக்கு வாய்ப்புகள் இருக்க வேண்டும்.''**

● நாசர்

# ஹெர்பாலைஃப்:

# குண்டு – ஒல்லியை வைத்து ஒரு உலக மோசடி!

**சு**மார் ஒன்றரை ஆண்டுகளாக நடந்த துரத்தல் அது. நான் தினசரி காலையில் வீட்டுக்குப் பக்கத்தில் இருக்கும் பூங்காவில் நடைபயிற்சி செய்வது வழக்கம். பூங்காவின் நுழைவாயில் அருகே அந்தப் பெண்ணையும் டிப்டாப் இளைஞரையும் பார்க்க முடியும். வெள்ளைக் கோடுகளும் நீலக் கோடுகளும் போட்ட ஒரு சிறிய நிழற்குடையை பக்கத்திலேயே வைத்திருப்பார்கள். அதன் கீழே ஒரு எடை பார்க்கும் கருவி இருக்கும். கையில் ஒரு சிறிய கருவியை வைத்திருப்பார்கள். முகத்தில் மாறாத புன்னகை.

''சார் வாங்க சார், இலவசமா உடல் எடை பாருங்க, உங்க கொழுப்பு அளவு என்னானு சொல்றோம் சார். இலவசம் தான் வாங்க சார்'' தேனில் சர்க்கரையைக் கலந்தது போன்ற இனிமை.

எனக்கு இவர்களது தோற்றமும் அணுமுறையுமே கொஞ்சம் மனக்கிலேசத்தை உண்டாக்கியது. பல ஆண்டுகளுக்கு முன் கல்லூரியில் படித்த காலத்தில் இது போன்ற டிப்டாப் பெந்தே கொஸ்தே ஆசாமி ஒருவரிடம் 'நற்செய்தி' கேட்கச் சென்று கிடைத்த அனுபவம் வேறு அச்சுறுத்தியது. அன்று காதில் ரத்தம் வழிய ஓடிவந்த எனக்கு தொடர்ந்து பத்து நாட்களாக ஆவி, சாத்தான், இயேசு, பரமண்டலம், நரகம், கொதிக்கும் வென்னீர், உருகும் எலும்பு, சாவு என்று ஒரே கெட்ட சொப்பனமாக வந்து கொண்டிருந்தது. வீட்டில் பயந்து போய் தாயத்து மந்திரிப்பவரிடம் அழைத்துச் சென்றனர். அதற்கடுத்த பத்து நாட்கள் எனது கனவுக்குள் முண்டக்கண் மாரியும், சுடுகாட்டு மாடனும், ஒண்டி முனியும், பிடாரியும் ஊடுருவி கும்மியடித்தனர். அந்த எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை ஆயுளுக்கும் மறக்கவே முடியாது.

என்றாலும் தொடர்ந்த இவர்களின் நச்சரிப்புத் தாளாமல், என்னதான் சொல்கிறார்கள் பார்ப்போமே என்று முடிவு செய்தேன். எடையையும் உயரத்தையும் அளந்தவர்கள், ஒரு சிறு கருவியை என்னிடம் கொடுத்து இறுக்கமாகப் பிடித்துக் கொள்ளச் சொன்னார்கள்.

''ஐயையோ சார்.....'' எப்போதும் சிரிப்பைக் காட்டும் அப்பெண்ணின் முகத்தில் அதிர்ச்சி. அந்த இளைஞரின் முகமும் இருண்டது.

''ஐயையோ என்னாங்க எதுனா கேன்சாரா...?'' சமீப நாட்களாக சளிக்காய்ச்சல் வருவது போல் எல்லோருக்கும் கேன்சர் வரப்போவதாக பத்திரிகைகளில் பீதியைக் கிளப்பி வருகிறார்களே.

''உங்க உடம்பில் நிறைய கொழுப்பு சேர்ந்திருக்கு சார். இப்படியே விட்டீங்கன்னா கொலஸ்ட்ரால் கூடும், ரத்த அழுத்தம் அதிகரிக்கும், சர்க்கரை நோய் வரலாம், அப்புறம் மாரடைப்பு வரும். எடை அதிகமா இருக்கிறதாலே ஆர்த்ரிடிஸ் வரும், முதுகு வலி, மூட்டு வலி, கழுத்தெலும்பு தேய்மானம், தோள்பட்டை வலி... கேன்சரே கூட வந்தாலும் வரலாம் சார்.''

> **''உங்க BMI 29. அதாவது இப்ப நீங்க ஒபிஸ். ஒபிஸிட்டின்றது வெறுமனே பருமன் என்று மட்டும் புரிஞ்சிக்கக் கூடாது. இப்பல்லாம் பாருங்க சின்ன வயசுலயே கேன்சர் வருது, ஹார்ட் அட்டாக் வருது, இன்னும் சிலர் பார்த்தீங்கன்னா என்ன காரணம்னு தெரியாமலே கூட செத்துப் போயிடறாங்க. எதனாலேன்னு யாருக்காவது தெரியுமா?**

அணுகுண்டுகளாக வீசிக் கொண்டிருந்த வரை அவசரமாக இடைமறித்தேன்.

''இல்லங்க, இப்ப நான் நல்லாத் தானே இருக்கேன். நீங்க என்னென்னவோ சொல்றீங்களே?''

''சார் உங்க பிரச்சினை என்னன்னு உங்களுக்கு எப்படி சார் தெரியும்? அதனாலே தான் சொல்றேன் ஒரு இலவச பரிசோதனை செய்துக்கங்க. நாளைக்குக் காலைல ஏழு மணிக்கு சாப்பிடாம வெறும் வயிறோட இந்த முகவரிக்கு வாங்க. ஆரோக்கியமா வாழ்றது எப்படின்னு இலவச ஆலோசனைகள் கிடைக்கும். நோயற்ற வாழ்வு தானே சார் குறைவற்ற செல்வம்?''

பேசிக் கொண்டே கையில் முகவரி அட்டையைத் திணித்தார். அதில் "Turning point" என்கிற பெயரும் தொடர்பு எண்ணும் அளிக்கப்பட்டிருந்தது. நாள் முழுவதும் குழப்பம். இணையத்தில் டர்னிங் பாயின்ட் என்று தேடியதில் உருப்படியான தகவல்கள் ஏதும் தேறவில்லை. மற்ற எல்லாவற்றையும் விட 'ஹார்ட் அட்டாக்' என்பது மட்டும் கொஞ்சம் அச்சமூட்டுவதாகவே இருந்ததால், ''சரி, போய் என்னதான் சொல்கிறார்கள் பார்ப்போமே'' என்கிற முடிவுக்கு வந்தேன்.

மறுநாள் காலை. திருப்பதியில் மொட்டையைத் தேடுவது போல் தேடியலைந்து அந்த முகவரியைக் கண்டு பிடித்தேன். அந்த சந்து முக்கில் இருந்ததே மொத்தம் பத்து கட்டிடங்கள் தான். எனினும், யாருக்குமே 'டர்னிங் பாயின்ட்' என்கிற பெயரே தெரியவில்லை. இவர்களும் பெயர்ப் பலகை ஏதும் வைத்திருக்கவில்லை. கடைசியில் பார்த்தால், அவர்களது அலுவலக வாசலிலேயே பதினைந்து நிமிடங்களாய் நின்று கொண்டு போவோர் வருவோரிடமெல்லாம் விசாரித்திருக்கிறேன்.

உள்ளே அந்தப் பெண் இருந்தார். தனது பெயரை மாலா என்று அறிமுகம் செய்து கொண்டார்.

அது இரட்டைப் படுக்கையறை வசதி கொண்ட வீடு. வரவேற்பறையில் வண்ண வண்ணப் போஸ்டர்கள் ஒட்டப்பட்டிருந்தன. மனித உடலின் உள்ளுறுப்புகள் மற்றும் பாகங்களை விளக்கும் பெரிய போஸ்டர் மற்றும் இயற்கை உணவின் நன்மைகளை விவரிக்கும் போஸ்டர்களோடு சாய்னா நெஹ்வால், விராட் கோலி போன்ற

விளையாட்டு வீரர்கள் தங்கள் வாழ்வின் திருப்புமுனையே 'டர்னிங் பாயின்ட்' தான் என்று சொல்லிச் சிரிக்கும் போஸ்டர்களும் ஒட்டப்பட்டிருந்தன.


வரவேற்பறையில் என்னோடு சேர்த்து மொத்தம் எட்டு பேர் இருந்தனர். என்னைத் தவிர மற்றவர்கள் நடுத்தர வயதினர். அவர்கள் முகங்களில் மரண பீதி. அதில் வயதானவராகத் தெரிந்தவரிடம் இளைஞர் ஒருவர் தீவிரமாக எதையோ விளக்கிக் கொண்டிருந்தார்,

''சார் இந்தப் பொடியை சரியா மூன்று ஸ்பூன் எடுத்து இந்த டப்பாவுல போடுங்க. கொதிச்ச தண்ணீரை சரியா ஆறு நிமிஷம் ஆறவிட்டபின் உள்ளே ஊற்றுங்க. சரியா 100 மில்லி ஊற்றணும். ஊற்றின பின், இதோ இப்படி பிடிச்சிக்கங்க. அப்டியே கரகரகரன்னு குலுக்கணும். சரியா 60 செக்கண்ட் குலுக்கணும். வாட்ச் பார்த்துக்கிட்டே குலுக்குங்க. மிஸ் பண்ணிடாதீங்க. அப்புறம் ஒரே மூச்சில் குடிக்கணும். குடிச்சதும் அப்டியே ஆடாம அசையாம அஞ்சி நிமிசம் ஒக்காந்துடணும். சரியா பைவ் மினிட்ஸ்.'' வேதியல் பரிசோதனைக் கூடத்திற்குள் நுழைந்து விட்டதைப் போலிருந்தது.

சிறிது நேரத்தில் மாலா தன்னோடு ஒரு இளைஞரை அழைத்து வந்தார். 'சார், இவர் பேர் பிலால். இவரு உங்களுக்கு சொல்லுவார்' என்றவாறே எதிரே அமர்ந்தனர். அந்த இளைஞர் பேசத் துவங்கினார்.

''சார், இந்த ப்ராடக்ட் பயன்படுத்தும் முன் எனக்கு உடல் பருமன் பிரச்சினை இருந்தது. அது போக, சைனஸ், வீசிங், அல்சர் கூட இருந்தது.. இப்ப ஒரு வருசமாச்சி... எல்லாம் சரி ஆய்டிச்சி'' என்று துவங்கியவர், 'பிராடக்ட்' என்று அழைக்கப்பட்ட கந்தாயம் பற்றி பலவாறாக சொல்லிக் கொண்டேயிருந்தார். ''மேரு மலையை மத்தாக கொண்டு வாசுகியைக் கயிறாக்கி பாற்கடலைக் கடைந்த போது கிடைத்த தங்கக்குடமொன்றில் இருந்து எடுத்த பொருள்'' என்னும் அளவுக்கு அவரால் விதந்தோதப்பட்ட 'பிராடக்ட்' இன்னும் என் கண்களுக்கு தரிசனம் கொடுக்கவில்லை என்பதை மாலாவுக்கு நினைவூட்டினேன்.

''அவசரப்படாதீங்க அதை உள்ளே இருக்கிற ஆலோசகர் காட்டுவார்'' என்று பூடகமாகவே பதில் சொன்னார்.




ஹெர்பலைஃப் நிறுவனர் மார்க் ஹியூக்ஸ்! மோசடி தொழில், மர்ம மரணம்!!

''ஆலோசகரா.... அதுக்கு காசு கட்ட வேண்டுமோ'' என் கவலை எனக்கு.

''சீச்சீ அதெல்லாம் இலவசம் தான்'' - 'சீய்ய்ய்... அற்பனே' என்கிற தொனியில் பதில் வந்து விழுந்தது.

தொடர்ந்து அவரே உள்ளறைக்குள் அழைத்துச் சென்றார். அங்கே 'கன்சல்டன்ட்' எனப்பட்டவர் முகத்தை இறுக்கமாக வைத்துக் கொண்டு கையிலிருந்த கோப்பை முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தார்.

''சார், அது உங்க ரிப்போர்ட் தான். இவரு தான் கன்சல்டன்ட் குமார்'' காதருகே பிலாலின் குரல் கிசுகிசுத்தது. 'இங்கே என்னா சத்தம்....' என்பதைப் போல் குமார் தலையை உயர்த்தி முறைத்தார். ''ஹி..ஹி..ஹி.. சாரி சார்'' பிலால் பவ்யமாக மன்னிப்புக் கேட்டு விட்டு அகன்றார்.

குளிரூட்டப்பட்ட அந்த அறையில் ஆழ்ந்த யோசனையில் குமாரும், ஆழ்ந்த குழப்பத்தில் நானும் மட்டும் இருந்தோம். ஐந்து நிமிடங்கள் பேச்சற்ற மௌனத்தில் கழிந்தது. எனது 'ரிப்போர்ட்' என்று சொல்லப்பட்ட கோப்பை அவர் பல கோணங்களில் உற்றுப் பார்த்தார். இடையிடையே தன் முன்னிருந்த மடிக்கணினியில் எதையோ சரிபார்த்துக் கொண்டார். சரியாக முன்னூற்றி இரண்டாவது செகண்டில்,

''கொஞ்சம் சிக்கல் தான்'' தனக்குத் தானே சொல்லிக் கொள்வது போல் என்னிடம் சொன்னார்.

''என்ன சொல்றீங்க சார்'' எனது இதயத் துடிப்பை என்னாலேயே கேட்க முடிந்தது.

''உங்க BMI 29. அதாவது இப்ப நீங்க ஓபிஸ். ஒபிஸிட்டின்றது வெறுமனே பருமன் என்று மட்டும் புரிஞ்சிக்கக் கூடாது. இப்பல்லாம் பாருங்க சின்ன வயசுலயே கேன்சர் வருது, ஹார்ட் அட்டாக் வருது, இன்னும் சிலர் பார்த்தீங்கன்னா என்ன காரணம்னு தெரியாமலே கூட செத்துப் போயிடறாங்க. எதனாலேன்னு யாருக்காவது தெரியுமா? உங்களுக்குத் தெரியுமா?''

''தெரியாதுங்க''

''கரெக்ட். யாருக்கும் தெரியாது. ஆனால், எதனாலேன்னு எங்களுக்குத் தெரியும். அதைச் சொல்லித் தரத் தான் உங்கள இங்கே வரவழைச்சிருக்கோம்'' அவர் பேசிக் கொண்டிருந்த போது பிலால் கண்ணாடிக் கோப்பையில் ப்ரௌன் நிற திரவம் ஒன்றை எடுத்து வந்தார். ''முதல்ல இதைக் குடிங்க''.

எடுத்து வாயில் வைத்தேன். கழுநீரின் சுவையா, கஷாயத்தின் சுவையா என்று பிரித்தறிய முடியாத ஒரு சுவை உச்சி மண்டை வரை ஊடுருவித் தாக்கியது. எனது முகச் சுளிப்பைக் கண்டவர், ''ஊட்டச்சத்து பானம் தான், பயப்பட ஒன்னுமில்லை'' என்று ஊக்கப்படுத்தினார். மனதை திடப்படுத்திக் கொண்டு ஒரே வீச்சில் குடித்தேன்.

''வெரிகுட், இப்ப நீங்க குடிச்சீங்களே இது அமேசான் காடுகள்ல

**எம்.எல்.எம் நிறுவனங்கள் சொல்வது போல் இந்த பிரமிட் வளர்ச்சி தொடர்ந்து சாத்தியப்படாது என்பதே உண்மை. ஏனெனில், ஒருவர் தனக்குக் கீழ் நான்கு பேர்களைச் சேர்க்கிறார் என்றால், பதினேழாவது வரிசை வரும் போது இந்த முக்கோணத்தில் இருக்கும் மொத்த மக்கள் தொகை ஆயிரம் கோடியைத் தொட்டிருக்கும்.**

மட்டுமே கிடைக்க கூடிய மூலிகையில் இருந்து தயாரிக்கப்பட்ட விசேஷமான பானம்'' என்றவர் தொடர்ந்தார், ''இன்றைக்கு நாம் சாப்பிடுவதெல்லாம் சரி விகிதமான போஷாக்கு உணவு கிடையாது. அதே மாதிரி எதுல பார்த்தாலும் பூச்சிக் கொல்லி மருந்தப் போட்டு தயாரிக்கிறான். உடம்புக்கு போதுமான சத்துக்கள் கிடைக்காததோடு பலவகையான நச்சுக்களும் உடம்பில் சேர்ந்து கொண்டே போகிறது. இதனால பலவிதமான நோய்கள் உடம்பில் உருவாவதோடு உடல் எடையும் கண்டபடி அதிகரிச்சிட்டே போகுது. இதுல, எங்களோட திட்டம் என்னான்னா, முதல்ல Cleansing regime (தூய்மைப்படுத்தும் செயல்திட்டம்). முதல் வாரத்துக்கு உங்களோட காலை உணவுக்கு பதிலாக இந்த பானத்தை மட்டும் குடிக்கணும்.''

எனக்கு பிலால் கொடுத்த பானத்தைக் குடித்ததில் இருந்தே கொஞ்சம் போதையாகவும் தள்ளாட்டமாகவும் இருந்தது. ''சார், முதல்ல உங்க கம்பெனி பேர் என்னாங்க?''

''ஹெர்பாலைஃப் (Herbalife). சரி உங்களுக்கு கார்டு போட்டு விடலாமா? முதல் தவணையா ஐந்தாயிரம் ரூபாய் கட்டி விடுங்க'' அட்டை ஒன்றைக் கையில் எடுத்துக் கொண்டு எதிர்பார்ப்போடு என்னைப் பார்த்தார். லேசான தள்ளாட்டமும் தடுமாற்றமுமாக இருந்தாலும் உடனடியாக ஓடிப் போய் விடவேண்டும் என்று தோன்றியது.

''கார்டு போட வேண்டாம். நான் வீட்டில் கேட்டு விட்டு வருகிறேன்'' என்றேன்.

''ம்ம்ம்.. நீங்க நம்பலைன்னு தெரியுது. எங்களோட ரிசல்ட்ஸ் உத்திரவாதமானது. வேணும்னா ஏற்கனவே இதால பயனடைஞ்சவங்களை கேட்டுப் பாருங்களேன்'' என்று என்னிடம் சொன்னவர், ''மாலா, பிலால் இங்க வாங்க'' என்று வெளியே பார்த்து குரல் கொடுத்தார். எந்த விளக்கத்துக்கும் அப்போதைக்கு நான் தயாராக இல்லை.

''இல்லைங்க. நான் கொஞ்சம் விசாரித்து விட்டு சொல்கிறேன்'' என்றவாறே கிளம்பினேன். இதற்குள் மாலாவும், பிலாலும் ஏதோ விளக்குவதற்காக வர, கிட்டத்தட்ட தப்பித்து ஓட வேண்டியதாகி விட்டது.

முன்பு இணையத்தில் "Turning Point" என்று தேடியதில் எந்த தகவல்களும் கிடைக்கவில்லை. இப்போது அவர்கள் நிறுவனத்தின் உண்மையான பெயரான Herbalife என்பதை இணையத்தில் தேடியதும் தகவல்களாக வந்து குவியத் துவங்கின. இதோ ஒரு மோசடியின் வரலாறைக் கேளுங்கள்.

ஹெர்பாலைஃப், 1980-ம் வருடம் அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தின் லாஸ் ஏஞ்செல்ஸ் நகரில் துவங்கப்பட்டது. தனது தாய் ஜோன்னா உடற் பருமனால் அவதிக்குள்ளானதை சிறு வயதிலிருந்தே பார்த்து வளர்ந்ததாகவும், இதற்கு ஒரு தீர்வு கண்டு பிடித்தே ஆகவேண்டும் என்கிற லட்சிய வெறியில் தான் எடைக் குறைப்புக்கான ஊட்டச்சத்து பானத்தை தாம் கண்டு பிடித்ததாகவும் ஹெர்பாலைஃபின் நிறுவனர் மார்க் ஹியுக்ஸ் சொல்லிக் கொண்டார். உடல் எடை குறைவு மாத்திரமின்றி, பொதுவான உடல் நலனுக்கும் தனது தயாரிப்புகள் உகந்தவை என்று சந்தைப்படுத்தினார்.

ஒரு பக்கம் அமெரிக்க நடுத்தர வர்க்கத்தினரிடையே பொதுவாக காணப்பட்ட உடற்பருமன் பிரச்சினை மார்க்கின் நிறுவனத்தை வெகு சீக்கிரத்தில் பிரபலப்படுத்தியது. இன்னொரு பக்கம் மார்க் தனது பொருட்களை சந்தைப்படுத்த வழக்கமான வழிமுறைகளைக் கையாளவில்லை. நேரடிச் சந்தைப்படுத்தும் முறை என்று சொல்லப்படும் மல்டி லெவல் மார்க்கெட்டிங் முறையைக் கையாள்கிறார். ரஷ்யர் ஒருவரால் கண்டுபிடிக்கப்பட்டு அவரது பெயராலேயே அழைக்கப்படும் பொன்ஸி திட்டம் அல்லது பிரமிட் மார்க்கெட்டிங் முறை தான் மல்டி லெவல் மார்க்கெட்டிங் என்று அழைக்கப்படுகிறது.

இந்த முறையின் கீழ், ஒரு நிறுவனத்தின் பொருட்களை நாம் வாங்க வேண்டுமென்றால் அதில் கட்டணம் கட்டி உறுப்பினராகச் சேர வேண்டும். உறுப்பினராகச் சேர்வோர் தமக்குக் கீழே சிலரைச் சேர்க்க வேண்டும். அவர்கள் ஒவ்வொருவரும் தமக்குக் கீழ் சிலரைச் சேர்க்க வேண்டும். இப்படி இந்த முக்கோண இணைப்பு வளர்ந்து கொண்டே போகும். இந்த முக்கோண அமைப்பில் ஒருவருக்குக் கீழ் நான்கு அல்லது ஐந்து வரிசைகளில் நபர்கள் சேர்ந்த பின், முதலாமவருக்கு கமிஷன் கிடைக்கத் துவங்கும். அதாவது, கீழே சேர்பவர்கள் கட்டும் கட்டணத்திலிருந்து ஒரு பெரும் பகுதி நிறுவனத்திற்கும், ஒரு சிறிய பகுதி வரிசையின் மேலே இருப்பவர்களுக்கும் சேரும்.

எம்.எல்.எம் நிறுவனங்கள் சொல்வது போல் இந்த பிரமிட் வளர்ச்சி தொடர்ந்து சாத்தியப்படாது என்பதே உண்மை. ஏனெனில், ஒருவர் தனக்குக் கீழ் நான்கு பேர்களைச் சேர்க்கிறார் என்றால், பதினேழாவது வரிசை வரும் போது இந்த முக்கோணத்தில் இருக்கும் மொத்த மக்கள் தொகை ஆயிரம் கோடியைத் தொட்டிருக்கும். இது

**ஹெர்பாலைஃப் நிறுவனத்தின் பல்வேறு ஊட்டச்சத்து பானங்களில் தடைசெய்யப்பட்ட நச்சு மூலப் பொருட்களான கூக்குவா, கோம்ப்ரி மற்றும் காராஸ்கா உள்ளிட்டவை கலந்துள்ளன. தொடர்ச்சியாக இந்த பானங்களை உட்கொள்வோருக்கு கல்லீரல் சம்பந்தப்பட்ட நோய்கள் வருவது கண்டறியப்பட்டுள்ளது.**

இன்றைய உலக மக்கள் தொகையை விட அதிகம். எம்.எல்.எம் நிறுவனம் ஒன்றின் கணக்குகளை ஆராய்ந்ததில் அந்நிறுவனத்தில் இணைந்துள்ளவர்களில் 99.7 சதவீதம் பேருக்கு வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது கண்டறியப் பட்டது.

எம்.எல்.எம் பாணியிலான பிரமிட் வணிக முறையோடு மக்களின் ஆரோக்கியம் தொடர்பான அச்சுறுத்தல்களையும் சேர்த்து தனது ஊட்டச் சத்து பானங்களை சந்தைப் படுத்திய ஹெர்பாலைஃப் நிறுவனத்தின் இன்றைய மதிப்பு சுமார் 2 பில்லியன் அமெரிக்க டாலர் (சுமார் 11 ஆயிரம் கோடி ரூபாய்). இந்நிறுவனத்தின் தயாரிப்பான பார்முலா 1 என்கிற பானம் வருடாந்திரம் சுமார் 1.2 பில்லியன் டாலர் மதிப்புக்கு விற்பனையாகிறது. நேரடி விற்பனை என்கிற வழிமுறையில் ஊடகங்களில் விளம்பரங்கள் செய்யாமல் தனிநபர்களிடம் விளம்பரங்கள் செய்ததன் மூலம் மட்டுமே ஹெர்பாலைஃப் நிறுவனம் அமெரிக்காவில் நைக் நிறுவனத்திற்கு இணையாக மக்களிடம் அறிமுகம் பெற்றுள்ளது.

இவ்வாறு விளம்பரங்கள் செய்யப்படும் ஹெர்பாலைஃப் நிறுவனத்தின் பல்வேறு ஊட்டச்சத்து பானங்களில் தடைசெய்யப்பட்ட நச்சு மூலப் பொருட்களான கூக்குவா, கோம்ப்ரி மற்றும் காராஸ்கா உள்ளிட்டவை கலந்துள்ளன. தொடர்ச்சியாக இந்த பானங்களை உட்கொள்வோருக்கு கல்லீரல் சம்பந்தப்பட்ட நோய்கள் வருவது கண்டறியப்பட்டுள்ளது. இஸ்ரேல், ஸ்பெயின், சுவிட்சர்லாந்து உள்ளிட்டு பல்வேறு நாடுகளில் ஹெர்பாலைஃப் நிறுவனத்தின் பானங்களை உட்கொண்டவர்களுக்கு ஈரல் பாதிப்பு ஏற்பட்டது மருத்துவப் பரிசோதனைகளில் தெரிய வந்துள்ளது.

ஹெர்பாலைஃப் நிறுவனம் சந்தைப்படுத்தும் பானங்கள் மற்றும் பிற பொருட்களை உணவுப் பொருட்களாக கணக்குக் காட்டுவதன் மூலம், பல்வேறு நாடுகளின் மருந்து கட்டுப் பாட்டு வாரியங்களின் பிடியில் இருந்து நழுவிக் கொள்வது, உணவுப் பொருட்களில் அனுமதிக்கப்பட்டுள்ள இரசாயனப் பொருட்களின் பட்டியலில் இல்லாத வேதிப் பொருட்கள் இருந்தாலும் அவற்றுக்கான சோதனைகளில் இருந்து தப்புவது, இன்னும் சட்ட நடைமுறைகளில் இருக்கும் ஓட்டைகளைப் பயன்படுத்திக் கொள்வது, அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுப்பது உள்ளிட்ட முறைகளிலேயே தொடர்ந்து சந்தையில் தனது இடத்தைத் தக்க வைத்துக் கொள்கிறது.

தற்போது பல்வேறு நாடுகளில் ஹெர்பாலைஃப் நிறுவனத்தின் ஊட்டச்சத்து பானங்களுக்கு தடை விதிக்கப் பட்டுள்ளது. தனது பிராண்டுகளில் ஏதேனும் ஒன்று தடை செய்யப்பட்டால் அதையே வேறு பெயரில் உடனடியாக சந்தைக்குக் கொண்டு வருவதன் மூலம் அரசுகளின் கண்ணில் மண்ணைத் தூவுகினறது அந்நிறுவனம். இந்தியாவில் உணவு மற்றும் மருந்துப் பொருட்களை விற்பனை செய்ய ஏற்கனவே இருக்கும் சட்ட நடைமுறைகள் எண்ணற்ற ஓட்டைகளோடு இருக்கும் நிலையில், மக்கள் இது போன்ற மோசடி நிறுவனங்களிடம் எச்சரிக்கையாக இருப்பதோடு இவர்களைச் சந்திக்க நேரும் போது எதிர்த்துப் போராடவும் முன்வர வேண்டும்.

மாறி வரும் வேகமான வாழ்க்கைச் சூழலில் அதிகரித்து வரும் நோய்கள், இந்நோய்கள் குறித்து மக்களின் பயம், உடல் ஆரோக்கியத்தைப் பேணுவதில் இருக்கும் ஆர்வம் என்று சாமானிய மக்களுக்கு இருக்கும் அச்சங்களையும் எதிர்பார்ப்புகளையும் தனது லாப வெறிக்கு பயன்படுத்திக் கொண்டே இது போன்ற நிறுவனங்கள் வளர்கின்றன.

உலகமயமாக்கல் ஏற்படுத்தியிருக்கும் தாக்கமானது, நடுத்தர வர்க்கத்தினரின் தனிப்பட்ட வாழ்க்கையில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. ஆரோக்கியம், நீண்ட ஆயுள் என்ற பெயரில் எதையும் செய்யத் தயாராக இருக்கிறார்கள் நடுத்தர வர்க்கத்தினர். சில்லறைப் பிரச்சினைகளுக்கும் அஞ்சுகிறார்கள். இந்த இடைவெளிக்குள் மோசடியான வணிக நடைமுறைகளைப் பின்பற்றி நுழைகின்றன ஹெர்பாலைஃப் போன்ற நிறுவனங்கள். உடல் ஆரோக்கியத்தை மீட்டெடுப்பதற்கும், உடல் எடையை சரியான அளவில் பராமரிப்பதற்கும் முறையான உடற்பயிற்சியும், ஏதேனும் விளையாட்டுகளில் ஈடுபடுவதும், உடல் உழைப்பில் ஈடுபடுவதும், சரிவிகித உணவுத் திட்டங்களைப் பின்பற்றுவதுமே சரியான வழி. இதற்கு வேறு குறுக்குவழிகளைத் தேடினால், ஹெர்பாலைஃப் போன்ற மோசடி கும்பலின் வலையில் தான் விழ வேண்டியிருக்கும்.




● தமிழரசன்

பின்குறிப்பு :

**ஹெர்பாலைஃப் நிறுவனத்தின் வளர்ச்சிக்கு மோசடியான வணிக நடைமுறை மட்டுமே காரணமல்ல. அதன் நிறுவனரான மார்க்கைச் சுற்றி கவனமாக பின்னப் பட்டிருந்த வழிபாட்டுக்குரிய ஆளுமை (personality cult) குறித்த பிம்பங்களும் இதில் முக்கிய பங்காற்றியது. ஆரோக்கியமாக வாழ்வது குறித்தும் இயற்கை உணவுகள் உட்கொள்வது குறித்தும் அவர் நடத்திய கருத்தரங்கங்களும் உரைகளும் பிரபலமானவை. மார்க் தனது 44-வது வயதில் அதீதமாக போதைப் பொருள் உட்கொண்டதாலும் குடிப் பழக்கத்தினாலும் இறந்து போனார்.**

# வர்க்கம்

ஏதோ ஒரு பிரபலமான வெளி நாட்டு கம்பெனிக்கு உடல்தானம் செய்தவன் போலிருந்தது அவனது தோற்றம்.சட்டைப் பை, காலர், டீ சர்ட்டின் முன் பக்கம், பின் பக்கம் ஏன் மூச்சுக் காற்றைக் கூட கம்பெனி விளம்பரத்துக்கு இழுத்து விட்டவன் போல, ஒரு தினுசாக சுற்றுப்புறத்தை அருவெறுத்தவன் போல முகத்தைச் சுழித்துக் கொண்டு மூச்சு விட்டான். வேறு வழியில்லாமல்இந்தப் பேருந்தில் ஏறியவன் போல பேருந்துக்குள் கூடுவிட்டுக் கூடு பாய்ந்து கொண்டிருந்தார்கள் மக்கள்.

வெயிலுக்குத் தொப்பி, காலுக்கு கவர்ச்சியான ஷீ, நெஞ்சுப் பகுதியில் உள்ள டீ சர்ட் பட்டனில் ஸ்டைலாக தூளியாடிய கூலிங் கிளாஸ் என அனைத்து அம்சத்திலும் அவன், அந்த சிறு நகரப் பயணிகளிடம் வேறுபட்டுத் தெரிந்தான். மற்றவர்களைப் போலல்லாமல் நடை, உடை, உடல் மொழியில் மாறுபட்டு இருப்பதனாலேயே ஒரு விதத் தனித்துவமான பெருமிதமும் அவன் பார்வையில் மிதந்தது. அடித்துப் பிடித்து ஏறிய பயணிகளை நாகரிக மற்றவர்கள் போல் வெறித்துப் பார்த்து விட்டு, தனக்கான தனியிடத்தை இந்த உலகம் விட்டு வைத்திருக்கிறதா என்பது போல பேருந்துக்குள் நோட்டமிட்டான்.

பள்ளிப் பிள்ளைகள் அவனது தோற்றத்தையும், அவனது விலையுயர்ந்த தோள் பையையும் உற்றுப் பார்க்க, அவனது தசைக்கோளங்களில் பெருமிதம் ஏறியது. பேருந்தில் அனைத்து இருக்கைகளும் நிரம்பி, ஒன்றில் மட்டும் ஜன்னலோரம் ஒரு முதியவரும், பக்கத்தில் நரைத்த தலை, கலைந்த தாடியுடன் பழுப்பு வேட்டியை மடித்துக் கட்டிய வண்ணம், வாயைக் குதப்பிக் கொண்டு வெற்றிலை மணத்துடன் ஒருவர் உட்கார்ந்திருந்தார். அவர் பக்கத்தில் மட்டும் ஒரு இடம் காலியாக இருந்தது.

இதையும் விட்டால் தனது பெருமிதத்தின் சுமையை ஒன்றரை மணி நேரம் தாங்கிக்கொண்டு நிற்கமுடியாது என்பதால், இருக்கிற இடத்தில் பக்கத்தில் உள்ள பெரியவருடன் ரொம்பவும் ஒட்டி விடக் கூடாது என்ற எச்சரிக்கையுடன் மடியில் பையை வைத்துக்கொண்டு பக்குவமாக அமர்ந்து கொண்டான். ''சே! வேட்டிய அவிழ்த்து விட்டுட்டாவது உக்காரலாம். அழுக்கு பிடிச்ச காலோட அப்படியே உட்காந்திருக்காரு'' என்று மனதில் எண்ணங்கள் ஓட அவரை ஒரு ஸ்கேன் பார்வை பார்த்துவிட்டு உடலைக் குறுக்கிக் கொண்டான்.

''தம்பி நல்லா உக்காருங்க! '' வாய் வழிய வாஞ்சையுடன் அவர் கொஞ்சம் தள்ளி இடம் கொடுத்தாலும், இந்த வெத்தல பாக்கு எச்சி தெறிக்குறதுக்கு பேசாமலே இருந்திருக்கலாம்! என்ற முகச்சுழிப்புடன் ''ஓ.கே! ஓ.கே!'' என்று வெடுக்கென தலையாட்டிக் கொண்டான். பெரியவர் திரும்பவும் பேசுவதற்கான முகக்குறிப்பைப் பார்த்து விட்டவன், வேண்டுமென்றே வேறு பக்கம் முகத்தைத் திருப்பி நோட்டமிட்டான். திடீரென ஒரு சுவிங்கத்தை எடுத்து வாயில் போட்டுக்கொண்டு சூழலை மென்று விழுங்குவது போல பற்களை அழுந்த அசைத்து சுவிங்கத்தைப் புரட்டி எடுத்தான். அவன் சுவிங்கத்தை எடுத்ததும், அதன் மேல் லாவ



கத்தையும் பக்கத்திலிருந்த பெரியவர் வேடிக்கையாகப் பார்த்துக் கொண்டிருந்தார்.

வெற்றிலை மெல்லும் பெரியவரின் வாயை யாரும் விசேசமாக வேடிக்கை பார்க்காமல், இடது பக்கத்தில் நின்றிருந்தவர் சுவிங்கம் மெல்லும் தன் வாயைப் பார்த்தது, உலகமே தன்னை உற்றுப் பார்ப்பது போல அவனுக்கு 'கெத்து' கொடுத்தது. மேலும் வெற்றிலைக்காக அசையும் வாயை விட சுவிங்கத்துக்காக அசையும் தனது வாய் நாகரிகத்தின் நுழைவாயில் என்பது போல கர்வம் பிறந்தது போலவும், சுவிங்கத்தை மென்றுகொண்டே சுற்றிலும் இருப்பவர்களை ஒரு மேல் பார்வை பார்த்துக்கொண்டான்.

பையின் சைடு ஜிப்பைத் திறந்து திடீரென கை அகலப் பொருளை எடுக்க, ஏதோ மந்திரவாதி திடீரென பைக்குள்ளிருந்து மண்டை ஓட்டை எடுத்தது மாதிரி திடுக்கிட்டும், ஆர்வத்துடனும் பக்கத்திலிருந்த பெரியவர் முதல் நின்றிருந்தவர்கள் வரை அதையே நோட்டமிட்டனர். கை அகல செல்போனின் டச் ஸ்கிரீனில் அவனது நுனிவிரல் விந்தை புரிய, ''ஏய்! இங்க பார்ரா. என்னமோ வெத்தலைக்கு சுண்ணாம்பு தடவற மாதிரி இப்படி இப்படிங்குறாரு, என்னமா நிறம் மாறுது...'' இவ்வளவு மாடர்னான செல்போனை ஒரு வெற்றிலையோடு உவமானம் சொல்ல, பக்கத்தில் வாய்திறந்தவரை ஒரு 'மாதிரியாக' பார்த்து விட்டு மேற்கொண்டு டச் ஸ்கிரீனை அலை அலையாக எழுப்பிக் கொண்டிருந்தான்.

''யா! ஆம் சங்கர். ஸாரி பார் தடிலே. நெக்ஸ் வீக், ஐ வில் அரேன்ஞ்ச். ஸ்யூர், யா யா! பை! தாங்க் யூ!'' இந்த முறை டச் ஸ்கிரீனுக்கு பதில் பக்கத்தில் உள்ளவர்கள் அவனது 'டச்' உதடுகளை வேடிக்கைப் பார்த்தனர். பெரிய எடத்துப் புள்ள போல இருக்கு! என்று பொல பொலவென்று ஆங்கிலம் உதிர்த்த அவனது வேகத்தைப் பார்த்து, ''தம்பி! காரக்குடிங்களா? இல்ல வெளிநாட்லேந்து வாறிங்களா?'' கேட்டது பெருமையாக இருந்தாலும், கேட்டவரின் தோற்றம் திருப்தியளிக்காதது போல, ''நோ! ஜஸ்ட் எ விசிட்!'' என்று இயல்பு போல பேசியவன், பிறகு உங்களுக்கு புரியாதில்ல என்பது போல பாவனை செய்தவன், ''சும்மா, வேற வேலையா!'' என்று நறுக்கென முடித்துக் கொண்டான்.

பேச்சும் புரியல, ஜாடையும் புரியல என்பது போல அவன் பார்க்காத போது அவனை சைடாக பார்த்துக் கொண்ட பெரியவர், நமக்கேன் வம்பு என்பது போல பேச முற்படாமல் வேறு பக்கம் பார்க்கலானார்.

''எம்மாம் நெணல் கெடக்கும், ரோட்ல ஒரு மரம் தெரியுதா பாரு! வெக்க காத்து மூஞ்ச உரிக்குது!'' பெரியவர் ஊரைப் பார்த்து பேச, ''ஆமாம் ரோட்டோர வய வரப்பல்லாம், பிளாட்ட போட்டு புட்டானுவ, இருக்கற மரத்தயும் ரோட்ட அகலப்படுத்துறேன்னு வெட்டி சாய்ச்சிபுட்டானுவ. என்னா புல்லு, பூண்டு கெடக்கு? மொதல்ல வீடு மொழுவ மாடு சாணி போடுதா, சொல்லு? காலம் கெட்டுப்

பெரியவர் தாடியை விரல்களால் நீவிக் கொண்டே, அவனது மனம் வீசும், மழ மழவென்ற சேவிங் செய்த முகத்தையும், கைகளில் உள்ள காஸ்ட்லி பொருட்களையும் ஒருவித ஆராய்ச்சியுடன் குழந்தை உற்று நோக்கியது.

போயி, எல்லாம் 'ஸ்பீடா' போறானுவளாம், ஸ்பீடா!'' ஜன்னலோரப் பெரியவர் பதிலுக்கு விண்டு வைக்க, பெரிசு எதையோ குத்திக்காட்டுவது போல் உள்ளது என்று அவன் அதுவரை ஏறிடாத அவரை எட்டி ஒரு பார்வை பார்த்துக் கொண்டான்.

சிறிது நேரத்தில் அவனை வேடிக்கைப் பார்த்தவர்கள், ஆளாளுக்கு தனக்குள் செட்டு சேர்ந்து கொண்டது போல, தங்களுக்குள் பேசிக் கொண்டே வந்தார்கள். சாதாரண கிராமத்து மனிதர்களிடம் சகஜமாகப் பழகுவதற்கு அவனுக்கு மனதளவில் விருப்பம் இல்லாவிடினும், சிறிது நேரத்திற்கு அவனை யாருமே சட்டை செய்யாதது, தனிமைப்பட்டது போல் இருந்தது. அவனே உற்றுப் பார்த்தாலும், பக்கத்திலிருந்தவர்கள் அவர்கள் பாட்டுக்கு தமக்குள் பேசிக்கொண்டே, ஊர், வயல், தண்ணீர், விவசாயம், மழை என்று தேவையான விசயங்களை அலசி விவாதித்து வர, அதற்குள் கலந்து பேசவும், விவரம் தெரியாமல் அந்நியப்பட்டது போல இருந்தது அவனது மனநிலை.

''தோ... தோ... இத பாரு! ஊரு வந்திருச்சி... அழாத... இந்தா மம்மு! சாப்புடு! தோ... பாப்பா பாரு... தோ...'' என்னென்னவோ சொல்லி சமாதானப் படுத்தினாலும் அந்தக் குழந்தை பெரிய குரலெடுத்து அழ ஆரம்பித்தது. ''தோடு பாரும்மா... அய்... பஸ்சு... ட்ரூ... வேகமாக போவுது பாரு! தோ... பழம்! சாப்பிடுறீ... தங்கம்!'' எதைக் கொடுத்தாலும் தூக்கிக் கடாசுவது போல கையை வீசி, காலை உதைத்து ஆ..ங்.. ஆங்... என்று ஊரைக்கூட்டியது குழந்தை.

முன்னிருக்கையில் குழந்தை வீறிட்டு அழ, இந்தச் சந்தர்ப்பத்தில் தானும் சக பயணிகளிடம் கலந்து கொள்வது போல, தானும் முயற்சியெடுத்தான் அவன், ''ஹாய்... அழக் கூடாது... ந்தா செல்போன்... டச் ஸ்கிரீன் படம் பாரு...'' அவன் மீண்டும் முயற்சித்து ''இங்கவா!'' எனக் கையை வேறு நீட்ட, அது முன்பைவிட இன்னும் பயந்து அலறியது போல கத்த, திடீரென பக்கத்திலிருந்த பெறியவர், ''ஏன் ஆயி! எங்க செல்லம்ல, தங்க சம்பால்ல ரோ... ரோ... ரோ... அழக் கூடாது, ஏம்மா பிள்ளய இப்படி காத்தோரம் கொடு'' என்று வெற்றிலை பாக்கு மணக்க! எழுந்து இரு கரம் நீட்ட... அதுவரை குமுறி அழுத குழந்தை வெடுக்கென பெரியவர் கைக்கு அழுதுகொண்டே தாவியது.

நரைத்த தாடியில் முகம் சேர்க்க, ''அய்யய்யோ தங்கம்... அழுது முகமெல்லாம் வேர்த்திடுச்சே...'' என்று அழுக்குத் துண்டில் குழந்தையைத் துடைக்க, அது செருமிக்கொண்டே, அவர் முகத்தை உற்றுப்பார்த்து சந்தேகத்துக்கிடமின்றி சேர்ந்து கொண்டது. பெரியவர் தாடியை விரல்களால் நீவிக் கொண்டே, அவனது மனம் வீசும், மழ மழவென்ற சேவிங் செய்த முகத்தையும், கைகளில் உள்ள காஸ்ட்லி பொருட்களையும் ஒருவித ஆராய்ச்சியுடன் குழந்தை உற்று நோக்கியது. பளிச்சென, பந்தாவான லைஃப் ஸ்டைல் உள்ள தன்னிடம் வராத குழந்தை, அந்த அழுக்கான பெரியவரிடம் தாவியதைக் கண்டு அதிர்ச்சிக்குள்ளானவன் போல் அவனும் குழந்தையையே உற்று நோக்கி யோசிக்க ஆரம்பித்தான்.

• சுடர்விழி

# ஒப்பந்தத் திருமணத்தின் பெயரில் ஷேக்குகள் விபச்சாரம்

பாலியல் சுற்றுலா என்ற பெயரில் இந்தியாவுக்கு வரும் மத்திய கிழக்கு மற்றும் ஆப்பிரிக்க நாடுகளைச் சேர்ந்த பணக்கார முசுலீம் ஆண்கள், மாதக் கணக்கில் ஒப்பந்த மனைவிகளை மணந்து கொண்டு, ஒப்பந்த காலம் முடிந்தவுடன் தலாக் செய்கின்றனர். இதன் மூலமாக தங்களின் பாலியல் வக்கிரத்தைத் தீர்த்துக்கொள்வதோடு, மதத்தின் புனிதத்தையும் காத்துக்கொள்கின்றனர் (விபச்சாரத்தில் ஈடுபடுவது மார்க்கத்திற்கு எதிரானதாம்).

இத்தகைய ஒப்பந்தத் திருமணங்கள் தென் இந்தியாவின் ஹைதராபாத் நகரில் சமீப காலமாக அதிகரித்து வருகின்றன என்று இசுலாமியப் பெண்கள் உரிமைக்காகப் பாடுபடும் அமைப்புகள் தெரிவிக்கின்றன.

பணம் கொழுத்த வெளிநாட்டவர்கள், உள்ளூர் ஏஜெண்ட் மற்றும் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட 'காஜி' என்று அழைக்கப்படும் இசுலாமிய ஷரியத் சட்ட நீதிபதியின் துணையோடு ஏழ்மையில் உழலும் முசுலீம் குடும்பங்களின் மீதும் அவர்கள் வீட்டு இளம் பெண்களின் மீதும் இந்த அநியாயத்தைத் திணிக்கின்றனர்.

ஹைதராபாத்தை சேர்ந்த 17 வயது இசுலாமிய இளம்பெண் நௌஷீன் தபசூம் தனக்கு நடந்த இத்தகைய ஒப்பந்தத் திருமணத்தை வெளிச்சத்துக்கு கொண்டு வந்துள்ளார். உறவுக்காரப் பெண் ஒருவரால் ஹோட்டலுக்கு அழைத்துச் செல்லப்பட்ட நௌஷீன், அங்கு ஏற்கெனவே இருந்த 3 பதின்ம வயது பெண்களுடன் சேர்த்து சூடான் எண்ணெய் கம்பெனி மேல் அதிகாரி ஒருவரிடம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளார்.

மணமகன் உசாமா இப்ராகிம் முஹம்மதுக்கு வயது 44, திருமணமாகி இரண்டு குழந்தைகளுடன் சூடான் தலைநகர் கார்தூமில் வாழ்ந்து வருபவர். ஹோட்டலில் பார்த்த நான்கு பெண்களில் நௌஷீனை தேர்வு செய்த அவர், பெண்ணின் வீட்டிற்கு முறைப்படி வந்து காஜி முன்னிலையில் திருமணம் செய்து கொண்டுள்ளார். நான்கு வாரத்துக்கு ஒப்பந்த மனைவியாக இருப்பதற்காக £1200 - இந்திய மதிப்புக்கு ஒரு லட்சம் ரூபாய் பணம் - பெண்ணின் பெற்றோருக்கு வழங்கப்பட்டது.

திருமணமான மறுநாள் நௌஷீன் வீட்டிற்கு வந்த உசாமா தன்னுடன் பாலியல் உறவில் ஈடுபடும்படி அவளைக் கட்டாயப்படுத்தியுள்ளார். அதற்கு நௌஷீன் ஒத்துழைக்கவில்லை. பணம் தந்து ஏமாந்த உசாமாவுவிடம், மகளை எப்படியும் சமாதானப்படுத்தி அவருடன் உல்லாசமாக இருக்க வைப்பதாக வாக்குறுதி அளித்து அனுப்பிவைத்த நௌஷீனின் பெற்றோர், பின்னர் அவளை அடித்துப் புடைத்துள்ளனர். 'புது மாப்பிள்ளைக்கு இணங்கவில்லை என்றால் தண்டனை உறுதி' என்று எச்சரித்தனர்.

பெற்றோரின் கட்டாயத்திற்கு அடிபணியாத நௌஷீன், தன்னைத் தற்காத்துக்கொள்ளும் பொருட்டு ஹைதராபாத் மோகல்புரி பகுதியில் உள்ள அவளது வீட்டிலிருந்து தப்பி வெளியில் ரோந்து சென்று கொண்டிருந்த போலீசாரிடம் சரணடைந்திருக்கிறார். நடந்த கொடுமையைத் தைரியமாக விளக்கிய நௌஷீன், போலீசாரிடம் புகார் செய்துள்ளார். அவரது புகாரின் அடிப்படையில் சூடான் நாட்டைச் சேர்ந்த ஒரு மாத மாப்பிள்ளை உசாமா, நௌஷீனின் உறவுக்கார பெண், திருமணத்தை நடத்தி வைத்த காஜி ஆகியோரை போலீசார் கைது செய்துள்ளனர்.

நௌஷீனின் பெற்றோர்கள் தலைமறைவாகி விட்ட காரணத்தால் அவர்களைக் கைது செய்ய பிடியாணையுடன் போலீசார் காத்துக்கொண்டு இருக்கின்றனர். 18 வயது கூட நிரம்பாத மைனர் பெண்ணை திருமணம் முடித்ததற்காகவும், பெண்மையை மானபங்கம் செய்யும் விதத்தில் கிரிமினல் சதியில் பங்கெடுத்ததாகவும் நௌஷீன் பெற்றோர்கள் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

உசாமா சல்லாபத்திற்காக வழங்கிய 1 லட்சம் ரூபாய் பணம், நௌஷீனின் உறவுக்காரப் பெண் மும்தாஜ் பேகத்திற்கு 20,000 ரூபாயும், பெற்றோருக்கு 70,000 ரூபாயும், காஜி மற்றும் உருது மொழி பெயர்ப்பாளருக்கு தலா 5000 ரூபாயுமாகப் பங்கிட்டு பைசல் செய்யப்பட்டுள்ளதாக வழக்கை விசாரிக்கும் இன்ஸ்பெக்டர் விஜயகுமார் கூறுகிறார்.

மேலும் ''திருமணச் சான்றிதழில் மணமகனின் சுற்றுலாப்பயணம் முடிவில் இருவருக்கும் விவாகரத்து வழங்கும் ஒப்புதலுடன் கூடிய நிபந்தனைகள் தலாக்னாமா என்ற பிரிவின் கீழ் தெளிவாக இடம் பெற்றுள்ளன'' என்றும் இன்ஸ்பெக்டர் விஜயகுமார் விவரிக்கிறார்.

நௌஷீன் தந்தையை விட வயதில் மூத்த உசாமா, சூடானில் பாலியல் உல்லாசத்தில் களிக்க வேண்டும் என்றால் இங்கு செலவு செய்ததை விட 3 மடங்கு அதிகமாக செலவழிக்க வேண்டும். விபச்சாரம் தடை செய்யப்பட்ட சூடானில் குறைவான பெண்களே இதில் ஈடுபடுகின்றனர். ஆகவே பாலியல் இன்பம் தேவையெனில் இரண்டாவது திருமணம் செய்துகொள்ள வேண்டும். இந்தியாவைப் பொறுத்தவரை பெண்கள் குறைந்த விலைக்கு கிடைப்பதால், சுற்றுலா வரும் இசுலாமிய செல்வச் சீமான்கள் குறைந்த நாட்கள் இங்கு தங்கினாலும் பாலியல் உறவுக்காக இத்தகைய காரியங்களில் ஈடுபடுகின்றனர்.

**மதத்திற்கு விரோதமில்லாமல் ஷேக்குகள் விபச்சாரம் செய்கிறார்கள்!**



அதிகமான பெண் குழந்தைகள் உள்ள ஏழ்மையான குடும்பங்களில் அவர்களைப் பராமரிப்பதைத் தாண்டி எல்லோருக்கும் திருமணம் முடித்து வைப்பது என்பது மிகவும் கடினமான காரியம். ஆகவே ஒன்றுக்கும் அதிகமான இந்த ஒப்பந்தத் திருமணங்கள் மூலமாக பணம் ஈட்டி எதிர்காலத்தில் திருமணம் நடத்த சேமிக்கிறார்கள், ஏழை இசுலாமியப் பெற்றோர்கள்.

ஹைதராபாத் பெண்கள் மற்றும் குழந்தை நலவாழ்வு சமூக அமைப்பைச் சேர்ந்த ஷிராஸ் அமீனா கான் என்ற பெண், நகரத்தில் ஒரு மாதத்திற்கு 15 ஒப்பந்தத் திருமணங்கள் நடப்பதாகவும், அவை கணிசமாக அதிகரித்துக் கொண்டே போவதாகவும் கூறியுள்ளார்.

நகரத்தில் சட்டத்திற்குப் புறம்பான பல திருமணங்கள் நடக்கின்றன என்று ஒப்புக்கொள்ளும் இன்ஸ்பெக்டர் விஜயகுமார், இப்போது கைதாகி இருக்கும் உசாமா, கார்தூமில் நண்பர் ஒருவர் இந்தியாவுக்கு சுற்றுலா வந்தபோது 40 நாள் மனைவியை ஒப்பந்த முறையில் மணமுடித்து வைத்து இருந்ததாகக் கேட்டு, அதைத் தானும் அனுபவிக்கும் நோக்கத்துடன் இந்தியா வந்ததாக அளித்த வாக்குமூலத்தையே ஆதாரமாகக் குறிப்பிடுகிறார்.

பெற்றோர்கள் வீட்டிலிருந்து தப்பித்த நௌஷீன் இப்போது அரசாங்கப் பெண்கள் காப்பகத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளார். தனக்கு நடந்ததைப் போல பிற பெண்களுக்கு இனிமேல் நடக்கக் கூடாது என்பதற்காகத் தன் குடும்பத்தினரை எதிர்த்து போலீசில் புகார் தந்துள்ளதாக தெரிவிக்கிறார்.

''அறியாமையில் நடப்பது என்னவென்று தெரியாமல் இந்தத் திருமணத்திற்கு நான் ஒப்புக்கொண்டேன். அவர்கள் என்னைக் கட்டாயப்படுத்தினார்கள். என் உண்மையான வயதை மறைத்து, பொய்ச் சான்றிதழ் தயாரித்து என்னை 24 வயதுப் பெண்ணாகக் காண்பித்தனர். பெண்களைத் தங்கள் இன்பத்திற்காகவும், சுயநலத்திற்காகவும் பயன்படுத்துகிறார்கள். இதனை அம்பலப்படுத்தவே நான் போலீசிடம் சென்றேன்.''

''என் பெற்றோரை எதிர்க்க எனக்கு துணிச்சல் தேவைப்பட்டது. எனக்கு வீட்டுக்குப் போக பயமாக இருப்பதால் மறுபடியும் அங்கு செல்ல விருப்பமில்லை'' என்று தனக்கு நடந்த கசப்பான அனுபவத்தைப் பிறர் நலத்திற்காகப் பகிரங்கமாக்கியிருக்கிறார் நௌஷீன் தபசூம்.

**மேற்கத்திய சீமான்கள் தமது காம வக்கிரங்களைத் தீர்த்துக்கொள்ள, பாலியல் கேளிக்கை அடங்கிய சுற்றுலாவாக, இந்தியா, தாய்லாந்து, பங்களாதேஷ் போன்ற நாடுகளுக்குப் படையெடுத்து வருகின்றனர். ஹைதரபாத்திற்கு மட்டும் அரபுலகச் சீமான்கள் வருகின்றனர்.**

'பெண்கள் மேடை ஏறிப் பாடினால் இசுலாமுக்கு விரோதமானது, இளம் பெண் பர்தா அணியாமல் வெளியில் வந்தால் காமத்தைத் தூண்டுகிறாள்' என்று பெண் அடிமைத்தனத்தை இறுக்கமாகப் பிடித்துவைத்து இருக்கிறது இசுலாம்.

'பெண் விபச்சாரத்தில் ஈடுபட்டால் அவளைக் கல்லால் அடித்துக் கொல்ல வேண்டும்' என்று போதிக்கும் மதம், காமவெறி பிடித்த ஆண்களைத் தண்டிப்பதற்கான அடித்தளமில்லாமல், பாலியல் இன்பத்தைத் தீர்த்துக்கொள்ள அலையும் ஆண்களுக்கு நான்கு திருமணங்கள் வரை செய்து கொள்ளும் உரிமையை வழங்குகிறது. அந்தத் திருமண உரிமையைத்தான் அரபு ஷேக்குகள் விபச்சாரமாகப் பயன்படுத்துகின்றனர்.

நடக்கும் நூற்றுக்கணக்கான ஒப்பந்தத் திருமணங்களில் ஒன்று வெளிச்சத்திற்கு வந்துள்ளது. போலி ஆவணங்கள் மூலமாகப் பணம் கொடுத்து, ஒரு பெண்ணை விலைக்கு வாங்கி, ஒரு பண்டத்தைப் போல நுகர நினைக்கும் அட்டூழியத்தை நினைத்துப் பார்த்தாலே ஆபாசமாக உள்ளது.

மேற்கத்திய சீமான்கள் தமது காம வக்கிரங்களைத் தீர்த்துக்கொள்ள, பாலியல் கேளிக்கை அடங்கிய சுற்றுலாவாக, இந்தியா, தாய்லாந்து, பங்களாதேஷ் போன்ற நாடுகளுக்குப் படையெடுத்து வருகின்றனர். ஹைதரபாத்திற்கு மட்டும் அரபுலகச் சீமான்கள் வருகின்றனர். இந்தியாவின் ஏழை இசுலாமியச் சிறுமிகளை கிழட்டு முசுலீம் ஷேக்குகளுக்கு திருமணம் முடிப்பதின் இன்னொரு வடிவம்தான் இப்போது நடக்கும் இத்தகைய ஒப்பந்தத் திருமணங்கள்.

இத்தகைய சம்பவங்களைத் தடுத்து நிறுத்த இந்திய அரசாங்கமோ, பிற்போக்குவாத இசுலாமிய மதவாதிகளோ எந்த நடவடிக்கையும் எடுக்கப் போவதில்லை என்பதுதான் நிதர்சனம். இரு தரப்புக்கும் அரபு ஷேக்குகளின் பணம் தேவை!

● ஜென்னி



ஷேக்குகளுக்கு விற்கப்படும் ஹைதராபாத்தின் ஏழை முசுலீம் சிறுமிகள்!

# காான்ஸ்டபிள் அய்யம் பெருமாள் கதை!

இந்தக் காற்று எங்கேயிருந்து உற்பத்தியாகி வருகிறது என்று தெரிய வில்லை. எப்போதும் வீசிக் கொண்டே யிருப்பதன் நோக்கம் என்னவென்றும் தெரியவில்லை. எங்கிருந்தோ எப்ப டியோ எதற்காகவோ வருகிறது. மரங் களைப் பிடித்து உலுக்குகிறது, தலை மயிரைச் சிலுப்புகிறது. இந்த மரங் களைப் பாருங்கள்; நானும் இந்தப் பூங்காவை எனது சின்ன வயதில் இருந்து பார்த்துக் கொண்டிருக்கிறேன், இவையும் சும்மாவே இருப்பதில்லை. இவற்றுக்கு அலுப்பே ஏற்படாதோ? இந்த மரங்களைச் சுற்றி ஓடியாடும் இந்தச் சிறுவர்களும் தான். இவர்களுக் கெல்லாம் அலுப்பே வராதா?

தம்பி, நீங்கள் கொஞ்சம் வசதியாக சாய்ந்து உட்காருங்கள். என்னுடைய கதை பெரிது. என்ன சொன் னேன்?ஆங்... சிறுவர்கள். பாருங்க ளேன், ஓவென்று கத்திக் கொண்டு இலக்கின்றி ஓடிக் கொண்டே இருக்கி றார்கள். எதற்கு ஓடுகிறார்களோ தெரி யவில்லை. இவர்கள் மரங்களைக் கவனிக்கும் அளவுக்கும் கூட இங்கேயே அமர்ந்திருக்கும் என்னைக் கவனிப்பதில்லை. மரியாதை தெரியாத வர்கள். சரி, அவர்களை விடுங்கள்; நான் என்னைப் பற்றிச் சொல்கிறேன், கேளுங்கள்.

நான் அய்யம்பெருமாள். முன் பொரு காலத்தில் இந்தப் பெயரை உச்ச ரிக்க வாயே வராது ஊர்க்காரப் பயல் களுக்கு. எனக்கு இரண்டு பெண்டாட் டிகளும், பதிமூணு பிள்ளைகளும் உண்டு. அதில் எட்டு பையன்கள், அஞ்சு பெட்டைகள். என்ன முகத்தைச் சுளிக்கிறீர்கள்?எங்கப்பாருக்கு மூணு பெண்டாட்டிகளும், ரெண்டு கூத்தி யாள்களும் உண்டு, தெரியுமா? நான் ரெண்டாம் தாரத்தின் நான்காவது மகன். அம்மாவுக்கும் அப்பாவுக்கும் பதினேழு வயது வித்தியாசம். அப்பா விடம் அம்மப்பா காசு வாங்கியிருந் தார். திருப்ப முடியவில்லை; மகளைக் கொடுத்து விட்டார். அப்பா கடைசி யாக சேர்த்துக்கொண்ட கூத்தியாளுக் கும் அப்பாவுக்கும் இருபத்தியெட்டு வயசு வித்தியாசம்.




அது போகட்டும். நான் என்னு டைய பத்தொன்பதாவது வயதில் பட் டாளத்தில் சேர வேண்டுமென்று ஆசைப்பட்டேன். வேலையும் கிடைத் தது. பங்காளி தான் சொன்னான், அங்கே மீசை மட்டும் தான் முறுக்காக வைத்துக் கொள்ள முடியுமாம். மற்ற படி அதிகாரிகளுக்கு குனிந்து கொடுத் தால் தான் பிழைப்பு ஓடுமாம். இந்த அய்யம்பெருமாளை யார் என்று நினைக்கிறீர்கள்? என் பூட்டனுக்குப் பூட்டன் ராஜா. என் ரத்தம் ஆண்ட ரத்தம். முடியாது என்று சொல்லி வந்து விட்டேன். நிறுத்துங்கள், நீங்கள் அப்படிச் சிரிக்கக் கூடாது.

அதன் பின் என்னுடைய இருபதா வது வயதில் போலீசில் சேர்ந்தேன். அன்றைக்கெல்லாம் கான்ஸ்டபிள் அய்யம்பெருமாள் என்றால் நடுங்கு வார்கள். இப்போதைய தோற்றத்தை வைத்து எடை போடாதீர்கள். தீட்டிய பீச்சுவாவை விட எனது பூட்சுகளின் பளபளப்பு கண்ணைப் பறிக்கும். அதைப் போட்டுக் கொண்டு நடக்கும் போது வரும் டக் டக் சத்தம் இருக்கி றதே... மலம் கட்டிக் கொண்டவனுக் குக் கூட அந்த சத்தத்தைக் கேட்டால் பேதி புடுங்கும். ராயக்கோட்டை ஸ்டே சனில் தான் எனக்கு போஸ்டிங் கிடைத் தது. அது போக்கிரிப் பயல்களுக்கு பேர் போன ஏரியா. அப்போது சீனி வாச அய்யங்கார் தான் அங்கே இன்ஸ் பெக்டராக இருந்தார். கெட்டிக்கார மனுஷன். எவனையும் கை நீட்டி அடித்து தீட்டுப்பட்டுக் கொள்ள மாட் டார். அந்த ஸ்டேசனில் இந்த அய்யம் பெருமாள் தான் எல்லாம்.

இருவத்திரெண்டு வருசம் அந்த ஸ்டேசன்ல தான் சர்வீசு. தப்பு செய்யா தவனைக் கூட ஒத்துக்கிட்டு கைநாட்டுப் போட வைக்கிறதுல நான் கில்லாடின்னு அய்யாவே சொல்லு வாரு. லாடம் கட்றதுன்னா என் னான்னு தெரியுமா தம்பி? துணிமணி யெல்லாம் உரிஞ்சிட்டு மர டேபிள் மேலே குப்புறப் படுக்க வைக்கணும். சரியா முட்டாங்காலுக்குப் பின்னேயும் பொடனிலயும் லத்திக் கம்ப வச்சி அழுத்திப் பிடிச்சிக்கிடணும். லாடம் கட்றதுக்குன்னே தனி லத்தி வச்சிருந் தேன். தெனமும் காலைல விளக் கெண்ண போட்டு வெயில்ல வச்சிடு வேன். வெயில் சாய அது நல்லா முறுக் கேறி இருக்கும். சாதா லத்திக் கம்பை விட இது கொஞ்சம் மொத்தமாவும், நீளமாவும் இருக்கும்.

சாயங்காலம் ஆறு மணி தான் சரியான டைம். அஞ்சு நிமிசம் அடி; அஞ்சு நிமிசம் கேப்பு. நமக்கும் ரெஸ்டு வேணுமில்லையா? ரத்தம் வராது. பெருசா வீக்கம் தெரியாது. கோர்ட்டுல சொன்னாலும் எடுபடாது. ஆனா, உள்ளங்கால்ல இருக்கிற நரம்பு மொத்தமும் அப்டியே சிதைஞ்சி போயிரும். அப்பால அவனால வாழ்நாள் முழுக்க நேரா நிற்கவே முடியாது. சப்பாணி தான். இன்னிக்கும் ராயக்கோட்டைக்குப் போனீங்கன்னா வயசான கேசுங்க எதுனாச்சியும் குட்டிச் சுவத்தாண்ட தடுமாறிட்டே போவும். அது கிட்டே போயி அய்யம் பெருமாளுன்னு சொல்லிப் பாருங்க தம்பி.

**லாடத்துக்கு ஒத்து வராத கேசுங்களுக்கு வேற வைத்தியம் வச்சிருந்தேன். அது குப்புறப் போட்டு லத்தியால புட்டத்தில அடிக்கிறது. உள்ளே தசையெல்லாம் கூழாகிடும். ஒக்கார முடியாது, மல்லாந்து படுக்கவும் முடியாது, நிண்டு கிட்டே தான் எல்லாம். சாவுற வரைக்கும் நிண்டு கிட்டே தான் பீ பேளணும்.**

லாடத்துக்கு ஒத்து வராத கேசுங்களுக்கு வேற வைத்தியம் வச்சிருந்தேன். அது குப்புறப் போட்டு லத்தியால புட்டத்தில அடிக்கிறது. உள்ளே தசையெல்லாம் கூழாகிடும். ஒக்கார முடியாது, மல்லாந்து படுக்கவும் முடியாது, நிண்டு கிட்டே தான் எல்லாம். சாவுற வரைக்கும் நிண்டு கிட்டே தான் பீ பேளணும். என்னோட இருவத்திரெண்டு வருச சர்வீசுல நான் கேட்டதுக்கு இல்லைன்னு எந்த அக்கீஸ்டும் சொன்னதில்லே. எவனைப் புடிச்சாந்தமோ அவந்தான் குத்தவாளி. நிஜத்துல தப்பு செஞ்சவன் மாட்டலைன்னா கூடப் பரவாயில்ல. மாட்டியவன் கதியைப் பாத்தாலே உறக்கத்துல கழியணும். அடுத்த முறை தப்புத் தண்டா செய்யும்போது அய்யம்பெருமாளோட மூஞ்சி கண்ணு முன்னாடி வரணும். வரும்.

நீங்க படிச்சவரு தானே? ஏன் தப்பு நடக்குதுன்னு சொல்லுங்க பார்க்கலாம். பயம் இல்லாம போனது தான் தப்பு நடக்கக் காரணம்.போலீசோட வேலை தப்பைத் தடுக்கறதில்லை தம்பி. பயத்தை உண்டாக்கறது. பயம் வந்தாலே ஒழுக்கமும் வந்துடும். பயம் வர வைக்கணும்னா எவனை வேணும்னாலும் அடிக்கலாம். அடிச்சே கொல்லலாம். நல்லவனோ கெட்டவனோ, போலீசுனா எவனா இருந்தாலும் நடுங்கணும். இதை நான் அப்பவும் நம்பினேன், இப்பவும் நம்பறேன், இனியும் நம்புவேன். இதுக்காகவே என்னோட போலீசு வேலையே போனிச்சி. வேலையில்லாதப்பவும் நான் போலீசாவே இருந்தேன். அந்த முறுக்கு தான் என்னை இங்கே கொண்டாந்து அநாதையா போட்டிருக்கு. இருந்தாலும் சொல்றேன், நாங்கெல்லாம் அடிக்கறதுக்காவே பிறப்பெடுத்தவங்க. போலீசு திமிரு எவனுக்கு ரத்தத்துல ஓடுதோ அவந்தான் போலீசாக முடியும்.

வேலை போச்சின்னு சொன்னேன்ல? இருங்க! அந்தக் கதைய சொல்றேன். ராயக்கோட்டைல அப்ப கொஞ்ச நாளா தொடர்ந்து களவு போயிட்டிருந்தது. இது புது ஆளுங்க, எவன்னு தெரியலை; ஸ்டேசனுக்கு ஒழுங்கா மாமூல் தந்திட்டு களவாங்கற பழக்கமான ஆளுங்க கிடையாது. தெரிஞ்ச பயன்னா அரெஸ்டு கணக்கு காட்டலாம், அடிச்சதுல கொஞ்சத்த மீட்டுக் கொடுக்கலாம். எவன்னு தெரியாம யாரைப் பிடிக்க முடியும்?அதான் தொடர்ந்து ராத்திரி ரவுண்ட்ஸ் போக ஆரம்பிச்சோம். ஒரு மாசம், பகல்லயும் டூட்டி பாத்துட்டு ராத்திரியும் ஊரைச் சுத்தி வந்திட்டு, சுத்தமா கண்ணுல தூக்கமில்லே. உடம்பே சூடேறிப் போனிச்சி. அது கூட பரவால்ல! மேலதிரிகாரிங்க கூப்பிட்டு கெட்ட வார்த்தைலயே திட்றான். பிடிச்சே ஆவனும், எவனையாச்சும் பிடிச்சி நிப்பாட்டியாகணும்.

எவனாச்சியும் ஆப்புடுவானான்னு கண்ணுல வெறியோட அலைஞ்சி திரிஞ்சோம். ஒருத்தனும் சிக்கலை. ஒரு மாசம் இப்படியே போச்சி. அப்ப ராயக்கோட்டைல வாரா வாரம் மாட்டுச்சந்தை நடக்கும். அந்த மைதானத்துக்குப் பக்கம் தான் எனக்கு டூட்டி. ஒருநாள் ராத்திரி மாட்டுச் சந்தை மைதானத்துக் கொட்டகை பக்கத்துல ஒரு உருவம் சுருண்டு படுத்திருந்தது. எழுப்பி யாருன்னு கேட்டேன், பேந்தப் பேந்த முழிச்சான். ஸ்டேசனுக்கு கொண்டாந்துட்டேன். ரெண்டு ரவுண்டு அடிய போட்டப்புறம் சூரமங்கலத்தான்னு சொன்னான். மாடு புடிக்க வந்தானாம், கெடைக்கலையாம். வெள்ளனைக்குத் தான் ஊருக்கு வண்டியாம், அதான் அங்கனயே படுத்திருந்தானாம்.

சரிடா! களவானிப் பயல்ல ஒருத்தன்னு ஒத்துக்கோ, கோர்ட்டுல மூணு மாசமோ ஆறு மாசமோ போடுவாங்க. பொறவு வந்து பாத்துக்கலாம்னு படிச்சிப் படிச்சி சொல்லிப் பாத்தேன், கேட்கலை. நீங்களே சொல்லுங்க தம்பி, ஒரு மாசம் தேடியும் ஒருத்தனும் ஆப்புடலைன்னா எவ்வளவு கேவலம். எவ





னாச்சியும் போலீசுக்கு பயப்படு வானா? இவன உள்ளே போட்டா ஒரி ஜினல் களவாணி தைரியமா வெளியே தலைகாட்டுவானில்லே, பிடிக்கலா மில்லே? பக்குவமா சொல்லிப் பார்த் தோம், கேட்கலை. சோறு வாங்கிக் குடுத்து கெஞ்சிப் பார்த்தேன், கேட் கலை. அந்த ஆத்திரத்துல தான் லேசா பொடனில ஒரு தட்டு தட்டுனேன். சுருண்டு விழுந்தவன் எந்திரிக்கவே இல்ல.


அவன் விதி அவ்வளவு தான்னு எழுதியிருக்கும் போல. நான் என்னா செய்ய முடியும்? போய்ச் சேர்ந்துட் டான். அப்புறம் அது பிரச்சினையாச்சி. தற்கொலைன்னு சொல்லிப் பார்த் தோம். ஜட்ஜைய்யா ஏத்துக்கிடலை. வேலை போச்சி, சம்பளமும் போச்சி. ஊருக்கு வந்திட்டேன். ஆனாலும் கூட வேலை பார்த்த எவனும் என்னை மறக் கல. வேலை போயி இத்தினி வருசமா கியும் மறக்காம மாசா மாசம் வசூலா கிற மாமூல்ல இருந்து ஒரு பங்கைக் கொண்டாந்து கொடுத்துட்டுப் போறாங்க. அன்னிக்கு ஒரு வார்த்தை நான் சொல்லியிருந்தா டிபார்ட் மெண்டு மானம் போயிருக்கும். ஆனா நான் சொல்லல; அந்த நன்றிய அவங்க ளும் மறக்கல.

அப்பாரு சம்பாதிச்ச சொத்து, மாசா மாசம் மாமூலு, எனக்கென்ன கவலை? எவன்கிட்டேயும் சாப்பாட்டுக்கு போயி நிக்க வேண்டிய நிலைல நான் இல்லை. போலீசா இருந்து ஊரையே ஆட்டி வச்சவன், கெவருமெண்டு சம் பளம் வாங்கினவன், நான் எதுக்கு இன்னொருத்தன் கிட்டே கைநீட்டி நிக் கணும்? அதான் வேற வேலைக்குப் போகல. அப்புறம் ஏன் இப்படி பிச் சைக்காரக் கோலத்துல மரத்தடில கிடக் கிறேன்னு தானே கேட்க வர்றீங்க? சொல்றேன்.

எனக்கு ரெண்டு பொண்டாட்டியும் பதிமூணு பிள்ளைகளும் இருக்காங் கன்னு சொன்னேனில்ல? நான் ஊர்க்கு வந்த பின்னே ஒவ்வொருத்த ருக்கா கலியாணம் நடந்தது. எந்தக் கலி யாணத்துக்கும் நான் ஏற்பாடு செய் யலை, கலியாண வேலைகளும் செய் யலை. நான் போலீஸ்காரன், எவங்கிட் டயும் தேவைன்னு போயி நிக்க முடி யுமா? என் முன்னே நடுங்கிட்டு நின்ன இந்த ஊர்க்காரப் பயலுவ முன் னாடி நான் போய் நிக்கவா? முடியா துன்னு சொல்லிட்டேன். எல்லாம் என் பெஞ்சாதிங்க தான் பாத்துக்கிட்டாங்க. கல்யாண நாளுக்கு பட்டை சந்தன மெல்லாம் பூசிக்கிட்டு மண்டப வாசல்லே சேர் போட்டு உக்காந்து கிட்டா போதாதா? இப்படியே ஒரு பத்துப் பதினஞ்சி வருசம் போச்சி.

இந்தப் பதினைஞ்சு வருசத்திலே ரெண்டு பெஞ்சாதிகளும் பூவும் பொட் டுமா போய்ச் சேந்துட்டாளுங்க. நமக் கும் வயசாகி நரம்பு தளர்ந்து ரத்தம் சுண்டிப்போக ஆரம்பிச்சது. அப்பத் தான் எனக்கு ஒரு விஷயம் புரிஞ்சது. என்னதான் முறுக்கு இருந்தாலும், கெவுருதி இருந்தாலும் வயசான காலத் துல நம்ம பாத்துக்கிட ஆளு வேணு மில்லே? கிடைல கெடந்துட்டா யாரு வந்து பீ மூத்திரம் வாரிப் போடுவா? அதான் ரெண்டாம் சம்சாரத்தோட கடேசி மவளை கூடமாட ஒத்தாசையா வச்சிக்கிடலாம்னு முடிவு பண்ணேன். அவளுக்கு தகைஞ்சு வந்த எந்த வர னும் அமைஞ்சிடாம பாத்துக்கிட் டேன். நான் தானே பெத்தேன், என்னை கவனிச்சிக்கிடறது தானே அவளுக்கு முக்கியம், இதுல எந்தத் தப் பும் இல்லைன்னு எனக்குத் தெரியும். ஆனா என் மவனுவளுக்குப் புரியலை.

இப்படித்தான் ஆறு மாசம் முன்னே அவளப் பார்த்திட்டுப் போன பையன் வீட்டுக்கு ஒரு மொட்டைக் கடுதாசி போட்டேன். இதே மாதிரி தான் அதுக்கு முன்னே நாலைஞ்சி வரனை நிப்பாட்டி இருக்கேன். ஆனா, இந்தப் பையன் வீட்டுக்காரவுங்க கடுதாசி யோட வீட்டுக்கு வந்துட்டாங்க. மூத்த மவனுக்கு அதில இருக்கறது என் னோட கையெழுத்து தான்னு தெரிஞ்சி



போச்சி. நான் பார்க்க வளந்த பய, அன்னிய வரைக்கும் என் முன்னே நேரா நிக்க பயந்த பய. ஒரு வார்த்தை எதிர்த்துப் பேசத் தெரியாதவனுக்கு எங்கேருந்து தான் அப்படி ஒரு கோவம் வந்திச்சின்னு தெரியலை. துருப்பிடிச்ச பழைய பம்பு ஸ்டவ்வ எடுத்தி அடிச்சிட்டான்.

நான் எத்தனையோ பேர அடிச்சிருக்கேன். எத்தனையோ பேர் என் கிட்டே கதறியிருக்காங்க. ஆனா வலின்னா என்னான்னு அன்னிக்குத் தான் தெரிஞ்சது. தோள் பட்டை நொறுங்கிடிச்சி; கால்ல கூட எலும்பு முறிஞ்சிருக்கும்னு நினைக்கிறேன். வேற எங்கேயெல்லாம் அடி விழுந்திச்சின்னு எனக்கு சொல்லத் தெரியல. எல்லா இடத்திலேயும் வலிக்கிற மாதிரியும் இருக்கு, வலிக்காத மாதிரியும் இருக்கு. எழுந்து நிக்க முடியலை, நகர முடியலை, உடம்பை அசைக்கக் கூட முடியல. ஒரு மாசம் அப்படியே புழக்கடையலயே கிடந்தேன். திங்கிறது, பேள்றது, மோள்றது எல்லாம் அங்கேயே தான். தரையோட தரையா கெடந்ததுல முதுகுல புண் விழுந்து புழு பூத்திருச்சி. அதுக்கு மேல என்னை வீட்ல வச்சிக்க முடியாதுன்னு இங்கே இழுத்துட்டு வந்து போட்டுட்டாங்க. அதிலேர்ந்து இப்ப அஞ்சி மாசமா இதோ இந்த மரத்தோட மேடை தான் நம்ம ஜாகை.

இன்னும் ஒரு வாரமோ பத்து நாளோ தெரியல. இந்தக் கட்டை சாய்ஞ்சா காரியம் பண்ண ஆளில்லே, பஞ்சாயத்துக்காரன் தான் வந்து அள்ளிட்டுப் போவணும். ஆனா இந்த நிலைமைக்காக நான் வருத்தப்படலை. கூனிக் குறுகிப்போக மாட்டேன். என் மீசைய பாத்தீங்கள்ல? அதான் நான். இந்த அய்யம் பெருமாள் மண்ணு பாக்க தலை வணங்க மாட்டான். இந்த தெருவே அதிர நடந்து போயிருக்கேன். என்னோட பூட்சு சத்தம் கேட்டு நடுங்கின பயலெல்லாம் இப்ப எச்சில் இலை மாதிரி அசிங்கமா பாக்கறான். அதான் அழுவையா வருது.

ஏதோ உங்கள்ட்ட சொல்லணும்னு தோணிச்சு, சொல்லிட்டேன். நான் செய்ததுல ஏதும் குத்தம் சொல்றா மாதிரி இருக்கா தம்பி?

அந்த மனிதர் சொல்லி முடித்து விட்டு என் முகத்தையே பார்த்தார். பின் மிக நீளமாக ஆயாசமான ஒரு பெருமூச்சை விட்டார். ஒரு இயலாத கோணத்தில் நூற்றாண்டுகளைக் கடந்த அந்த மரத்தினடியில் அமைக்கப்பட்டிருந்த சிமெண்டு மேடையில் கிடந்தார். கடந்த சில மாதங்களாகவே இதே இடத்தில் இதே கோணத்தில் இப்படியே தான் கிடக்கிறார். அந்தப் பூங்காவில் காலை நேர நடைப்பயிற்சிக்கு வரும் எவரும் அந்த இடத்தைக் கடக்கும்போது ஒரு கெட்ட வீச்சத்தை உணர்வார்கள். அது அவரிடமிருந்து தான் வந்து கொண்டிருந்தது. பேச்சில் அவரிடம் தொனித்த அந்தத் திமிரை அவரது தோற்றத்தில் காண முடியாது. கெச்சலாய், கசக்கிப் போட்ட கந்தல் துணி போல் கிடந்தது அவருக்கே கட்டுப்படாத அவரது உடல். கடந்து செல்லும் எல்லோருடைய முகத்தையும் ஏதோ சொல்ல வருவது போல் ஏக்கத்தோடு பார்த்துக் கொண்டேயிருப்பார்.

தொய்ந்து போயிருந்த அவரது உடலில் இருந்து வெள்ளை நிற புழுக்கள் நெளிந்து வெளியேறியவாறே இருந்தன. அந்த உடலுக்குள் இன்னும் இயங்கிக் கொண்டிருந்த அசிங்கம் பிடித்த மனதின் அழுக்குப் படிந்த எண்ணங்களின் நாற்றம் தாங்காமல் அவை தப்பியோட முயற்சிப்பதைப் போலவே இருந்தது. உடலை விட்டு வெளியேறும் புழுக்களெல்லாம் வெப்பம் தாளாமல் மரத்தின் வேர் அருகே சென்றடைந்ததும் தானாகச் செத்து வீழ்ந்து கொண்டிருந்தன. செத்த புழுக்கள் உரமாவதாலோ என்னவோ மரம் உற்சாகமாய் அசைவது போல் தோன்றியது. நடைப்பயிற்சிக்குப் பின் நான் அமர்ந்து ஓய்வெடுக்கும் வழக்கமான மேடை எதிர்புறத்தில் தான் இருக்கிறது; இன்றைக்கு ஏதோவொரு உந்துதலில் தான் இங்கே அமர்ந்தேன். கேட்க வேண்டிய தேவையேதும் இன்றி அவர் முகத்தைப் பார்த்ததும் தானாகவே சொல்லத் துவங்கி விட்டார்.

தன் வாழ்க்கையின் நியாயங்கள் என்று அவரே கருதியவற்றை லட்சக் கணக்கான முறை தனக்குள்ளேயே திரும்பத் திரும்ப சொல்லி ஒத்திகை பார்த்திருக்க வேண்டும். என்னிடம் இந்தக் கதைகளையெல்லாம் சொன்னது எனது ஒப்புதலை எதிர்பார்த்தல்ல, அது ஒரு அனிச்சை செயலாகத் இருக்கக் கூடும். அல்லது, என்னிடம் இருந்து வந்திருக்கக் கூடிய ஒரு சிறிய தலையசைப்பையாவது அவர் எதிர்பார்த்திருக்கலாம். அது அவருக்கு இந்தக் கட்டத்தில் ஒரு தேறுதலை வழங்கியிருக்கலாம். அப்படியொரு தேறுதல் கிடைக்காத ஏமாற்றம் அவரது முகத்தில் தொனித்தது. பேசி முடிந்த பின் நீண்ட நேரம் எனது முகத்தை இமை தட்டாமல் உறுத்துப் பார்த்துக் கொண்டேயிருந்தார். எதிர்பார்த்தது அதற்கு மேல் கிடைக்காது என்பது உறுதியான பின் வேறெங்கோ வெறித்துப் பார்க்கத் துவங்கினார்.

**பயம் இல்லாம போனது தான் தப்பு நடக்கக் காரணம். போலீசோட வேலை தப்பைத் தடுக்கறதில்லை தம்பி. பயத்தை உண்டாக்கறது. பயம் வந்தாலே ஒழுக்கமும் வந்துடும். பயம் வர வைக்கணும்னா எவனை வேணும்னாலும் அடிக்கலாம். அடிச்சே கொல்லலாம். நல்லவனோ கெட்டவனோ, போலீசுனா எவனா இருந்தாலும் நடுங்கணும்.**

காலை மணி ஏழு. தினசரி அலுவல்களின் நீண்ட வரிசை மூளையில் ஒரு சிறு அணிவகுப்பு நடத்தத் துவங்கவே, அவரிடம் ஒன்றும் சொல்லாமல் எழுந்தேன். பூங்காவை விட்டு வெளியேறினேன்.

''ஏய் கிழவி, ரோட்டுல கடை போடக் கூடாதுன்னு ஒனக்கு எத்தினி வாட்டி சொல்றது'' பூங்காவின் வெளியே சாலையோற பூக்காரக் கிழவியிடம் வீரம் காட்டிக் கொண்டிருந்தார் யாரோ ஒரு அய்யம்பெருமாள். எண்ணெய் காணாத நரைத்த தலையை சங்கடமாய்ச் சொறிந்து கொண்டே கருத்துச் சுருங்கிய முகத்தில் எந்தச் சலனமும் காட்டாமல் ஒரு இருபது ரூபாய்த் தாளை மடக்கி நீட்டினாள் அந்தக் கிழவி.

பூங்காவிலிருந்த நூற்றாண்டுகளைக் கடந்த அந்த மரம் காற்றில் மெல்லச் சடசடத்துத் தலையசைக்கிறது. இன்னும் சில ஆண்டுகளுக்கு அது காத்திருக்கும், நம்பிக்கையோடு.

● மாடசாமி

# நினைவுகூர்தல்

*(மக்கள் கலை இலக்கியக் கழகத்தில் மாநில பொருளாளராக பணியாற்றி மறைந்த தோழர் சீனிவாசனது முதலாம் ஆண்டு நினைவேந்தல் கூட்டம் சென்னையில் கடந்த மே 5-ம் தேதி நடந்தது. அந்தக் கூட்டத்தில் மகஇக மாநில பொதுச் செயலாளர் தோழர் மருதையன் ஆற்றிய உரையின் சுருக்கத்தை இங்கே வெளியிடுகிறோம்).*

நினைவுகளை பின்னோக்கி ஓட்டிப் பார்க்கும் போது சம்பங்கள் வரிசையாக நமக்கு நினைவுக்கு வருவதில்லை. நினைவு ஒரு நறுமணம் போன்றது. ஒரு மனிதனுடைய சாரமாக எது நிற்கிறதோ அதை நம்முடைய இதயம் பதிவு செய்துகொள்கிறது. தோழர் காளியப்பன் சொன்னதைப் போல ஒரு மகிழ்ச்சியான மனிதர் தோழர் சீனிவாசன். புரட்சிகர அரசியல் பணிகளை செய்வதில் ஒரு அசாதாரணமான ஒரு ஈடுபாட்டையும் மகிழ்ச்சியையும் அவரிடம் யாரும் காணத்தவற முடியாது.

மனிதனை விலங்குகளிடம் இருந்து பிரிப்பது உழைப்பு. உழைப்பு என்ற மனிதனுடைய சிறப்பியல்பை மனிதனுக்குரியாதாக இல்லாமல் செய்வதுதான் முதலாளித்துவ சமூகம். பல பேரைப் பார்க்கிறோம். வேலைக்கு போய் வருகிறார்கள். அது தொழிலாளியாக இருக்கட்டும், ஒரு எழுத்தராக இருக்கட்டும் உழைக்கின்ற அந்த காலத்தை நரக வேதனையாக உணர்கிறார்கள். வாழ்க்கை என்று அவர்கள் எதை கருதுகிறார்கள்? சாப்பிடுவதை, குடிப்பதை, உறங்குவதை, இன்பம் துய்ப்பதைத்தான் வாழ்வென்று கருதுகிறார்கள். இந்த வாழ்க்கையை வாழ்வதற்காக பொருள் ஈட்ட வேண்டி இருக்கிறது. அதற்கு தவிர்க்கவியலாமல் வேண்டா வெறுப்பாக உழைப்பில் ஈடுபடுகிறார்கள்.

இதை மார்க்ஸ் எப்படி சொல்கிறார்? மனிதனுக்கு உரிய உழைப்பை, மனிதனிடமிருந்து அந்நியப்படுத்தி விட்டு, எது விலங்குக்கு உரியதோ அதை, அதாவது உண்பது உறங்குவது போன்றவற்றை மனிதனுக்கு உரியதாக மாற்றி வைத்திருக்கிறது முதலாளித்துவம் என்பார். உழைப்பை துன்பமாக, தன்னிடமிருந்து அந்நியமாக்கப்பட்டதாக, தனக்கு எதிரானதாக மாற்றி இருக்கின்ற இந்த முதலாளித்துவ சமூகத்திலிருந்து மக்களை விடுவித்து, உழைப்பை மகிழ்ச்சிகரமானதாக ஆக்குவது எப்படி, மனித இயல்பாக மக்களுக்கு அதை மீட்டுத் தருவது எப்படி என்பது தான் நம்முடைய பணி.



தோழர் சீனிவாசன்

சீனிவாசன் வேலையை ராஜினாமா செய்து விட்டு வந்தார். குடும்ப பராமரிப்பிற்காக எட்டு மணி நேரம் பத்து மணி நேரம் அங்கே குப்பைக் கொட்டுவதை, அந்த வேண்டா வெறுப்பான உழைப்பை அவர் விரும்பவில்லை. விருப்ப ஓய்வு என்று அழைக்கப்பட்டாலும், ஓய்வு எடுப்பதற்காக அவர் விலகவில்லை. முன்னிலும் அதிகமாக உழைப்பதற்காகத் தான் வெளியே வந்தார். இது மகிழ்ச்சியை தருகின்ற உழைப்பு என்று அவர் விரும்பி ஏற்றுக் கொண்டிருந்ததனால் தன்னுடைய கடைசி நாள் வரையிலே, இந்த அமைப்பு பணிகளில் அதை தன்னுடைய சொந்த பணியாக விருப்பப் பூர்வமாக செய்கின்ற பணியாக அவர் கருதினார்.

தோழர் சீனிவாசனுடைய நினைவு நாளும், கார்ல் மார்க்சினுடைய பிறந்த நாளும் ஒரே தேதியாக அமைந்திருப்பது ஒரு தற்செயல் நிகழ்வு. பல விபரீதமான தற்செயல் நிகழ்வுகள் சமூகத்தில நடக்குது. மே தினம் நடிகர் அஜித்தின் பிறந்த நாள். லெனின் என்றும் ஸ்டாலின் என்றும் பெயர் வைக்கப்பட்டவர்கள் கோழையாக, பொறுக்கிகளாக இருப்பதை பார்க்கிறோம். எனவே தற்செயல் நிகழ்வுகள் அல்ல, ஒருவர் எப்படி வாழ்ந்தார் என்பது தான் அவர்களுடைய பிறப்பைப் பற்றியும் இறப்பைப் பற்றியும் அவர்களுடைய நினைவைப் பற்றியும் நம்மை பேச வைக்கிறது. அதனால்தான் தோழர் சீனிவாசனை நாம் நினைவு கூர்கிறோம்.

ஆங்கிலத்தில் ஒரு வழக்குண்டு. ''ஈடு செய்ய முடியாத இழப்பு என்று கூறுகின்ற இந்த உலகம், மறுநாள் தன் சோற்றில் ஒரு கவளத்தைக் கூட குறைத்துக் கொள்வது இல்லை'' என்று. இது ஒரு உண்மை. மரணம் இல்லாத வாழ்வை யாரும் எதிர்பார்த்து இங்கே இல்லை. இன்று வாழ்நாள் நீண்டு விட்டது. இன்னும் 50 ஆண்டுகளில் மனிதனின் ஆயுளை 150 ஆண்டுகள் வரை நீட்டித்து விட முடியும் என்கிறார்கள்.

இன்றே பலர் நீண்ட நாள் உயிர் வாழ்கிறார்கள். வாழ்கிறார்கள் என்பதை விட உயிரோடு இருக்கிறார்கள் என்று சொல்லலாம். உயிரோடு இருத்தல் என்ற அளவிலே இந்த வாழ்க்கையை நீட்டித்து தருகிறேன் என்கிறது மருத்துவ அறிவியல். முதலாளித்துவ பொருளாதாரம் என்ன சொல்கிறது?

பொருளாதாரம், தேவை இல்லாதவர்கள் அதிகமாகி விட்டார்கள் அவர்

கள் எல்லாம் விடைப்பெற்று கொண்டால் நல்லது என்று சொல்கிறது. கீரிசில், ஸ்பெயினில் தொழிலாளர்களுடைய ஓய்வூதியம் வெட்டப்பட்டுவிட்டது. ஒரு வீட்டில் முதியவர்களுக்கு சோறு போடவில்லை என்றால் அது ஒரு அறம் கொன்ற செயல், ஒரு நாட்டில் முதியவர் ஓய்வூதியத்தை வெட்டு என்று சர்வதேசிய நாணய நிதியம் சொன்னால், அது நல்ல பொருளாதாரக் கொள்கை எனப்படுகிறது. ஆக வாழ்வது என்பது உயிரோடு இருத்தல் என்பதாக சுருக்கப்பட்டு, அப்படி உயிரோடிருப்பவர்களில் எவ்வளவு பேர் உயிரோடிருக்கலாம் என்பதை உலக முதலாளி வர்க்கம் முடிவு செய்கின்ற ஒரு காலத்தில் நாம் இருக்கிறோம்.

**நமது தோழர்களுடைய புரட்சிகர திருமணங்களில் கூட, நாங்க காசு வாங்கிறது இல்லை, தாலி கட்டுறது இல்லை. பெண்ணை அடிமையாக கருதுவது இல்லை என்று, நாகரீகமாக நடந்து கொள்வதையே ஒரு அசாதாரணமான விசயம் போல விதந்து கூற வேண்டிய சூழல்! மற்றப்படி இதையெல்லாம் நாம் பாராட்டிக் கொண்டிருப்பதில்லை.**

இருப்பினும் எல்லோருக்குமே தாம் மற்றவர்களால் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்ற ஆசை இருக்கிறது. அதனால் தான் திருமணத்தையாவது அமர்க்களமாக நடத்தி அங்கீகாரம் பெற விழைகிறார்கள். ரௌடி, பொறுக்கியா இருந்தாலும் கண்ணீர் அஞ்சலி போஸ்டர் ஒட்டுகிறார்கள். சமூகத்தின் அங்கீகாரம் என்பது கேட்டுப் பெறுவது அல்ல, விலை கொடுத்து வாங்குவதும் அல்ல.


நம்முடைய சட்டமன்றத்தில் மந்திரிகள், எதுக்கும் லாயக்கு இல்லாத என்னை அமைச்சராக்கிய அம்மான்னு தான் ஆரம்பிக்கிறாங்க. தகுதியற்ற நபர்களை அமைச்சராக்கியதாக சொல்வதை ஜெயலலிதா ஒரு விமரிசனமாக பார்ப்பதில்லை. புகழுரையாகத்தான் எடுத்துக்கிறாங்க. ஏனென்றால் அவங்களை பொருத்தவரைக்கும் நாமெல்லாம் சாலையின் இடது புறம் போகிறோம் என்றால் அது கூட அம்மாவின் உத்தரவுக்கிணங்கத்தான். கருணாநிதி இதில் கரை கண்டவர். யாராவது மேடையில அவரைப் புகழ்ந்து பேசினால், புதுசா எதாவது சொல்கிறார்களான்னு கவனிப்பார். ஒருவேளை புகழத் தவறினால், புதுசா இப்படி அயிட்டம் இருக்குன்னு அவரே எடுத்து கொடுத்து புகழச் சொல்லுவார். செத்த பிறகு புகழ்ந்தால் கேட்காது இல்லையா, அதனால உயிரோடு இருக்கும் போதே ஆள் வைத்து புகழ்ந்து கொள்கிறார்கள்.

சுந்தர ராமசாமி என்றொரு இலக்கியவாதியின் கவிதை இருக்கிறது. ''நான் விடை பெற்றுக்கொண்டுவிட்ட செய்தி உன்னை வந்து எட்டியதும் நண்பா பதறாதே, ஒரு இலை உதிர்ந்ததற்கு மேல் அதில் எதுவும் இல்லை'' என்று தொடங்குகிறது கவிதை. ரொம்ப தன்னடக்கமா இருக்குது இல்லையா? அடுத்த வரி ''இரங்கல் கூட்டம் போட ஆள்ப்பிடிக்க அலையாதே, நம்முடைய கலாச்சார தூண்களின் தடித்தனங்களை எண்ணி மனச்சோர்வில் ஆழ்ந்து கலங்காதே'' அப்புறம் டிஜிட்டல் பானர் வைக்காதே, போஸ்டர் அடிக்காதே என்று போகிறது.

இருக்கும் போதே தன்னுடைய மரணத்தை அவர் நினைச்சு பார்க்கிறாரு. பல பேரு நினைக்கிறது தான் இது. இருந்தாலும், கவிதை தன்னடக்கம் போல தொடங்கி அங்கீகாரத்துக்கான வேட்கை ரொம்ப அருவெருப்பாக வெளியே வருகிறது.

தோழர்கள் மறைந்த பிறகு அவர்களுடைய சிறப்பை நாம்ம கூட்டம் போட்டு பேசுறோம். அவர்கள் இருக்கும் போது, அதை நாம் பேசுவதில்லை. வேண்டியதில்லை என்று நினைக்கிறேன். ஏனென்றால், நாம் சீனிவாசனையோ வேறு எந்த தோழரையோ பற்றியோ பேசும்போது ஒரு சமூக உணர்வுள்ள மனிதன் எப்படி நடந்து கொள்ள வேண்டுமோ அப்படி நடந்து கொண்டார் என்பதற்காக நாம் பாராட்டுகிறோம். சமூகத்தில் பலர் அப்படி நடந்து கொள்ளவில்லை என்பதானால் இது தனியாக தெரிகிறது.

காரல் மார்க்ஸ்



நமது தோழர்களுடைய புரட்சிகர திருமணங்களில் கூட, நாங்க காசு வாங்கிறது இல்லை, தாலி கட்டுறது இல்லை. பெண்ணை அடிமையாக கருதுவது இல்லை என்று, நாகரீகமாக நடந்து கொள்வதையே ஒரு அசாதாரணமான விசயம் போல விதந்து கூற வேண்டிய சூழல்! மற்றப்படி இதையெல்லாம் நாம் பாராட்டிக் கொண்டிருப்பதில்லை.

கம்யூனிஸ்டுகள் மட்டுமல்ல சிறந்த அறிவியலாளர்களாக இருக்கட்டும். அல்லது எழுத்தாளர்களாக இருக்கட்டும் மனித சமூகத்திற்கு எதையேனும் பங்களிக்க வேண்டும் என்று கருதுகின்ற யாரும் தன்னுடைய மறைவிற்கு பின் அங்கீகாரம் இருக்குமா என்று கவலைப்படுவதில்லை. மாறாக, மறைவதற்கு முன் எதை செய்து முடிக்க வேண்டும் என்பது குறித்தே பெரிதும் கவலைப்படுகிறார்கள்.

மார்க்சினுடைய நண்பர் என்ன நீண்ட நாட்களாக நான் எழுதிய கடிதத்திற்கு உங்களிடமிருந்து பதிலே இல்லைன்னு கேட்டு எழுதுகிறார். இதற்கு மார்க்ஸ் பதில் எழுதுகிறார், ''உங்கள் கடிதத்திற்கு ஏன் பதில் எழுத வில்லை, ஏனென்றால் நான் மரணத்தின் விளிம்பில் நின்று கொண்டு இருந்ததனால் தான். ஒவ்வொரு கணப்பொழுதையும் என்னுடைய புத்தகத்தை எழுதி முடிப்பதற்கு நான் பயன்படுத்த வேண்டி இருந்தது''. இத்தகையதொரு மனிதன் அங்கீகாரம் தேடுவது பற்றி சிந்திக்கவே முடியாது.

மார்க்ஸ் மறைந்த பிறகு, அவருடைய அடக்கம் செய்யப்பட்டபோது உரையாற்றிய எங்கெல்ஸ், மார்க்ஸ் சிந்திப்பதை நிறுத்தி விட்டார் என்று அவர் கூறுவார். அப்போ மற்றவர்கள்

**பழைய கம்யூனிஸ்ட் இயக்கத்தினர், பழைய திராவிடர் கழகத்தினரில், ‘‘கட்சி கட்சின்னு வாழ்கையையே வேஸ்ட் பண்ணிட்டேன் சார், குடும்பத்தை கவனிக்காம விட்டுட்டேன். அவனவன் பொழச்சுகிட்டான்’’ என்று பேசக்கூடிய நபர்களை நீங்கள் பார்த்திருக்கலாம்.**

எல்லாம் சிந்திக்கவில்லையா எல்லோரும் அவரவர் கோணத்தில் சிந்திக்கிறார்கள். மரணம் நெருங்கும்போது தன்னுடைய கடந்த காலத்தை எல்லோரும் மிக வேகமாக திரும்பிப் பார்க்கிறார்கள்.

பழைய கம்யூனிஸ்ட் இயக்கத்தினர், பழைய திராவிடர் கழகத்தினரில், ‘‘கட்சி கட்சின்னு வாழ்கையையே வேஸ்ட் பண்ணிட்டேன் சார், குடும்பத்தை கவனிக்காம விட்டுட்டேன். அவனவன் பொழச்சுகிட்டான்’’ என்று பேசக்கூடிய நபர்களை நீங்கள் பார்த்திருக்கலாம். அப்படி கணக்கு கூட்டிப் பார்க்கும்போது பல பேர், துன்பங்கள் வரும் தருணங்களில், மரணம் நெருங்கும் தருணத்தில், இடையூறுகள் வரும்போது தடுமாறி விடுகிறார்கள்.

நம்முடைய தோழர்களில் இளைஞர்களாக இருப்பவர்களுக்கு, புரட்சி, அரசியல், போராட்டம், அரசு எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கெல்லாம் போகாதீர்கள் என்பதற்கு தந்தையோ, முதியோர்களோ சொல்லுகின்ற அறிவுரை என்ன? ‘‘நான் சொல்வது இப்பத் தெரியாது. அப்புறம் தெரியும்’’. இளமையில் செய்கின்ற ஒரு முடிவு முதுமையிலே தவறு என்று தோன்றுவதற்கு என்ன காரணம்?

இந்த தடுமாற்றம் ஏற்படுகிறவர்கள் எல்லாம் தவறானவர்களா? அப்படி சொல்ல முடியாது. தடுமாற்றத்தை போராட்டமாக மாற்றுகிறோமா இல்லையா என்பதுதான் கேள்வி. இந்த சமூகத்தில் வாழ்கின்ற வரையில் இந்த தடுமாற்றத்தை நாம் எதிர்கொண்டுதான் ஆகவேண்டும். இப்பொழுது இந்த பள்ளியினுடைய அரங்கத்துக்குள்ளே உட்கார்ந்து இருக்கிறோம் வெளியே போனால் பாண்டி பஜார், உஸ்மான் ரோடு, ரங்கநாதன் தெரு, போத்தீஸ், ஜாய் ஆலுக்காஸ் எல்லாம் வரிசையா இருக்கிறது. அங்கே பணத்தை கொடுத்து ரசீது போட்டு மகிழ்ச்சியை வாங்கலாம் என்று லட்சக்கணக்கான பேர் போய் கொண்டிருகிறார்கள். நாம் இங்கே அமர்ந்திருக்கிறோம்

அவர்களுக்கும் நமக்கும் என்ன வேறுபாடு? நாம் உஸ்மான் ரோட்டுக்கு போகமாட்டோமா, ரங்கநாதன் தெருவுக்கு போகமட்டோமா, சரவணா ஸ்டோருக்கு போகமாட்டோமா? போவோம். இந்த வாழ்க்கை இருக்கிறது, இந்த வாழ்க்கைக்கு வெளியே நம்மை ஆசைக்காட்டி இழுக்கின்ற அந்த வாழ்க்கையும் இருக்கிறது.

மே தினத்தன்று பார்த்தால் பேரணி, தோழர்கள் அவர்களுடைய ஆவேச முழக்கங்கள். அல்லது தடியடி, கைது, சிறை இவற்றையெல்லாம் எதிர்கொள்ளுகின்ற தருணங்கள் இருக்கின்றன. அவையெல்லாம் முடிவுக்கு வருகின்றன, அதற்கு பிறகு வழக்கமான வாழ்க்கை தொடங்குகிறது. அந்த வழக்கமான வாழ்க்கை தொடங்கும் போதெல்லாம் தடுமாற்றம் வருகிறது. இந்த தடுமாற்றத்திலிருந்து காப்பாற்றவும், விமர்சிக்கவும், மாற்றி அமைக்கவும், நெறிப்படுத்தவும் நமக்கு அமைப்பு இருக்கிறது.

தடுமாற்றம் என்பது எல்லா மனிதர்களுக்கும் உண்டு, தேவகுமாரனுக்கும் உண்டு, சிலுவையில் அறையப்படுவதற்காக அழைத்துச் செல்லப்படும் போதே தேவன் நம்மை காப்பாற்றப் போவதில்லையென்று ஏசுவுக்குத் தெரிகிறது. அந்த தருணத்தில் ஏற்படும் தடுமாற்றத்தை சித்தரிக்கிறது ஒரு இலக்கியம் - தி லாஸ்ட் டெம்ப்டேஷன் ஆஃப் ஜீசஸ் கிரைஸ்ட். திரைப்படமாகவும் வந்திருக்கிறது.

சிலுவையில் அறையப்பட்ட ஏசு, தன்னை தேவன் காப்பாற்றி விட்டதாகவும், காதலியை மணம் புரிந்து கொண்டு பிள்ளை குட்டிகளுடன் மகிழ்ச்சியாக வாழ்வதாகவும் ஒரு அரை மயக்க நிலையில், கனவு காண்



பகத்சிங்

கிறார். கனவில் அவரது சீடர்களே அவரை ஏசுகிறார்கள். தனது வீழ்ச்சியை எண்ணித் துணுக்குற்ற ஏசு திடுக்கிட்டு விழிக்கிறார். தான் கண்டது கனவு என்று அறிந்து மகிழ்கிறார். அந்த மகிழ்ச்சியுடனேயே சிலுவையில் உயிர் துறக்கிறார். ஏசுவின் மனதில் ஏற்படும் இந்த தடுமாற்றத்தை சாத்தானாக அந்த இலக்கியம் சித்தரிக்கிறது,

தடுமாற்றம் இல்லாதவர்கள் இல்லை. அந்த தடுமாற்றத்தின் போது எத்தகைய போராட்டத்தை கைக்கொள்கிறோம், அந்த போராட்டத்தில் தொடர்ந்து நிற்கிறோமா என்பது தான் மற்றவர்களையும் நம்மையும் வேறுபடுத்திக் காட்டுகிறது. ‘‘இருபது வயதுகளில் கம்யூனிஸ்டாக இல்லாதவனும் முட்டாள், நாற்பது வயதுக்கு மேல் கம்யூனிஸ்டாக இருப்பவனும் முட்டாள்’’ என்று ஒரு வழக்குமொழி சொல்வார்கள்.

புரட்சி என்பதே ஒரு இனிமையான இளம்பருவக் கோளாறு என்பது தான் இதன் பொருள். கொஞ்ச காலம் நான் ம.க.இ.க.வில் இருந்தேன் என்று சொல்லிக் கொள்ளலாம். வாழ்நாள் முழுவதையும் அர்பணித்துக்கொண்டவர் என்பதுதான் சீனிவாசன் போன்ற தோழர்களுடைய சிறப்பு. தோழர்கள் குறிப்பிட்டதைப் போல, எதிரிகள் தாக்குவதை நமது பணிகளுக்கு கிடைத்த அங்கீகாரமாக கருதினார்.

இந்தப் பக்குவம் வாய்க்கப்பெற்றவர்கள் மரணத்தைக் கண்டு அஞ்சுவதில்லை. மரணம் என்று ஒன்று தனியாக இல்லை. யார் வாழ்க்கையைக் கண்டு அஞ்சுகிறார்களோ, அநேகமாக அவர்கள்தான் மரணத்தைக் கண்டும் அஞ்சுகிறார்கள். மக்கள் நலனுக்காக மகிழ்ச்சியாக நிறைவாக முரணில்லாமல் உழைப்பவர்களுக்கு மரணம் ஒரு அச்சுறுத்தலாக இருப்பதில்லை.

நவம்பர் புரட்சி தொடர்பான கதைகளைப் பற்றி தோழர்கள் படித்திருக்க கூடும். போல்ஷ்விக் கட்சியின் மத்தியக் குழு ஸ்மோல்னி இன்ஸ்டிடியூட் என்கிற இடத்தில் இயங்கிக் கொண்டிருக்கும். பாதுகாப்பு காரணங்களுக்காக அந்த நாட்களில் லெனின் தலைமறைவாக இருப்பார். போல்ஷ்விக் கட்சிக்கு சோவியத்துகளில் பெரும்பான்மை இல்லாத காரணத்தினால் ஆயுதந்தாங்கிய எழுச்சியை தொடங்குவதா வேண்டாமா என்று ஒரு தடுமாற்றம் மத்தியக் குழு உறுப்பினர்களுக்கே இருக்கும். லெனினோ ஆயுத எழுச்சியை உடனே தொடங்க வேண்டும் என்ற வலியுறுத்தி மத்தியக் குழுவுக்கு கடிதம் அனுப்பிக் கொண்டே இருப்பார். இருப்பினும் மத்தியக் குழு பெரும்பான்மை அவர் கருத்தை ஏற்றுக் கொள்ளாது.


**தடுமாற்றம் இல்லாதவர்கள் இல்லை. அந்த தடுமாற்றத்தின் போது எத்தகைய போராட்டத்தை கைக்கொள்கிறோம், அந்த போராட்டத்தில் தொடர்ந்து நிற்கிறோமா என்பது தான் மற்றவர்களையும் நம்மையும் வேறுபடுத்திக் காட்டுகிறது.**

தாமதிக்கும் ஒவ்வொரு நிமிடமும் மதிப்பு மிக்கது. உடனே நான் மத்தியக் குழுவை நேரில் சந்தித்து விவாதித்தாக வேண்டும் என்று புறப்படுவார் லெனின். அவருடைய பாதுகாப்புக்கு பொறுப்பான தோழர் அதனை ஆட்சேபிப்பார். அதனை லெனின் நிராகரித்து வெளிக்கிளம்புவார். காரணம் புரட்சி எழுச்சியை உடனே தொடங்கவில்லை என்றால், இந்த வரலாற்றுத் தருணத்தை தவறவிட்டால், இன்னும் சில பத்தாண்டுகளுக்கு புரட்சி தள்ளி போய் விடும். அந்த இழப்பை ஒப்பிடும் போது என்னுடைய உயிர் பெரிது அல்ல. பாதுகாப்பு பணயம் வைக்கத் தக்கதே என்று அறிவுபூர்வமாக யோசித்து எடுக்கின்ற முடிவு அது. சாகச நடவடிக்கை அல்ல.

உலகிலேயே போற்றத்தக்க ஒரு முன்னுதாரணம் பகத்சிங். தூக்கு மேடையேறியதுதான் பகத்சிங்கின் சிறப்பு என்று பலரும் புரிந்துகொண்டிருக்கிறோம், அந்த முடிவின் பின்புலத்தில் அவருடைய குழுவில் நடைபெற்ற விவாதங்கள் ரொம்ப முக்கியமானவை. அவருடைய குழுவினர் மத்தியிலேயே அரசியல் ரீதியில் முன்னேறியவரும், அமைப்புத் துறையில் ஆற்றல் மிக்கவரும், தொலைநோக்கோடு சிந்திக்கக்கூடியவரும் சிறந்த கிளர்ச்சியாளனும் பகத்சிங் தான்.

மற்ற தோழர்கள் சொல்கிறார்கள், ‘‘நாடாளுமன்றத்தில் குண்டு வீசும் நடவடிக்கையில் நீங்கள் ஈடுபட வேண்டாம் நாங்கள் போகிறோம், நீங்கள் போகக்கூடாது, நீங்கள் சாகும் நிலைமை ஏற்படக் கூடாது. நீங்க கட்சிக்கு தேவை. அந்த வேலையை நாங்கள் செய்கிறோம்’’ என்று வாதாடுகிறார்கள்.

பகத்சிங் சொல்கிறார், ‘‘இது ஒரு அரசியல் நடவடிக்கை. நாம் யாரையும் கொல்லப் போவதில்லை. இது வெறும் வெடிச் சத்தத்தையும் புகையையும் உருவாக்கப் போகின்ற ஒரு குண்டு. இதில் கைதாகி நீதிமன்றத்தை, அந்த மேடையை நம்முடைய அரசியல் கிளர்ச்சிக்கு, புரட்சி பிரச்சாரத்திற்கு, தேச விடுதலைக்கு பயன்படுத்த வேண்டும். நீங்கள் சொல்வது போல அதற்கான ஆற்றல்கள் வாய்க்கப் பெற்றவனாக நான் தான் இருக்கிறேன், அதனால் நான் இதை செய்வதன் மூலம் தான் இந்த நோக்கம் நிறைவேறும். இது மரணதண்டனைக்கு வழிவகுக்கும் என்பது எனக்குத் தெரியும், எனினும் அது செய்யப்பட வேண்டும் என்று


ஐன்ஸ்டீன்

தான் நான் சொல்கிறேன். நான் இறப்பதன் மூலம் தான், இந்த அரசியல் கிளர்ச்சி பிரச்சாரத்தின் மூலம் தான், நம்முடைய புரட்சிகர அரசியல் என்பது இந்தியாவின் மூலை முடுக்கெல்லாம் செல்லும்'' என்று விளக்குகிறார்.

இதைவிட ஒரு அற்புதமான முறையில், தன்னை புறநிலையாக்கி பார்க்கின்ற, தான் உயிர் கொடுக்க வேண்டும் என்பதை அறிவியல் பூர்வமாக விளக்கிக்கூறி நிலைநாட்டுகின்ற ஒரு அதிசயத்தை எந்த இலக்கியத்திலும் பார்க்க முடியாது. இங்கே மரணம் என்பது ஒரு வாழ்க்கையாக இருக்கிறது. உயிர்த் துடிப்புள்ள நடவடிக்கையாக இருக்கிறது. பகத்சிங் சாவதற்கு முடிவெடுத்து விட்டார் என்று அதை நாம் இதைச் சொல்ல முடியுமா?

அது ஒரு மாபெரும் அரசியல் நடவடிக்கை. தூக்கில் தொங்குவது என்று முடிவு எடுத்துவிட்டாரே என்று எண்ணி நாம் வருந்தலாம், ஆனால் பகத்சிங்கைப் பொருத்தவரை, அங்கே மரணம் என்பது மேடைபேச்சைப் போன்றது. ஒரு கிளர்ச்சி நடவடிக்கை போன்றது. இந்த நடவடிக்கைக்கு தானே பொருத்தமானவர் என்று அவர் கருதுகிறார். மரணத்தைப் பற்றிய புரட்சியாளர்களின் பார்வை, நாம் கொள்ளவேண்டிய பார்வை இது,

நீங்கள் நினைத்துப்பாருங்கள். இந்த மாதிரியான சூழல்களில் பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் போன்றவர்களோ, அவர் கூட இருந்த தோழர்களோ எவ்வளவு விவாதித்திருப்பார்கள். சிறையில் அடைக்கப்பட்ட பின்னரும் கூட எவ்வளவு விவாதங்கள் நடந்திருக்கும். இந்த முடிவு சரியென்றும் தவறென்றும் பல கருத்துப் போராட்



லெனின்

டங்கள் நடைபெற்று இருக்கும். மற்ற தோழர்கள் பகத் சிங்கோடு உடன்படாமல் அவரை இழப்பது குறித்து துயருற்று இருக்கலாம். இந்த துயரங்கள் எல்லாம் இணைந்ததும் கலந்ததும்தான் ஒரு புரட்சிகர வாழ்க்கை.

அர்ப்பணிப்புணர்வுடன் இயங்குகின்ற எல்லாத் தோழர்களுடைய குடும்பங்களும் துண்பத்தை எதிர்கொண்டு தான் ஆகனும். பின்னால் நினைவு கூறும் போதோ அல்லது பொதுவாகப் போற்றி பேசும் போதோ அது ஒரு சாதனை போலத் தெரியலாம். ஆனால் அனுபவிக்கின்ற தருணங்களில் அது மிகவும் துயரமானது.

மார்க்ஸ் தன் நண்பருக்கு ஒரு கடிதம் எழுதுகிறார். ''தானும் தன் குழந்தைகளும் செத்துவிட்டால் நல்லது என்று என் மனைவி தினமும் சொல்கிறாள், உண்மையில் நான் அவளை



நாஜிகளை முறியடித்த கம்யூனிஸ்டுகள் பெர்லினில்

குறை சொல்ல முடியாது'' என்று எழுதுகிறார். அவருடைய ரெண்டு குழந்தைகளை பட்டினிக்கும், நோய்க்கும் பறிகொடுக்கிறார் மார்க்ஸ். கடன்காரர்களுக்கு அஞ்சி ஒளிகிறார். அவருடைய மார்பிலும், முதுகிலும் ஏறி விளையாடிய குழந்தைகள், அந்தக் குழந்தைகளை சாகக் கொடுக்கிறார். இப்ப நாம் பார்க்கின்ற மாதிரி கட்சி, ஒரு அமைப்பு, பெருந்திரளான தோழர்கள், நம்பிக்கை இதெல்லாம் இருந்த காலம் அல்ல அது.

நாம் இன்றைக்கு பின்பற்றுகின்ற இந்த கோட்பாட்டை அவர் உருவாக்கிக் கொண்டிருக்கிறார். அதை அவரே சரி பார்த்துக்கொண்டிருக்கிறார். இந்தப் பணியில் ஈடுபட்டிருக்கும் போதுதான் தன்னுடைய குழந்தைகளை அவர் பறிகொடுக்க வேண்டியிருக்கிறது. அப்போது வரக்கூடிய தடுமாற்றத்தை யோசித்துப் பாருங்கள்.

குழந்தைகள் பட்டினியால் சாவது ஒரு நிஜம், நோய்க்கு மருத்துவம் இல்லாமல் அவர்கள் துடிப்பது ஒரு நிஜம். அவர் எழுதிக் கொண்டிருப்பது ஒரு கனவு, கம்யூனிசம் என்ற ஒரு பெருங் கனவு. இது அறிவியலா, இது நிரூபிக்கப்படுமா, தொழிலாளி வர்க்கம் இதை நிறைவேற்றுமா என்பதை எல்லாம் களத்திலே சோதித்து பார்க்க வேண்டியிருக்கிறது. அந்த சோதனையிலும் அவர் இருக்கிறார்.

மனித குலத்தின் விடுதலைக்கான ஒரு கோட்பாட்டை உருவாக்குவதில், மனித குலத்தின் மீது எந்தளவு பற்று இருந்தால், அறிவியலின் மீது எந்தளவு நம்பிக்கை இருந்தால், தான் கொண்ட கொள்கையில் எவ்வளவு பற்றுருதி இருந்தால் தன் பிள்ளைகளை சாகக் கொடுத்து, அந்தத் துன்பத்தை அனுபவித்த வண்ணம் ஆய்வில் ஈடுபட முடியும் என்று யோசித்துப் பாருங்கள்.

மூட்டை தூக்கலாம், உடல் உழைப்பு செய்யலாம் ஆனால் சிந்திக்க வேண்டும், சிந்தித்து சமூகத்தை ஆராய்ந்து எழுத வேண்டும். சுற்றிலும் கதறல், பட்டினி, இது அவருடைய வீட்டின் சூழல். இதைப் பற்றி வேறொரு இடத்தில் மார்க்ஸ் எழுதுகிறார். ''மெதுவாக எரிகின்ற நெருப்பில் வாட்டப்படுதல், அதில் தலையும் இதயமும் காயமடைகின்றன. மேலும் பொன்னான நேரமும் வீணாகிறது. முடிவடைய வேண்டும்.''

- இது தான் அவர் எழுதியிருப்பது. எது முடிவடைய வேண்டும். அனுபவித்து வந்த துன்பமா, வாழ்க்கையா? பெரும் துயரில் தோய்ந்த வரிகள் இவை. மெதுவாக எரியும் நெருப்பில் இதயம் வாட்டப்படுதல் என்றால் குழந்தைகள், மனைவி அவர்களுடைய துன்பம் ஏற்படுத்துகின்ற துயர், வலி. தலை வாட்டப்படுதல் என்று எழுதுகிறார். அவருடைய சிந்தனையை அது பாதிக்கிறது. அவரால் முடியவில்லை.

முடிவடைய வேண்டும் என்கிறார். இந்த கொடுந்துயரத்தை புரிந்து கொள்ள வேண்டும் என்றால் தோழர்களே, அந்த துயரத்தை நாம் அனுபவித்திருக்க வேண்டும், இல்லாதவரை இதை புரிந்துகொள்ளவே முடியாது. இந்த துயரத்தை யாரெல்லாம் அனுபவிக்கவில்லையோ, இந்த போராட்டத்தில் யாரெல்லாம் ஈடுபடவில்லையோ அவர்கள் யாரும் இந்த தியாகத்தின் மகத்துவத்தை புரிந்து கொள்ள முடியாது. இந்த துயரத்தின் வலியை புரிந்து கொள்ள முடியாது.

ஆகவே, ''தோழர் போராடினார், உறுதியாக இருந்தார், மகிழ்ச்சியாக இருந்தார்'' என்பதெல்லாம் பொதுவாக நமக்கு தெரிகின்ற சொற்கள். அதற்குப் பின்னால் ஒரு மனிதன் தன்னுடைய பலவீனங்களுக்கு எதிராக, தன்னுடைய குறைகளுக்கு எதிராக நடத்திய ஒரு போராட்டம் இருக்கிறது. அது அளித்த துயரம் இருக்கிறது. தோழர்களுடைய மேன்மைகள் எனப்படுபவையெல்லாம் தமது பலவீனங்களுக்கு எதிராக, தவறுகளுக்கு எதிராக அவர்கள் நடத்தும் போராட்டத்தின் ஊடாகத்தான் சாதிக்கப்படுகின்றன.

பகத்சிங். தூக்குதண்டனை விதிக்கப்பட்ட கைதியாக சிறையில் இருக்கும்போது எழுதுகிறார். ''ஒருவேளை எண்பது வயது வரை நான் உயிர் வாழ்ந்து செயல்பட்டிருந்தால் என்னுடைய பலவீனங்களை தெரிந்துகொள்வதற்கான வாய்ப்பு இந்த உலகத்திற்கு கிட்டியிருக்கும். ஆனால் இருபத்தியோரு வயதிலேயே நான் தூக்குமேடை ஏறுவதால் பலவீனங்களுக்கு அப்பாற்பட்ட ஒரு மனிதனாக என்னை பலரும் கருதிக்கொள்ள வாய்ப்பிருக்கிறது'' என்று எழுதுகிறார். எவ்வளவு நேர்மையான ஒரு சுயபரிசீலனை என்பதை நீங்கள் பார்க்க வேண்டும். ஆய்ந்தவிந்து அடங்கிய சான்றோர் என்றெல்லாம் சொல்றோமே அவர்களுக்குக் கூட இருபத்தியோரு வயது இளைஞனுடைய இந்த சான்றான்மை வருமா?

**இதைவிட ஒரு அற்புதமான முறையில், தன்னை புறநிலையாக்கி பார்க்கின்ற, தான் உயிர் கொடுக்க வேண்டும் என்பதை அறிவியல் பூர்வமாக விளக்கிக்கூறி நிலைநாட்டுகின்ற ஒரு அதிசயத்தை எந்த இலக்கியத்திலும் பார்க்க முடியாது. இங்கே மரணம் என்பது ஒரு வாழ்க்கையாக இருக்கிறது. உயிர்த்துடிப்புள்ள நடவடிக்கையாக இருக்கிறது.**

''நான், எனது பங்களிப்பு அதை எல்லோரும் அங்கீகரிப்பார்களா, கூட்டம் போடுவார்களா, போஸ்டர் ஒட்டுவார்களா'' என்று சிந்திக்கின்ற அற்பத்தனத்தால் நிறைந்திருப்பவர்கள் தங்களை அறிஞர்கள் என்று கருதிக்கொள்கிறார்கள். பல நேரங்களில் இந்த தனிநபர் வாதமும், அற்பத்தனமும்தான் அறிவாளிகளுடைய அங்கலட்சணம் என்று கூட பல பேர் நினைத்துக் கொள்கிறார்கள். அதனால்தானோ என்னவோ, அறிவு ஜீவியாகத் தம்மைக் கருதிக் கொள்ளும் பலருக்கு, அறிவு வருவதற்கு முன்னால் இந்த அற்பத்தனம் கைவந்துவிடுகிறது.

கம்யூனிஸ்டுகள் எல்லாம் தனித்தன்மை இல்லாத மந்தைகள். போஸ்டர் ஒட்டறவனுக்கும், கோஷம் போடுபவனுக்கும் என்ன தனித்தன்மை ? ஆயிரம் பேரில் அவனும் ஒருத்தன். ஆனால் ஒரு இலக்கியவாதி, ஒரு பேச்சாளன் அப்படி இல்லையே என்று கருதிக் கொள்கிறார்கள்.

நினைவு கூறத்தக்க சிறந்த தோழர்களை அசாதாரணமானவர்களாக நாம் சித்தரிப்பதும் கருதிக்கொள்வதும் தவறு. ஏசு நம் பாவங்களுக்காக சிலுவை சுமந்தார், அவர் மாதிரி நம்




மால் முடியுமா என்று தப்பித்துக் கொள்வதற்காக நாம் நினைவு கூரவில்லை. அவர்களுடைய வாழ்க்கையிலிருந்து நாம் எதைக் கற்றுக்கொள்கிறோம், எவ்வளவு முன்னேறுகிறோம் என்பதற்குத்தான் இந்த நினைவு கூர்தல்.

''நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும் பெருமையுடைத் திவ்வுலகு'' என்ற திருக்குறள் உங்களுக்கு தெரிந்திருக்கும். நேற்று இருந்தவன் இன்று இல்லை என்பது இந்த உலகின் பெருமை என்று சொல்கிறார் வள்ளுவர். அது மட்டுமல்ல நேற்று இருந்த மனிதன் இன்று இல்லை. அவனை விட இன்று இருக்கும் மனிதன் மேம்பட்டவனாக ஆகிறான், வளர்கிறான்.

நேற்று இருந்த கருத்து, நேற்று இருந்த புரிதல் இன்று மேம்படுகிறது. சென்ற நூற்றாண்டின் துவக்கத்தில் மருத்துவ அறிவியலோ. வானவியலோ, வேதியியலோ எந்த அறிவியல் துறையை எடுத்துக்கொண்டாலும் அது இந்த உலகத்தைப் பற்றி பெற்றிருந்த புரிதல் இந்த நூற்றாண்டில் பெருமளவுக்கு மேம்பட்டிருக்கிறது. அது மொத்த அறிவியலின் முன்னேற்றமாகிறது,

மனித விழுமியங்களில் கூட, அரசியலில் கூட இந்த முன்னேற்றத்தை நாம் வரித்துக்கொள்ள வேண்டியிருக்கிறது, முன்னேற்றத்தை. இதை நாம் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும். சோசலிசம் என்பது மனிதகுலம் கண்டடைந்த ஒரு மேன்மையான சமூக அமைப்பு. அதனை எட்டுவதற்காக மனிதகுலம் போராடித்தான் தீரவேண்டும். ஒரு தோழரின் மரணமாகட்டும், சோசலிசத்தின் பின்னடைவாகட்டும், ஒரு வகையில் அனைத்துமே முன்னேறிச் செல்வதற்கான படிக்கட்டுதான்.

சுந்தர ராமசாமி கவிதையை படித்த பிறகு வேறொரு சந்தர்ப்பதிலே ஐன்ஸ்டினுடைய ஒரு கூற்றைப் படிக்க நேர்ந்தது. அவர் மரணத்தைப் பற்றி எழுதியிருக்கிறார். ''நம்முடைய இளம் தலைமுறைக்குள்ளும் மக்களுக்குள்ளும்

நாம் வாழ முடியும் என்றால் நம்முடைய மரணம் என்பது ஒரு முடிவு அல்ல. ஏனென்றால் அவர்கள் தான் நாம்''. இதைவிட அவர் சொல்லியிருக்கும் அடுத்த வரி ரொம்ப முக்கியமானது. ''நமது உடல்கள் எனப்படுபவை வாழ்க்கை எனும் மரத்திலிருந்து வாடி வீழ்ந்த இலைகள் மட்டுமே''.

உயிர் (Life) என்பது, வாழ்வு என்பது ஒரு மிகப்பெரிய மரம். நான் அந்த மரத்தினுடைய பிரிக்கவொண்ணாத ஒரு இலை. அது ஒரு குறிப்பிட்ட கட்டத்திலே பழுத்து உதிர்ந்து விடுகிறது. இந்த முழுமையில் இதனை அவர் பார்க்கச் சொல்லுகிறார். பழுத்து உதிர்ந்த அந்த இலையின் தனிப்பட்ட அனுபவங்களை அந்த மரம் பெற்றுக் கொள்கிறது. அப்படி பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற அர்த்தத்திலே அவர் அந்த விளக்கத்தை சொல்லுகிறார்.

அதாவது ஒரு மனிதன் தன்னை இந்த சமுதாயம் என்ற மரத்திலிருந்து உயிராற்றலையும், அறிவையும் பருகுகின்ற ஒரு இலையாக தன்னைக் கருதிக் கொள்ள வேண்டும். அப்படி கருதிக் கொண்டால் நம்முடைய வாழ்க்கை என்பதும், நம்முடைய மரணம் என்பதும் மீண்டும் இந்த சமூகத்திற்குப் பயன் படுவதாக அமையும்.

சமூகம் என்பது பகத்சிங்கை போன்று, மார்க்சை போன்று தோழர்களைப் போன்று பல பேரால் பட்டை தீட்டப்படுகிறது. எல்லா தலைசிறந்த குணங்களையும் ஒரே மனிதன் பெற்று விடுவதில்லை. ஒவ்வொருவரிடமும் ஒரு சிறப்பியல்பு. அதை நாம் பரிசீலனையோடு கற்றுக்கொள்வதுதான் ஒரு நினைவு நாள் கூட்டத்தினுடைய பொருளாக இருக்க முடியும்.

ஒரு தனிப்பட்ட தோழருக்கு தனிப்பட்ட நடைபெறுகின்ற நினைவேந்தல் கூட்டத்துக்கு மட்டுமல்ல, எல்லா நினைவு நாட்களுக்கும் இது பொருந்தும். மே நாள் நடத்தினோம். மே தின தியாகிகள் சிகாகோ சதுக்கத்தில் சுடப்பட்டு இறக்கும் போது எண்ணியிருப் பார்களா, இப்படி சென்னையில 2013-ல் நம்முடைய பெயரால், ஈழத் தமிழ் அகதிகளுக்கு குடியுரிமை கோரி ஒரு போராட்டம் நடக்கும் என்று. ஆனால் அந்த மேதின தியாகிகளுடைய கோரிக்கையின் சர்வதேசத் தன்மை காரணமாக, உலகெங்கிலும் உள்ள உழைக்கும் மக்களின், ஒடுக்கப் பட்ட மக்களின் உரிமைக்கு அதை பிரயோகிக்கின்றோம்.

நினைவுகளை பகிர்ந்து கொள்ளுதல் என்கிற அர்த்ததில் நினைவு கூர்தல் என்பது வெகுவிரைவில் முடிந்துவிடுகிறது. வாழ்ந்து முடிந்த வாழ்க்கையின் சாரம் என்ன, அதன் சிறப்பியல்புகள் என்ன, சரி தவறுகள் என்ன என்பதை நாம் நினைவு கூற வேண்டியிருக்கிறது.

முன்னர் ஒரு முறை ஒரு வடமாநிலத்தில் ஒரு மாநாட்டுக்கு சென்றிருந்த போது, தியாகிகளுக்கு வீரவணக்கம் செலுத்தும் நிகழ்ச்சி நடக்கிறது. கொல்லப்பட்ட ஒவ்வொரு தோழருடைய பெயராக குறிப்பிட்டு வீரவணக்கம் செலுத்துகிறார்கள். ''ஒரு வேளை நாமும் இது போல சாக நேர்ந்தால், ஒன்றிரண்டு வருஷத்துக்கு நம்ம பேரச் சொல்லி முழக்கம் போடுவாங்க, அப்புறம் மொத்தமா தியாகிகளுக்கு வீரவணக்கம்னு போட்டு விடுவார்கள்'' என்றார் அருகில் நின்ற ஒரு தோழர். நீங்க எதிர்பார்ப்பது போலவே அவர் இப்போது அமைப்பில் இல்லை. இப்படி சிந்திப்பவர் இருக்கவும் இயலாது.

**மனித குலத்தின் விடுதலைக்கான ஒரு கோட்பாட்டை உருவாக்குவதில், மனித குலத்தின் மீது எந்தளவு பற்று இருந்தால், அறிவியலின் மீது எந்தளவு நம்பிக்கை இருந்தால், தான் கொண்ட கொள்கையில் எவ்வளவு பற்றுருதி இருந்தால் தன் பிள்ளைகளை சாகக் கொடுத்து, அந்தத் துன்பத்தை அனுபவித்த வண்ணம் ஆய்வில் ஈடுபட முடியும் என்று யோசித்துப் பாருங்கள்.**

என்ன விதமான அங்கீகாரத்தை எதிர்பார்த்து நாம் பணியாற்றுகிறோம். அமைப்பிலும், புரட்சியிலும், சமூகத்திலும் அங்கீகரிக்கப்படாத உழைப்பு, அங்கீகரிக்கப்படாத தியாகம் என்பது தான் அதிகம். எத்தனை ஆயிரம் தோழர்கள் மடிந்திருக்கிறார்கள். மாவோயிஸ்ட் அமைப்பாக இருக்கட்டும், உலகம் முழுவதும் உள்ள தொழிலாளி வர்க்க இயக்கங்களாக இருக்கட்டும் எத்தனை ஆயிரம் தோழர்கள் மடிந்திருக்கிறார்கள், யாருடைய முகம் தெரியும் நமக்கு? யாருடைய நினைவு தெரியும் நமக்கு? அவர்கள் எல்லோரும் அங்கீகாரம் இல்லாமல் உழைப்பவர்கள்தான்.


கூட்டுத்துவத்தில் நிறைவு கொள்வதுதான் தொழிலாளி வர்க்கத்தின் சிறப்பியல்பு. ஒரு போராட்டத்தை நடத்தி முடிப்பதில், அதற்கு துண்டறிக்கை எழுதியவர் தொடங்கி கிளர்ச்சிக்கு தலைமை தாங்கியவர், சுவரொட்டி ஒட்டியவர், பேருந்தில் பிரச்சாரம் செய்தவர் என எல்லா தோழர்களுக்கும் அவரவர்க்குரிய பங்கு இருக்கிறது. ஆற்றலில் வேறுபாடு இருக்கலாம் உழைப்பின் அளவில் வேறுபாடு இருக்கலாம். கூட்டுத்துவ உழைப்புதான் இதை சாதிக்கிறது.

தொழிலாளிகள் வேலை செய்யக் கூடிய இடங்களையே நீங்கள் பாருங்கள், யார் ஒருவரும் தன்னுடைய சாதனை என்று தனியாக கூறிக் கொள்ள அவர்களுக்குத் தோன்றுவது இல்லை. இதை ஒரு போர்க்களத்தில் நீங்கள் பார்க்கலாம். அல்லது சோசலிச நிர்மாணம் குறித்த கதைகளில் பார்க்கலாம்.

அமைப்பு என்ற இந்த கூட்டுத்துவத்தில் ஒவ்வொரு தனிநபருக்கும், ஒவ்வொரு தோழருக்கும் உள்ள சிறப்பியல்பை, பங்களிப்பை நாம் அங்கீகரிக்க வேண்டும். அந்த சிறப்பியல்பை நாம் ஒவ்வொருவரும் நம்முடைய தாக்கிக்கொள்ள வேண்டும் என்பது தான் இந்த நினைவு கூறலின் பொருள் என்று கருதுகிறேன்.

வாழ்ந்து வாடி உதிர்ந்த இலைகளின் மரபணுக்கள் முளைத்து வருகின்ற புதிய தளிர்களில் இருக்கின்றன. தோழர் சீனிவாசனோ, தோழர் ரங்கநாதனோ (திருவெண்ணெய் நல்லூர் பகுதியில் செயல்பட்டு மறைந்த முதிய தோழர்) புரட்சிக்காக, அமைப்புக்காக, மக்களுக்காக வாழ்ந்து, போராடி, உழைத்து மறைந்த தோழர்கள் தங்களுடைய தடத்தை தங்களுடைய செயல்பாடுகளில், தாங்கள் பழகிய தோழர்களில் விட்டுச் சென்றிருக்கிறார்கள். அவர்களின் பதிவுகள் நம்மீதும் நம்மைச் சுற்றிலும் இருக்கின்றன. அவற்றை கவனமாக போற்றி பாதுகாத்து தன்வயப்படுத்திக் கொள்வோம். வேறு எந்த வகையிலும் இந்த நினைவு கூர்தலை நாம் பொருள் உள்ளதாக ஆக்க இயலாது.

● மருதையன்



# சத்யசாய் அபார்ட்மெண்ட்ஸ்

> **செட்டியார் வீட்டம்மாவுக்கு காது கணீரென்று ஒலித்தது போல பாய்ந்து கொண்டு பேசினார், ''எங்க வீட்ல சொல்வாரு, அந்தப் பக்கமெல்லாம் அடிதடி, வெட்டுக்குத்துன்னு ஏரியாவே கல்ச்சர் ஒரு மாதிரின்னு,'' என்று பேசிக்கொண்டே வந்தவர், சற்று குரலைத் தாழ்த்தி ''வியாசர்பாடின்னா பெரும்பாலும் 'அவங்காளா' கூட இருக்கலாம்!''**

''என்ன சித்ரா? பக்கத்து போர்சன்ல புதுசா குடித்தனம் வந்தவாகிட்ட ரொம்ப நேரம் பேசிண்டிருந்தே! ஏதாச்சும் பிராப்ளமா?''

''இல்ல, இல்ல, தண்ணி இல்லையாம், மோட்டரு போடச் சொன்னாங்க, மெயின்ட்டனன்ஸ் எல்லாம் எவ்வளவு என்னான்னு விசாரிச்சாங்க, நானும் அவங்கள விசாரிச்சுட்டிருந்தேன்.''

''பசங்கள ஸ்கூலுக்கு அனுப்சாச்சு, போரடிக்குதா?'' கேட்டுக்கொண்டே மாலதி வீட்டுக்குள் செட்டியார் வீட்டம்மா நுழைந்தார்.

''காத்தால வேலல்லாம் முடிஞ்சிருத்தா, நீங்க மத்யானம் சமையலுக்கே போயிருப்பேள், நான்தான் தேமேன்னு கதபேசிண்டிருக்கேன்'' என்று செட்டியார் வீட்டம்மாவை ஒரு சிரிப்போடு உள்ளே இழுத்துக் கொண்டு... மாலதி திரும்பவும் விசயத்துக்கு வந்தாள். ''சித்ரா! முன்னாடி எங்க குடி இருந்தாளாம்?''

''வியாசர்பாடியாம்!''

''என்னடி இது விவகாரமான ஏரியாவா இருக்கு!'' கேட்ட மாத்திரத்தில் மாலதி கேலியாகவும், எச்சரிக்கையாகவும் முகக்குறிப்புக் காட்டினாள். வயசு அம்பத்தி நாலு ஆனாலும் செட்டியார் வீட்டம்மாவுக்கு காது கணீரென்று ஒலித்தது போல பாய்ந்து கொண்டு பேசினார், ''எங்க வீட்ல சொல்வாரு, அந்தப் பக்கமெல்லாம் அடிதடி, வெட்டுக்குத்துன்னு ஏரியாவே கல்ச்சர் ஒரு மாதிரின்னு,'' என்று பேசிக்கொண்டே வந்தவர், சற்று குரலைத் தாழ்த்தி ''வியாசர்பாடின்னா பெரும்பாலும் 'அவங்காளா' கூட இருக்கலாம்!''

''என்ன 'இங்கு' வக்கீறீங்க, தெளிவாகத்தான் சொல்லுங்களேன். இங்க யாரு இருக்கா?'' சித்ரா வற்புறுத்த, ''இவ ஒருத்தி, எல்லாத்தையும் புளி போட்டு விளக்கணும், பெரும்பாலும் அங்கெல்லாம் எஸ்.சி. தான் இருப்பாங்க,'' இன்னுங்கூட சித்ரா முழு மனதாக நிறைவு காட்டாதவள் போல பார்க்க, கிசுகிசுத்தவாறு ''அதான்! போதுமா?!''

''ஓ! புரியுது, புரியுது, இந்த காலத்துல பாலாஜி அம்மா, யார்? என்னன்னு? கேக்க முடியாது, அபார்ட்மெண்டல ஹவுஸ் ஓனர் விருப்பம், அவங்க அவங்க வாடகை பாத்து விடுறாங்க, பாரத விலாஸ் மாதிரி அபார்ட்மென்ட் ஆகிடுச்சி.''

''ஏய், பாரதவிலாஸ்ல மல்டி ஸ்டேட் தாண்டி, மல்ட்டி கேஸ்ட் இல்ல; நமக்கென்ன, நாம பாத்து நடந்துண்டா, நரகத்துலயும் பொழைக்கலாம்பா, அதுபோல கரெக்ட்டா வச்சுண்டா, பிரச்சனை இல்ல! 'பாக்கலாம், உடனே தெரியாது இல்லைய, போகப் போக யார்னு தெரிஞ்சிடப்போவுது!''

''ஆமாம், சித்ரா, நீதான் பக்கத்து வீடு. பழக்க வழக்கத்த பாத்தா தெரிஞ்சுடப்போவுது, நான் மேல இருக்கறதால சரியா பாக்க முடியல, ரெண்டு புள்ள போல இருக்கு, கருப்பாதான் தெரியுதுங்க!'' செட்டியார் வீட்டம்மா குத்து மதிப்பாய் பேச மாலதி வெடுக்கென சிரித்து விட்டாள்.

''ஏண்டி! என்னப் பாத்து சிரிக்கிறே. நானும் கருப்பா இருக்கேன்னா! இது வேற கருப்புடி, அவுங்க கருப்பே தனி!''

ஆமாம் என்பதுபோல சித்ராவும் தலையாட்டிக் கொண்டே, ''விடுங்க எல்லாருமே கருப்பாத்தான் இருக்காங்க, அத வச்சி சொல்லிட முடியாது, பிராமின்லயே பிளாக்கும் உண்டு, கூட்டுறவர்கள்ல ஒயிட்டும் உண்டு, பேச்ச பாத்தா டவுட்டாதான் இருக்கு!''




'நேர்காணலுக்கு தயாராகும்' மடிசார் மாமிகள்!

''சித்ராவுக்கு சொல்ல வேண்டியதில்ல, இன்னும் ஒரு வாரத்துல குலம், கோத்திரம், ஜாதகத்தையே புட்டு வச்சிடுவா. பாவம்! மனுஷாள வெறுக்கக் கூடாது, இருந்தாலும் அவா பழக்க வழக்கம் நமக்கு ஒத்துவர்றதுல்ல, இப்ப நாங்க கூடத்தான் நான் பிராமின், இருந்தாலும் நம்ப அபார்ட்மெண்ட்ல யாரும் பேதம் பாக்கல வித்தியாசம் இல்லாம பழகிக்கிறோம், அவங்களும் எடத்துக்கு ஏத்த மாதிரி இருந்தா பரவாயில்ல.''

''ஏன் நாம கெடந்து மண்டைய பிச்சிகிட்டு, சித்ரா விடாம பேச்சுக்கொடு, பேசவுட்டாத்தான் விசயம் வெளியே வரும், நீ பேசி பாரு!'' செட்டியார் வீட்டம்மா முகத்தை சீரியசாக வைத்துக் கொண்டு கீதோபதேசம் செய்தார்.

''அய்யோ, மணி பதினொண்ணு ஆகப் போறது, குளிச்சிட்டு வேலையப் பாக்கனனும், வீட்ல 'டான்னு' கிளம்பிடுவார்!'' மாலதி குறிப்பு காட்ட கலைந்தனர்.

திப்பிலி ரசத்தை உறிஞ்சி ஒரு கனை கனைத்தபடி தெம்புவந்தவன் போல சாய்ராம் மெல்ல மாலதியை விசாரிக்க ஆரம்பித்தான், ''என்ன? புதுசா வந்தவாள பத்தி மேட்டர் ஓடுது போல இருக்கு''!

''ஆமாம்! இதுக்கு முன்னாடி வியாசர்பாடில இருந்தாளாம், சித்ரா சொல்லிண்டிருந்தா''

''சரி, என்ன பொருள்லாம் வந்துச்சு, பாத்தியா?''

''கட்டில், பீரோ... எல்லாம் வந்துச்சு!''

''கட்டில், பீரோ, கல்யாணம் ஆனா எல்லாந்தான் வச்சிருப்பா, இது ஒரு பாய்ண்ட்டா? காஸ்ட்லியா வேற என்ன வந்துச்சுன்னா, அதுக்கு பதிலக் காணோம்!''

''நைட்ல வந்ததால, சரியா கவனிக்கல, ஆளுங்கள பாத்தா 'அவாள் தான்னு' தெரியறது!''

''ஏய்! எவாளாவோ இருக்கட்டும் ஒரு வாஷிங்மெசின், பிரிட்ஜ், எல்.சி.டி. மாதிரி காஸ்ட்லி பொருளா இருந்தா, ஆளு என்ன பேக்ரவுண்டு, ஸ்டேட்டஸ் என்னன்னு தெரியும். மாசம் ஏழாயிரம் வாடகை தர ரெடியா வர்றான்னா ஒண்ணும் ஏப்ப சாப்பையா இருக்க மாட்டா! நீ முந்திண்டு வாய வுட்டு, மொக பொல்லாப்பு பண்ணின்டுறாதே! இப்பல்லாம் எல்லார் தயவும் தேவப்படறது, செட்டியார் வீட்லயும் பக்கத்துல பிள்ள விட்லேயும் சூத்ராளே நம்மகிட்ட விழுந்து விழுந்து தானா வந்து ஹெல்ப் பண்றாள்னா அவா லெவல் அவாளுக்கே தெரியும்! அது போலத்தான் வந்தவாளும், பக்கத்துல அவா வேற மாதிரி பேசினாலும், நீ பேச்சுல எரிச்சல காட்டிடாதே, ஆமாம்.''

''தெரியும், தெரியும், பக்கத்துல இவா மட்டும் என்ன? நமக்கு எல்லாம் ஒண்ணுதான். டீட்டெய்லுக்காக விலாவாரியா பேசிண்டிருந்தேன், யார் யார் கிட்ட எவ்ளோ வச்சுக்கணுமோ அவ்ளோதான் வச்சுக்கணும்னு தெரியாதா? நீங்க பசங்கள மட்டும் கொஞ்சம் ஓவரா பழகிடாம இருக்க சொல்லி வையுங்கோ! என்ன?''

தலையாட்டிக் கொண்டே சாய்ராம் பைக்கை ஸ்டார்ட் செய்ய அது புகையை கக்கியது.

''ராகுலம்மா கொஞ்சம் வாங்களேன்!'' சித்ரா கூப்பிட மாலதி சித்ரா வீட்டுக்குள் விரைந்தாள்.

மெதுவான குரலில் ஆரம்பித்தாள் சித்ரா, ''பக்கத்தில, ஐ.சி.எப்.லவேல செய்யிறாராம். அதான் பக்கமா இருக்குன்னு இங்க குடி வந்திருக்காங்க. சொந்த ஊர் செய்யாறாம். ரெண்டும் பசங்க, ஒருத்தன் செவன்த், ஒருத்தன் சிக்ஸ்த் எஸ்.பி.ஒ.ஏ.வாம்! சி.பி.எஸ்.சி. சிலபஸ்லதான் படிக்கிறாங்க... அவங்களும் டிகிரியாம், ஹஸ் பெண்ட் சென்ட்ரல் கவர்மெண்ட்னால, பசங்கள பாத்துக்க வேலைக்கு போகலயாம்.'' ஒப்பித்தாள். ''இந்த காலத்துல டிகிரின்னா சர்ட்டிபிகேட்டயா வாங்கியா பாக்கப் போறோம்! சொல்றத கேட்டுக்க வேண்டியதுதான், எல்லாம் சரி, என்ன ஆளுங்கண்ணு தெரிஞ்சிச்சா! அத வுட்டுட்டியே!''

''அதுதான் புரிய மாட்டேங்குது! நான் வெஜ்தான்னு தெரியுறது, அவரப் பாத்தா செம கருப்பு, அவளும் மாநிறம்தான். நீங்க வெளில வர்றப்ப, துணி காயப்போடுற மாதிரி பாருங்களேன்,

**''சித்ராவுக்கு சொல்ல வேண்டியதில்ல, இன்னும் ஒரு வாரத்துல குலம், கோத்திரம், ஜாதகத்தையே புட்டு வச்சிடுவா. பாவம்! மனுஷாள வெறுக்கக் கூடாது, இருந்தாலும் அவா பழக்க வழக்கம் நமக்கு ஒத்துவர்றதுல்ல, இப்ப நாங்க கூடத்தான் நான் பிராமின், இருந்தாலும் நம்ப அபார்ட்மெண்ட்ல யாரும் பேதம் பாக்கல வித்தியாசம் இல்லாம பழகிக்கிறோம், அவங்களும் எடத்துக்கு ஏத்த மாதிரி இருந்தா பரவாயில்ல.''**

பேச்செல்லாம் 'அந்த' மாதிரி தான் இருக்கு, ஒரு வேள ரொம்பநாளா மெட்ராஸ்ல இருக்கிறதால சிலபேர் அப்பிடி பேசலாம், யாரு கண்டா? எப்படியும் தெரியத்தான் போவுது!''

''ஏய்! பசங்க உசாரு! நேத்திக்கே அந்த சின்ன பையன்கிட்ட என்னடா சாப்பிட்டேன்னேன்! வாயத் திறக்கணுமே! பதிலே சொல்லாம ஓடிட்டான்!''

''பாவம்!பழக்கம் இல்லேல்ல, புதுசு. அதான் பேச மாட்டேங்கிறான் போல. ஆனா நேரத்துக்கு குக்கர் சத்தம் கேக்குது, பருப்பு வாசன வருது, இது வரைக்கும் நான் வெஜ் வாசன வரல, இனிமே தான் தெரியும், இப்பதான் வந்துருக்காங்க!''

''ஏன்? நான் பிராமின் எல்லாருந் தான் சாப்பிடறேள், அவா வீடு, அவா பாடு! நாம கேக்க முடியாது! எங்க ராகுலுக்கே அத்லட்டிக் பிராக்டிஸ் பண்ணனும்னா முட்டை சாப்பிடனும்னு டாக்டர் சொல்லிட்டா, அவா அப்பா பாயில் பண்ணி தர்றார். உனக்குதான் தெரியுமே, சாப்பிடறத பத்தி இல்ல, இருந்தாலும் ரொம்பவும் அதர் கேஸ்ட்டுன்னா ஆச்சாரமா இருந்துட்டதால ஒத்துக்க மாட்டேங்கறது 'அவா' பழக்க வழக்கம் நமக்கு ஒத்து வராது!''

''நானே, என் பையன ரொம்ப வச்சுக்காதன்னு சொல்லி வச்சிருக்கேன், ஏன்னா புள்ளங்க எதார்த்தமா பழகிட்டா, அப்புறம் வேணாம்னா கேக்காதுங்க, எங்க வீட்ல கூட நீயா போயி பேசாத, தானா கேட்டா பதில் சொல்றதோட வச்சுக்க, அந்தாள பாத்த மொகமே சரியில்லேன்னு சொன்னாரு!''

''ஏய் நாம பாட்டும் பேசிண்டிருக்கோம், பக்கத்துல காதுல விழாதே! அது வேற!'' மாலதி திடீரென சுதாரிக்க ''பக்கத்துல படிக்கட்டு தாண்டிதான சுவரு! கேக்காது, மேலும், புதுசா இருக்கறதால அவுங்க வெளியிலயே வர்றதில்ல, சரி, ரேசன் போனா சொல்லுங்க, நானும் வாரேன்!''

''ரேசன்னோன்னேதான் ஞாபகம் வருது, உனக்குதான் பழக்கம் இருக்கில்ல, புதுசா வந்தவங்களுக்கு அரிசி வேணாம்னா கேளு! நாம வாங்கிக்கலாம், இட்லிக்கு ஆகும்!''

''நீங்க வேற! அவங்க வெள்ள கார்டாம், கேட்டுப் பாத்துட்டேன்...''

''அட! வெள்ள கார்டா, அப்ப பெரிய இடந்தான். ஹ.. ஹிம்'' என்று முனகியவள் திடீரென ஞாபகம் வந்த

**''நீ முந்திண்டு வாய வுட்டு, மொக பொல்லாப்பு பண்ணிண்டுறாதே! இப்பல்லாம் எல்லார் தயவும் தேவப்படறது, செட்டியார் வீட்லயும் பக்கத்துல பிள்ள விட்லேயும் சூத்ராளே நம்மகிட்ட விழுந்து விழுந்து தானா வந்து ஹெல்ப் பண்றாள்னா அவா லெவல் அவாளுக்கே தெரியும்! அது போலத்தான் வந்தவாளும், பக்கத்துல அவா வேற மாதிரி பேசினாலும், நீ பேச்சுல எரிச்சல காட்டிடாதே, ஆமாம்.''**

வள் போல, ''அந்த லேடி பேரு என்ன?''

''அபிராமி'' சடாரென சித்ரா பதில் சொல்ல, ''பேர வச்சி ஒண்ணும் யோசிக்க முடியலயே! ஊம்...'' மாலதி குழப்பத்தோடு நகர, கருப்பும், வெள்ளையுமாக பூனை கட்டை சுவரில் நடந்து வந்தது, அச்சத்தோடு மாலதியை பார்த்து முறைக்க, ''தே... ச்சூ.. இது வேற கெடந்து குறுக்கும் நெருக்கும் அலையறது'' என்று விரட்டிக் கொண்டே போனாள்.

•••

அபிராமி கதவைப் பூட்டி விட்டு வெளிக்கிளம்பவும், மாலதி வாசலில் நிற்கவும் எதேச்சையாய் அமைந்தது. மாலதியைப் பார்த்ததும் அபிராமி விருப்பத்துடன் புன்னைகைத்தாள். பதிலுக்கு, ''என்ன வீடு செட்டில் ஆயிடுத்தா?'' என்று மாலதி கேட்க, மேலிருந்து செட்டியார் வீட்டம்மாவும் இறங்கி வந்து சேர்ந்து கொண்டார்.

''ஊம்... எல்லாம் முடிஞ்சிடுச்சு!'' என்று முகம் பார்த்து பதில் சொன்ன அபிராமியின் கழுத்தையே கவனித்த மாலதி ''செயின் புது டிசைனா இருக்கு, நியு கலெக்சனா?''என்று விசாரிக்க ''தாலி செயின்'' என்று அபிராமி பிடித்து தெரியும்படி தூக்கிக் காட்டினாள்.

''இதென்ன புலிப்பல்லா, புள்ளையார் தாலியா?''

''எங்க வீட்டு தெய்வம் டிசைனு!''

அதற்கு மேல் கேட்கத் தயங்கினாள் மாலதி. ''நேற்று பெருமாள் கோயில் வாசல்ல பாத்தேன், பெருமாள்தான் கும்பிடுவியா?'' செட்டியார் வீட்டம்மா கொக்கி போட்டார்.

''இல்லைங்க, வேம்புலி அம்மன் கோயிலுக்கு போயிட்டு அப்புடியே வர்ற வழியில பெருமாள் கோயிலுக்கும் போயிட்டு வந்தேன்!''

செட்டியார் வூட்டம்மா விடுவதாயில்லை, ''எங்க பால் காய்ச்சிரப்ப கூட அம்மா, அப்பாவ காணோம்!''

''அவங்களால ஊர்லேர்ந்து தனியா வர முடியாது! பிறகு பசங்க லீவுக்கு வருவாங்க!''



பிராமணாள் காபி பார் – பெங்களூருவில்!

''வரட்டுங்களா? வீட்ல இன்னைக்கு நைட் சிப்டு, நான் பசங்களோட ரயில்வே குவார்ட்டர்ஸ்ல இருக்குற தெரிஞ்சவங்க வீட்டுக்கு ஒரு வேலையா போறேன்... நைட்டு வந்துருவேன்... வாரேங்க...'' அபிராமி பொறுப்போடு பேசி விட்டு நகர்ந்தாள்.

வாசல் கேட்டை தாண்டிவிட்டாளா, என உறுதிபடுத்திக் கொண்ட செட்டியார் வீட்டம்மா, ''கேட்டியே, ஒழுங்கா கேட்டியா? எங்க வீட்டு தெய்வம் தாலின்னு சொன்னப்ப என்னா சாமின்னு கேட்டிருந்தா என்ன வகையறான்னு புரிஞ்சிருக்கும்! கேக்காம விட்டுட்டியே!''

''அதையே சுத்தி சுத்தி கேட்டா தப்பா எடுத்துகிட்டா? அதான் நினப்பு வந்தும் வேண்டான்னு விட்டுட்டேன்...'' இருவரும் பேசிக்கொண்டிருக்கும் போதே, புதிதாக குடித்தனம் வந்தவர்கள் போர்சனுக்கு எதிரே உள்ள காம்பவுண்டு சுவரை ஒட்டி ஆராய்ச்சி செய்தபடி நின்றிருந்த சித்ரா, மாலதியை ஜாடை காட்டி அழைக்க இருவரும் ஆர்வத்துடன் நெருங்கினார்கள். ''வாங்க, தோ! பாருங்க புதுசு, புதுசா அபார்ட்மென்ட்ல என்னென்னவோ நடக்குது, பாருங்க புதையல!'' சித்ரா கேலியாக இடத்தைக் காட்ட, மாலதிக்கு விழி அகன்றது.

''அய்யய்யோ! என்னடி இது, பாட்டில், பாட்டிலா கிடக்குது, லேபிள் மினுமினுக்க என்ன தைரியமா போட்ருக்கா! யாரா இருக்கும்?''

''கேள்வி கேக்குறபாரு! இந்த வீட்டுக்கு நேரா கெடக்கு யாரா இருக்கும்னு கேக்குற! குடிக்கிறவங்களுக்கு என்ன பயம் வேண்டி கெடக்கு! போனாளே! அவ வீட்டுக்காரராகத்தான் இருக்கும், புதுசா குடிவந்தா பழக்கத்த விட முடியுமா? இஷ்டத்துக்கு குடிச்சிட்டு இஷ்டத்துக்கு போட்டிருக்காங்க...'' செட்டியார் வீட்டம்மா ஆதாரங்களை அடுக்க ஆரம்பித்தார்.

''வேற யாராவது போட்டிருப்பாங்களா! இங்க உள்ளவரே இப்படி போடுவாரா என்ன? அசிங்கம்னு நெனக்க மாட்டாரா?'' சித்ரா சந்தேகப்பட, மாலதி ஆரம்பித்தாள்,

''அந்தாள கண்ணப் பாத்தாலே தெரியுது, செவ செவன்னு செவந்து கிடக்கறது, கண்ணு, மூஞ்செல்லாம் வீங்கி வடியறது, தெனம் குடி இருக்கும் போல இருக்கு! சந்தேகம் என்னடி! அந்தாளு மூஞ்சியும் கருகருனு மொகமும், முழிக்கறத பாத்தாலே தெரியலையா, மொடா குடிகாரன்னு, ரயில்வே வேற! வண்டி பிராட்கேஜ்ல ஓடுது! நேரம், காலம் கெடையாது, தினம்தான் ராத்திரி கேட்டு திறக்குற சத்தம் கேக்குதே! பாத்துகிட்டுதான இருக்கேன்! ராத்திரி குடிச்சிட்டு சத்தம் போடாம போட்டுடுவார் போல...'' செட்டியார் வீட்டம்மா விவர மழை பொழிந்தார்.

**''அந்தாள கண்ணப் பாத்தாலே தெரியுது, செவ செவன்னு செவந்து கிடக்கறது, கண்ணு, மூஞ்செல்லாம் வீங்கி வடியறது, தெனம் குடி இருக்கும் போல இருக்கு! சந்தேகம் என்னடி! அந்தாளு மூஞ்சியும் கருகருனு மொகமும், முழிக்கறத பாத்தாலே தெரியலையா, மொடா குடிகாரன்னு, ரயில்வே வேற!''**

''சைலண்ட்டா அவுரு போறது வர்றதப் பாத்தா சொல்லவும் முடியல, நம்பாம இருக்கவும் முடியல, அவங்க அவங்க விருப்பம், டஸ்ட் பின்ல போட்டா தெரியப் போறதில்ல, பசங்க இருக்குற இடம், யாரு சொல்றது? ஒரு நாள் கவனிச்சிட்டு சொல்லிட வேண்டியது தான்!'' சித்ரா புலம்பிக் கொண்டாள்.

''கலகலன்னு பேசிடறவாள நம்பிடலாம், சைலண்ட்தான் டேஞ்சரே! அவா கல்ச்சர மாத்த முடியாது! கைல காசும் வந்துடுச்சு! அவா இஷ்டத்தக்கு எல்லாம் செய்வா! யாரு கேக்கறது? சொன்னா நமக்கு பொல்லாப்பு''

''அதுக்காக அபார்மென்ட்ல படிக்குற பசங்கல பாத்து கெடட்டுங்கிறியா? அவங்களுக்கு நாகரிகம் கெடையாது. நாம பொது இடத்துல எப்படி இருக்கனும்னு சொல்லித்தான் ஆகணும், இன்னொரு முறை பாத்தா நானே அந்த பொண்ணுக்கிட்ட சொல்றேன்.நாம ஏன் பயப்படனும், இத இப்படியே விட்டா, நாளைக்கு வேற விசயத்துக்கு துணிச்சல் குடுத்துடும்'' - செட்டியார் வீட்டம்மா இருவருக்கும் தெம்பு கொடுத்தார். ''வாடகை வருதுன்னு கண்டதுங்களையும் வுட்டா இப்படித்தான்...'' மூவரும் முனகிக் கொண்டே நகர்ந்தனர்.

பேசிவிட்டு பெண்கள் வீட்டுற்குள் நுழைந்தவுடன், மெல்ல வெளியே வந்த சித்ராவின் கணவன் ஒரு நேரம் பார்த்து தலையைக் காட்டிய சாய்ராமை கண்ணால் குறிப்பு காட்டி அழைக்க, '' அப்புறம் ரகு அந்த பிளம்பர வரச் சொன்னியே என்னாச்சு?'' என்று பேசிக் கொண்டே முதுகில் நெளிந்த பூணூலை மேலும், கீழும் ஆட்டியபடி அபார்ட்மெண்டின் பின் பக்கம் நகர்ந்தான்.

''சாயி, நல்ல வேல பண்ண நீ! பாட்டில இங்கயா போடுவ, மாடிலேந்து விட்டெறிந்தா கூட உடைஞ்சிருக்கும், முழு பாட்டிலையும் எல்லோரும் பாக்குற மாதிரி ஏன் இங்க போட்ட?..''

''அட! நான் மேலேந்துதான் போட்டேன், செத்தை கிடந்ததால உடையாம மாட்டிக்கிச்சு... நல்ல நேரம் புதுசா குடி வந்தவன் வேற ஆளா போனதால, அவன் தலயில விடிஞ்சிருச்சு, இல்ல நம்ம மேல சந்தேகம் வந்திருக்கும்! தப்பிச்சோம் போ! வீட்ல பேசினாலும்... அவங்க பாணியிலயே போ... அது சரி! போட்டது தான் போட்ட, எதுக்கு புதுசா குடிவந்தவன் வாசல்ல போட்ட?'' ரகு வியப்பாய் கேட்க,

''பின்ன, நம்ப வீட்டுக்கு நேரா போடச் சொல்றியா! ஃபுல் அடிச்சும் நம்ப புத்தி மாறல பாத்தியா! அதான் விவரம்ங்கறது.''


''சரி, சரி இதையே பேசாதே. வேற ஏதாவது பேசு.... ''குரலை தாழ்த்தி சாய்ராம் வழிகாட்டினான்.

''பெரிய ஆளுப்பா, நீ!..''.

ரகுவும், சாய்ராமும் வெடித்துச் சிரிக்க நாக்கை நீட்டிக் கொண்டு காம்பவுன்ட் சுவரில் ஏறிய அரணை, பேச்சையும், சிரிப்பையும் பார்த்து பயந்து நடுங்கியது போல வெடுக்கென ஓடியது.

• துரை சண்முகம்

2-ம் பக்கத் தொடர்ச்சி...



ஈழம் வாங்குவதாய்
தேர்தல் அணிகள் சேரும்.
மாவீரர்களே...
முதலில்
முகாமிலிருந்து எங்களை மீட்க
முடியுமா உங்களால்?

சனத்தோடு சேர்ந்து வாழ
சம்மதிக்காத
உங்கள் சட்டங்களால்
இனத்தை மீட்கப் போவதாய்
இன்னுமா கழுத்தறுப்பது?
எங்கள் முழு நிலத்தையும்
பங்கு போட
அங்கு சேர்ந்து கொள்ளும்
முதலாளிகள்...

இங்கே
கணவன், மனைவி, பிள்ளைகளும்
கலந்து வாழ மறுக்கும்
முள்வேலி முகாம்கள்...
எங்கள் உரிமை நிலத்தில்
எம்.ஆர்.எஃப், டி.வி.எஸ் டயரின்
வக்கிரப்பதிவுகள்..
சகலத்தையும் பிடுங்கிக்கொண்டு
சந்தேகக் கேசுகளாய்
எஞ்சியிருக்கும் எங்களிடம்
கைரேகைப்பதிவுகள்...
எங்கள் மூச்சுக்காற்றில்
உங்கள் ரிலையன்ஸ்,
ஏர்டெல்லின் ஆக்கிரமிப்புகள்...

இங்கே முள்வேலிக்குள்
நாங்கள் மூச்சு விடவும்
விதிமுறைகள்!
எம் வயல்வெளிக் காற்றின்
வாசம் இழந்து...
பனை மர நிழலின்
பாசம் இழந்து...

கண்காணாத தூரத்தில்
எங்கள் காந்தள் மலரின்
நிறமிழந்து...
புல் இழந்து... பூ இழந்து
புழங்கும் உறவுகளின்
சொல் இழந்து...
கல் என இறுகிய
இதயம் சூழவோ
கடைசியில் இங்கு வந்தோம்!

முள்வேலி மேல்
காய்ந்து துடிப்பது பழந்துணியல்ல,
கந்தலான
எங்கள் இதயம்.
உழைக்கும் உறவுகளே...
ரத்தத்தின் நிறம் மட்டுமல்ல
நம் வர்க்கத்தின் நிறமும்
சிவப்புதான்
புலமிழந்து... நிலமிழந்து
வளமிழந்தது
ஈழ அகதிகள் மட்டுமா?

உலகமயத்தின்
கொத்துக்குண்டுகளால்...
புலமிழந்து நீங்களும் கூட
அகதிகளாக தேசமெங்கும்.
நாட்டை முன்னேற்றுவதாய்
நடக்கும் போரில்
நிலங்களை இழந்து
ஏதிலிகளாய்...
அடைபட்டுக் கிடப்பது
நாம் அனைவரும் தான்.

வன்பறிப்புக்குள்ளான
வன்னி நிலமும்...
அன்னியக் கம்பெனியால்
ஆக்கிரமிக்கப்பட்ட
சென்னை நிலமும்...
வடிவத்தில் வேறு...
வர்க்கத்தில் ஒன்று!
பேரினவாதத்தால் பறிக்கப்பட்ட
எம் பிள்ளைகள் கல்வியும்,
தனியார்மயத்தால்
பறிக்கப்பட்ட
உங்கள் பிள்ளைகள் கல்வியும்,
பாடத்திட்டத்தால் வேறு
பறிக்கப்பட்டதில் ஒன்று!

ராணுவத்தால் குதறப்படும்
எம் பெண்களின் தசையும்,
மூலதனத்தால் கழிக்கப்படும்
உங்கள் பெண்களின் தசையும்,
கருவிகளால் வேறு,
ஒடுக்கம் வர்க்கத்தால் ஒன்று.

எத்தனையோ பேச
எங்களுக்கும் ஆசை...
இடையில்
முள்வேலி முறிந்தால்
இணையலாம்
வர்க்கமாய்ப் பேச!

• துரை. சண்முகம்

ஆசிரியரும் வெளியிடுபவரும்: வி. வல்லபேசன், 3, செகந்நாதபுரம், நான்காவது தெரு, சேத்துப்பட்டு, சென்னை - 600 031.
அச்சிடுபவர்: எழில் பிரிண்ட்ஸ், 110, இரண்டாவது மாடி, 63, ஆற்காடு சாலை, சென்னை - 600 024.
புதிய கலாச்சாரத்தில் வெளியாகும் படைப்புக்கள் அனைத்தும் சமுதாயத்தில் காணப்படும் உண்மைகளே!

PUTHIYA KALACHARAM
(Tamil Monthly)
REGISTERED WITH THE REGISTRAR OF
NEWSPAPERS FOR INDIA UNDER No: 42647/87
Regd. No: TN / CCN / 434 / 09-11

# இழப்பு

— துரை.சண்முகம்



காலிக்குடங்களில்
நிரம்ப வழிகின்றன
பழங்கதைகள்...

சிறுமீன் உலவும்
ஆற்றின் கரையோரம்
செவுள்கள் உமிழும்
குமிழிகள் விலக்கி,
சில்லிடும் காற்றில்
மேல்நீர் துலக்கி
ஒரு கை அள்ளிப் பருகி,
குடத்தின் வாயில்
ஆற்றை அடக்கித் தூக்கிடும்
பெண் இழுத்திடும் மூச்சில்
நெத்திலி சிதறி ஓடும்.

கருவறையிலும்
தெரு வரையிலும்
நீர்க்குடம் சுமப்பது
நீங்காத பெண்கள்,
காலந்தோறும்
தண்ணீர்க்குடம் சுமந்தே
காய்த்தனர் இடுப்பெலும்பு.

நல்ல தண்ணீருக்காக
பெண்கள் பட்ட பாட்டை
நன்றியுடன் நினைப்பது போல்
தானூறும் நீர்நிலைகள்.
ஆறு கரையொதுக்கும்
நினைவலைகள்.

வண்ணார் அடித்துத் துவைக்கும்
ஆற்றுக்கல்லில் எழும் ஓசை
அக்கரையில் எதிரொலித்து
மேகம் வெளுக்கும்.
அழுக்குத் துணிகளின் அலறல்களில்
ஊரின் சாயம் போகும்.

குடிக்கும் நீரை
முத்தமிட்டுக் கொஞ்சுதல் போல்
பசுவின் வாய்
தண்ணீர் தழுவும்.

ஓடும் நீர் மடியுரச
பாலொடு சேர்த்து
பல்லுணர்ச்சி சுரக்கும்.
நீர்த் திவலைகள் மேல்
மென்கால் உரசி நின்று
நாரைகள் முகம் நனைக்கும்.

கரையோரம் காதலாய்க்
கவிழ்ந்த புன்னை
தன் நிழலாலும்
நீர் பருகும்.

அடிசுடும் நாளிலும்
கோடைனத் திரியும்
ஆற்றின் தெளிநீரில்
களைத்த சூரியன் இளைப்பாறும்.

முழுமுகம் பார்க்க
முயற்சித்து முயற்சித்து,
பொடிமணல் அகழ்ந்து
பெண்கள் தோண்டிய ஊற்றில்
நிலவு ஊறித் திளைக்கும்.

தண்ணீரைத் தாராளமாய்ப்
பங்கிட்டுக் கொண்ட
இயற்கையின் மெய்ப்பொருள் தொலைந்து
தலைமுறைத் தாகம் தீர்த்த
எங்கள் ஆறு
இப்போது வேலிக்கருவை முள்ளில்
செத்துக் கிடக்குது.

காரணமறியா அதன் தலை மேல்
நாடு வல்லரசாகும் திட்டத்தின் கீழ்
வனப்போடு போடப்பட்ட பாலத்தில்
அதோ... கேன்.... கேனாய்...
பெப்சி, அஃவாபினா வண்டி ஓடுது!